# ஹரிதாஸினி ஹொளவனகட்டெ கிரியம்மா அவர்களின் தீர்க்க க்ருதிகள் - பாகம் 2

**வெளியிடுவோர்**

'ஜகன்னாத கேசவ' சத்ய நாராயணன்
ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross,
JP Nagar 4th Phase, Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

# ஹரிதாஸினி ஹொளவனகட்டெ கிரியம்மா அவர்களின் தீர்க்க க்ருதிகள் - பாகம் 2

ஸ்ரீஹரிவாயுகுருகளின் ஆசியுடன், விஸ்வாவஸு சைத்ர சுத்த நவமி - ஸ்ரீராம நவமி மற்றும் ஸ்ரீதந்தெமுத்துமோகனதாஸரின் ஆராதனை நாளான 06.04.2025 அன்று இந்தப் புத்தகம் வெளியிடப்பட்டது.

**வெளியிடுவோர்**

ஜகன்னாத கேசவ பப்ளிகேஷன்ஸ்
380, 2A Main, 16th Cross, JP Nagar 4th Phase
Bengaluru : 560078
https://jagannathakesava.blogspot.com
httis://dasa-sahitya.blogspot.com
Ph: 8904458276. haridasa.vijayam@gmail.com

**இந்தப் புத்தகத்தை வெளியிட பொருளுதவி செய்த அனைத்து ஹரிபக்தர்களுக்கும் நன்றி!!**

**|| ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து ||**

## பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| 1 | ஹரிதாஸினி ஹொளவனகட்டெ கிரியம்மா - வாழ்க்கை சரிதம் | 3 |
| 2 | சந்த்ரஹாஸனின் கதை | 11 |
| 3 | லவ குஷர ஹாடு | 119 |

## ஹரிதாஸினி ஹொளவனகட்டே கிரியம்மா (1712 - 1790)

ரங்கனாத பதாஸக்தம் ரங்கனாதஸ்ய கிங்கரீ |
கிரியம்மாபிதம் வந்தே ஞான வைராக்யஸித்தயே ||

ரங்கனாத தேவன கிங்கரி ரங்கனாத பாதாஸக்தே |
அங்கனெ தன்ன ஹ்ருதாயாங்கனதி ரங்கன காணுவ பக்தெ |
அங்களதி சித்ரிஸுவ ரங்கோலியலி அனுரக்தெ |
ஹிங்கதெ பக்தர பங்ககள நிவாரிஸுவ ஸஷக்தெ |
பங்கார ஷ்ருங்கார ஸம்ஸார போகதலி விரக்தெ |
மங்களாங்க ஹரிவிட்டலன பக்தர ஸங்க ஸம்யுக்தெ |
துங்கெ உத்துங்கெ ஸாத்வி கிரியம்ம ஜீவன்முக்தெ ||

ஹொளவன கட்டெ கிரியம்ம, பீஷ்மப்ப ஜோயிஸரின் மகள். அவளின் தாயைப் பற்றியும், அவரின் பிறந்த தேதி மற்றும் வாழ்க்கை ஆகிய எந்த விஷயத்தைப் பற்றியும் விஷயங்கள் சரியாக கிடைக்கவில்லை என்றாலும், அவரின் பாடல்கள் மூலமாகவே ஆராய்ச்சியாளர்கள் அவரின் வாழ்க்கை சம்பவங்களை தொகுத்திருக்கிறார்கள்.

கிரியம்மா பிறந்த ஊர் ராணே பென்னூர். சிறிய வயதிலேயே அவரின் பெற்றோர் இறந்துவிட, அவர் தன் சித்தப்பா-சித்தியிடம் வளர்ந்தார். ஆனால், அவரின் தந்தை இறப்பதற்கு முன்னரே, கிரியம்மா அவரிடமிருந்து தேவையான வித்யை கற்றிருந்தார். அப்போதே அவரிடம் கவிதாசக்தி வெளிப்பட்டிருந்தது. அந்த கால வழக்கப்படி, 10-12 வயதிலேயே திருமணம் நடைபெறுவதால், மலெபென்னூரின் திப்பரஸனுடன் கிரியம்மாவுக்கு திருமணம் நடைபெற்றது. ஆனால், இவருக்கு சம்சாரத்தில் விருப்பமே இருந்திருக்கவில்லை.

அவர்களின் முதல் இரவில், திப்பரஸனுக்கு கிரியம்மாவின் இடத்தில் அவருக்கு பதிலாக ஒரு பெரிய சர்ப்பம் தெரிந்தது என்றும், அன்றிலிருந்து அவர் மேல் மிகப்பெரிய கௌரவம் வந்தது என்றும் சொல்கின்றனர். வைராக்கியம் வந்துவிட்டது என்று கிரியம்மா சம்சாரத்தை விடவில்லை. அத்தை, மாமா, கணவன் என அனைவரின் சேவையை செய்து கொண்டே இருந்தார். அத்தை மாமாவிடம் கூறி, தன் கணவனுக்கு இரண்டாம் திருமணத்தை செய்து வைத்தார். தான் விராகிணியாகவே (வைராக்கியசாலி) இருந்தார்.

வீட்டு வேலைகளை செய்தவாறு, அத்தை மாமாவிற்கு சேவை செய்தவாறு காலத்தை கழித்தார். அக்கம் பக்கத்து வீட்டு குழந்தைகள், சிறுவர் சிறுமிகளின் காய்ச்சல், சளி, இருமல்களுக்கு மருந்து கொடுத்து, அவற்றை தீர்த்து, சமூகத்திற்கு பயனாக இருந்தார். துக்க கஷ்டங்களுக்காக கஷ்டப்படுபவர்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருந்து, அனைவராலும் 'அம்மனவரு' என்று அன்புடன் அழைக்கப்பட்டார்.

நீர் கொண்டு வரவும், துணி துவைக்கவும் கிரியம்மா ஏரிக்கரைக்கு வரும் வழக்கம் கொண்டிருந்தார். அங்கு அருகில் ரங்கநாதனின் ஆலயம் ஒன்று இருந்தது. அங்கு ஒரு மாற்றுத் திறனாளி (ஹொளவ) வசித்துக் கொண்டிருந்தானாம். அவனே அந்த ஏரியைக் கட்டி, ரங்கநாதனின் ஆலயத்தையும் நிர்மாணம் செய்தானாம். ஆகவே அது 'ஹொளவன கட்டெ ரங்கநாத' என்றே பெயர் பெற்றது. ரங்கநாதனின் தரிசனத்திற்கு வந்தபோது, ஆலயத்தின் அக்கம்பக்கத்தில் சுத்தம் செய்வது, பெருக்கி பற்பல அழகான கோலங்களைப் போடுவது ஆகியவற்றை தன் வழக்கமாக ஆக்கிக்கொண்டார் கிரியம்மா.

அங்கேயே பூ கட்டுவது, பூஜிப்பது, பஜனை செய்வது ஆகியவற்றிலேயே கிரியம்மா மெய்மறந்தார். அதே 'ஹொளவன கட்டே ரங்கநாதனின்' அங்கிதத்தால் பல்வேறு கீர்த்தனைகளை இயற்றி பாடிக்கொண்டிருந்தார். இவளை 'தென்னிந்திய மீரா' 'ராதிகெ' என்றெல்லாம் மக்கள் புகழ்ந்தனர். தெய்வாம்சம் கொண்டவள் என்று அனைவரும் மரியாதை செலுத்தி வந்தனர். பால் கறக்கும்போது, தயிர் கடையும்போதெல்லாம் கிரியம்மாவிற்கு பாலகிருஷ்ணன் தரிசனம் கொடுத்து வந்தானாம். அவளுடன் விளையாடி வந்தானாம்.
கிரியம்மா தொட்டு ஆசிர்வதித்த குழந்தைகள், தீர்க்க ஆயுளைப் பெறுகிறார்கள் என்னும் நம்பிக்கை அங்கு சுற்றுமுற்றும் இருந்த மக்களுக்கு இருந்தது. ராணி சென்னூரில் கிரியம்மா குழந்தைகளை, படுக்க வைத்து

குளிப்பாட்டிய குளியலறை இன்றைக்கும்கூட அப்படியே பாதுகாக்கப்பட்டு வருகிறது. தம் குழந்தைகளை அந்த அறையில் குளிப்பாட்டினால் அவர்களின் பீடை பரிகாரம் ஆகிறது என்னும் நம்பிக்கை இன்றைக்கும்கூட அந்த ஊர் மக்களிடையே இருக்கிறதாம்.

மங்களூரின் அரசகுமாரனுக்கு கண் தெரியாமல் இருந்தது. ரங்கநாத ஸ்வாமிக்கு செய்த ஆரத்தியின் மை எடுத்து, அந்த அரசகுமாரனின் கண்ணிற்கு கிரியம்மா தினமும் தடவிக்கொண்டு இருந்தாராம். உடன் இவ்வாறு பிரார்த்தனையும் செய்தாராம்.

தோரபா³ரதெ³ நிம்ம சரிதெயனு
நரரொளு நகெ³கீ³டு³ மாட³த³ ஹாகெ³
நீனெக³தியெந்து³ ப³ந்த³ ப⁴க்த கண்ணுக³ள தித்தி நிஜவ தோரிஸய்யா ।
தீ³னத³யாளு ஹொளவன கட்டெ ரங்க³ய்யா
தா³னி என்னொடெ³ய தொ³ட்டவனெந்து³ ஹொக³ளுவெ ।।

இவ்வாறு சுமார் 15 நாட்கள் செய்த பிறகு, அந்த அரசகுமாரனின் கண் கோளாறு சரியாகி, கண் சரியாக தெரிய வந்தது.

இன்னொரு இடத்தில், மழையே இல்லாமல் வறட்சி நிலவிக் கொண்டிருந்தது. அப்போது ஊர் பெரியவர்கள் அனைவரும் கிரியம்மாவிடம் முறையிட்டனர். அவரும் அத்யந்த பக்தியுடன் இவ்வாறு பிரார்த்தனை செய்தார்.

மளெய த³ய மாடோ ரங்க³ய்ய நிம்ம
கருண தப்பித³ரெ உளியதீ³ லோக ।।

பஶு ஜாதி ஹுல்லெ ஸாரங்க³ ம்ருக³க³ளு ப³ஹள
ஹஸிது பா³யாரி பத்தித³ கெரெகெ³ ப³ந்து³
த்³ருʼயட³க³தெ³ தல்லணிஸி மூர்ச்செகொண்டு³
தெ³ஸெதெ³ஸெகெ³ பா³யி பி³டுதிஹவய்ய ஹரியெ ।।

த⁴ரெயாகி³ த்ரவகுந்தி³ இருவ பா⁴விய நீர
மொகெ³ மொகெ³து³ பாத்ரெயலி நாரியரு
ஹக³லெல்ல தருதிஹரு யோசனெய மாடு³த்த
பேக³தி³ந்த³லி தரிஸு வ்ருஷ்டியனு ஹரிய ।।

ஸந்து³ஹோத³வு ஜ்யேஷ்ட, ஆஷாட, ஸ்ராவண
ப³ந்தி³தெ³ பா⁴த்ரபத³ மாஸவீக³ இந்து³
புரந்த³ரெகெ³ ஹோளி வ்ருஷ்டிய தரிஸோ
ஸந்தே³ஹவ்யாகெ³ ஹொளவன கட்டெ ரங்க³ ।।

பிறகு, மழை பொழிந்து, ஏரி, கண்மாய்கள் அனைத்தும் நிரம்பி வழிந்தன என்பது வரலாறு.

இன்னொரு முறை, ஸ்வாமி ரங்கநாதனின், தங்க மோதிரம் தொலைந்து போயிற்று. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் கவலையுடன் இருக்க, கிரியம்மா ‘ஹொன்னுதா குப்பி ஹொன்னு தா’ என்று பிரார்த்தித்து அனன்ய பக்தியுடன் தசாவதாரங்களை வணங்கினார். இறுதியில் ஒரு குப்பி (குருவி), அந்த மோதிரத்தை கடித்துக்கொண்டு வந்து அனைவரின் முன்னிலையிலும் கீழே போட்டதாம். ‘குப்பி’ என்றால் பிராணதேவர் என்றும் அர்த்தம் இருக்கிறது என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

இவ்வாறாக கிரியம்மாவின் மகிமைகளைக் கேட்ட ஆங்கிலேய சர்தார் ஒருவர் வந்து அவரின் தரிசனம் செய்து, அவரின் வீட்டிற்கு (மனெதன) ‘ஷ்யானபோக’ என்னும் பட்டத்தைக் கொடுத்தார். பல காணிக்கைகளை / பரிசுகளைக் கொடுத்தார்.

தனது கடைசி நாட்களில், கிரியம்மா, குக்னூரு, பிள்ளங்கேரி, மைலார, கோகர்ண ஆகிய க்ஷேத்திரங்களுக்கு சென்றிருந்தார். ஒரு நாள் 'கும்பளூரு வழியாக ஹொன்னாளி அருகில் இருக்கும் கம்மாரகட்டெக்கு செல்' என்று அவருக்கு கனவு வந்தது. அதன்படி, கம்மாரகட்டெக்குச் சென்று மாருதிக்கு ஒரு கோயிலும், துங்கபத்ரா நதிக்கரையில் குளிப்பதற்கு படிக்கட்டுகளையும் கட்டினார். அதே இடத்தில் சிராவண சுத்த பஞ்சமி (நாக பஞ்சமி) அன்று, துங்கபத்ரா நதியில் நீந்திச் சென்றுவிட்டார் என்று நம்பிக்கை. ஆகவே, அன்றைய நாளே கிரியம்மாவின் ஆராதனை நடைபெறுகிறது.

அவரின் இஷ்ட தெய்வமான ரங்கநாத ஸ்வாமியின் கோயிலின் பகுதியிலேயே கிரியம்மாவிற்கும் ஒரு கோயில் கட்டி, அவரின் மூர்த்தியை வைத்து பூஜித்து வருவது, அவரின் மகிமையை காட்டுகிறது. மற்றும் மக்கள் அவர் மேல் வைத்திருக்கும் மதிப்பின் சாட்சியாக அந்தக் கோயில் இன்றைக்கும் இருக்கிறது.

கிரியம்மா தேவ-தேவியரின் மேல் பற்பல தேவர நாமாக்களை இயற்றியிருக்கிறார். எவ்வளவோ பாடல்கள், வாய்மொழியாகவே பரவி புகழ் பெற்றிருக்கின்றன. ஆனால் இன்று அவருடையது என்று சொல்லப்படும் [41] சிறிய பாடல்கள், ஐந்தாறு தீர்க்க க்ருதிகள் மட்டுமே கிடைக்கின்றன.

ஹொளவன கட்டெ ரங்கநாதனைக் கண்டு முதன்முதலில் இயற்றப்பட்ட பாடல் 'கண்டெனீக ரங்கநாதன காருண்யநிதிய' என்று சொல்வதுண்டு. இதில் 'உரகஷயன உதாரி நின்ன மொரெய ஹொக்கெ காயோ' என்று பிரார்த்தனை செய்திருக்கிறார். அந்தரங்க நிவேதனையைக் கூறும் இவரது அனேக தேவர நாமாக்கள் இருக்கின்றன. சில தேவர நாமாக்களில் ரங்கநாத ஸ்வாமியின் மகிமைகளை வர்ணித்திருக்கிறார். தசாவதாரம், ராமாயணம், மகாபாரதம் ஆகிய புராண கதைகளை பாடல்களாக இயற்றியிருக்கிறார் கிரியம்மா.

இவரின் கிருதிகளில் பஞ்சபாவங்களைக் காணலாம்.

கடெ³கண்ணலி நீ நோட³தி³ரென்னய்ய பி³ட³பே³ட³வோ கைய
தந்தெ³ அடி³ய ஹொந்தி³தெ³னோ இந்து³ ஹொளவன கட்டெ ரங்க³
ஆனந்த³ப³டி³ஸோ ராமலிங்க³ ஹொந்தி³தே³னு நின்ன சரண
ஆகிய கீர்த்தனைகளில் ஆத்ம நிவேதனையுடன் ஷாந்த பாவமும் கூடி வந்திருக்கிறது.

கரெத³ளு தன்ன மக³ன யஶோதெ³ - என்னும் கிருதி வாத்ஸல்ய பாவத்தைக் கொண்டிருக்கிறது.

தோரபா³ரதெ³ நின்ன சரிதெயனு
நரரொளு நகெ³கீ³டு³ மாட³த³ ஹாகெ³
கல்லொளு காந்தெய மாடி³த³வனெம்ப³ரு
அல்லி மாடி³த³ ஹாகெ³ இல்லி ஸாரித³ரெ
ப³ல்லியத³னென்னொடெ³ய தொ³ட்³ட³வனெந்து³ ஸாருவெ

என்று ஸக்ய பாவத்தில் பாடியிருக்கிறார்.

வெங்கடேஶ என்ன ஸலஹல்யாகெ ப³ளுவி
க³ஜேந்தி³ர த்³ருவரன்னு ஸலஹித³ந்தெ நன்னன்னு ஸலஹு

என்று ஸக்ய பாவத்தினால் கேட்டுக் கொள்கிறார்.

சந்த³தி³ கொளலூதி³ பாடு³வ நம்ம
கந்த³ர்ப்ப ஜலக³ரீடெ³யாடு³த நந்த³னந்த³ன
கோ³விந்த³ன காணதெ³ ஒந்து³ நிமிஶ
யுக³வாகி³ தோருத்தலிதெ³
தாரம்ம ஸ்ரீரங்க³தா⁴மன தந்து³ தோரம்மா
கரெ தாரே, ஸைரிஸலாரே
என்று இனிமையுடன் பாடுகிறார்.

பா[3]ரன்யாதகெ நீரே நீ கரெதாரெ
ஸூகு[3]ண க[3]ம்பீ[4]ரன - என்னும் கிருதியில் விரகத்தைக் காட்டிப் பாடுகிறார்.

பது[3]மனாப[4]னே நின்ன பாத[3] கிங்கர நானு - என்று நீ தலைவன். நான் தாஸி என்று தாஸ்ய பாவத்தைக் காட்டுகிறார்.

தம் பிறந்த வீட்டு தெய்வமான மைலார லிங்கனை வணங்கியிருக்கிறார். 'ஈத ரங்கனாத ஹரியு ஆத லிங்கனாத ஹரியு' . ஈக லிங்க தேவ சிவனு, ஆத ரங்கதாம விஷ்ணு - என்று ஹரிஹரனைக் கொண்டாடியிருக்கிறார். அப்படியே, நீலகிரி லிங்கனையும் வணங்கியிருக்கிறார்.

மலெபென்னூரின் ஏகனாதேஷ்வரனையும், பார்வதிதேவி என்று சிந்தித்து வணங்கியிருக்கிறார்.

கிரியம்மா அவர்கள் தாம் தரிசித்த க்ஷேத்திரங்களையும் அந்த க்ஷேத்திர மூர்த்திகளையும் வணங்கியிருக்கிறார். குக்கனூரின் ஹனுமந்த, பில்லங்கேரியின் ரங்கனாத, குப்தகாமியான கிருஷ்ணவேணி நதி தேவதையையும், ராணெபென்னூரில் பயலாஞ்சனேயரையும், முத்தேனஹள்ளியின் ஹனுமனையும் போற்றியிருக்கிறார்.

யாதகெ மருளாதி ஹிங்கே ஏலே மானவ காகு புத்திய பிடு பிடு ஆஸெயெம்புது பிடது ஈ புவனதொள் - என்று உலக மக்களை எச்சரிக்கிறார்.

பாகவதத்தில் வரும் அஜாமிளனின் கதையை 15 நுடிகளிலும், பாரிஜாத மரத்தைக் கொண்டு வந்த கதையை [1]8 நுடிகளிலும் கிரியம்மா பாடியிருக்கிறார்.

இந்த இரு பாடல்களும் தீர்க்ககிருதிகள் எனப்பட்டாலும், இவற்றை விடவும் தீர்க்கமான 448 நுடிகளில் உத்தாளிகனின் கதை, 62 நுடிகளில் ஷங்கர கண்டன ஹாடு, 87 நுடிகளில் ஸீதா கல்யாண மற்றும் நான்கு சந்திகளில் சந்திரஹாஸனின் கதை ஆகியவற்றை இயற்றியிருக்கிறார் கிரியம்மா. இந்த சந்திரஹாஸனின் கிருதி ஒரு கண்ட காவ்ய (சிறு காவியம்). பாரிஜாத காவ்ய என்பது ஸ்லோக மற்றும் பதங்களில் இயற்றப்பட்ட வ்ருத்த நாமா வகையைச் சேர்ந்ததாகும். ஆனால் இதற்கு பல்லவி இல்லை.

வசன மற்றும் பாடல்களைக் கொண்டிருக்கும் பிரம்ம கொரவஞ்சி பாடலும் ஒரு தீர்க்க கிருதி எனப்படுகிறது. கிருஷ்ண கொரவஞ்சி மற்றும் லவ-குஷரின் பாடல் முழுமையடையாமல் இருக்கிறது.

கிரியம்மாவிற்கு மக்கள் மேல் இருந்த பாசம், ஞான பக்தி, வைராக்யத்தைக் கண்டு பொறாமை கொண்டவர்களும் இருந்தார்களாம். இந்த பெண்மணிக்கு என்ன அபரோக்ஷ ஞானம் என்று கேலி பேசினார்களாம். கிரியம்மாவின் சொந்த ஓர்ப்படிகளே (கணவரின் சகோதரர்களின் மனைவிகளே) இவரை வெறுப்புடன் பார்த்து வந்தனராம். தேவையில்லாத பொல்லாப்புகளை இவர் மேல் சுமத்தினார்களாம். இதன் காரணங்களால், ஒரு சமயம், ஊர் பெரியவர்கள் எனப்பட்டவர்கள் இவருக்கு பஹிஷ்காரம் (ஊரிலிருந்து விலக்கி வைத்தல்) கூட செய்தார்களாம்.

ஸ்ரீராகவேந்திர மடத்தின் அன்றைய பீடாதிபதிகளாக இருந்த ஸ்ரீசுமதீந்திர தீர்த்தர், மனெபென்னூருக்கு வந்தபோது, பூஜை முடிந்தாலும், கிரியம்மாவைக் காணாத ஸ்ரீபாதங்களவர், அவரை தாமே அழைத்தார். கிரியம்மாவிற்கு தீர்த்தம் கொடுக்கும்போது அவரின் உள்ளங்கையைப் பார்த்து, 'இது ஸ்ரீகிருஷ்ணன் தாங்கிப் பிடித்த யசோதாதேவியின் கை' என்று புகழ்ந்தார்.

இதே ஊருக்கு ஒரு முறை ஸ்ரீகோபால்தாசர் தம் சஞ்சாரத்தில் வந்தபோது, கிரியம்மா பக்தியுடன் வரைந்திருந்த ரங்கோலியின் மேல் தன் தேவர பெட்டியை வைத்து பூஜித்தார். அவரின் பக்திக்கு மெச்சி, கோபாலகிருஷ்ணனின் விக்ரகத்தை அவளுக்கு பரிசாக அளித்தார் என்றும் தெரிய வருகிறது.

அன்யர குணதோஷவ எணிஸதலெ நின்னிரவ நோடு கண்ட்ய மனவெ
பண்ணகாரிகெயு பரிதெ ஒளதம்ப்ர கண்ணினந்தீ காயவு மனவெ

***

# சந்த்ரஹாஸனின் கதை

## கதைச் சுருக்கம்

**முதலாம் ஸந்தி**

* மங்களாசரண ஸ்லோகங்கள்; தேவதா தாரதம்யத்தின்படி அவர்களை வணங்குதல்.
* நாரதர், அர்ஜுனனுக்கு கூறுவதாக இந்த சந்த்ரஹாஸனின் கதை இருக்கிறது.
* அர்ஜுனனின் குதிரையை, சந்த்ரஹாஸன் நிறுத்தினான்; கட்டினான்.
* குதிரையை காணாமல் கவலையில் இருந்த அர்ஜுனனிடம் நாரதர் வருகிறார்.
* குதிரையை கட்டியது சந்த்ரஹாஸனே என்று கூறியவாறு, அவனின் கதையை விவரிக்கிறார்.
* கேரள நாட்டின் அரசன் ஒருவன் இறந்துவிட, குழந்தை அனாதை ஆகிவிட, அதனை பணிப்பெண் ஒருத்தி எடுத்து வளர்க்கிறாள். அவர்கள் குந்தளபுரத்தில் இருக்கிறார்கள்.
* ஏழ்மையில் மிகவும் கஷ்டப்பட்டு அந்தக் குழந்தையை அவள் வளர்க்கிறாள்.
* அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள், அழகான அந்த சிறுவனை மிகவும் பாசத்துடன் பார்த்துக் கொள்கிறார்கள்.
* ஒரு நாள் குந்தளபுரத்தின் மந்திரி அனைவருக்கும் உணவளிக்கிறான் என்பதை அறிந்தார்கள்.
* அங்கு வந்த அந்த சிறுவனை, அவனது அழகினை அனைவரும் கண்டு வியந்தனர். இவனை இந்த நாட்டின் ராஜா ஆக்குங்கள் என்று அரசனிடம் கூறினர்.
* இதைக் கேட்ட மந்திரி கவலைப்பட்டு, இந்த சிறுவனை அழைத்துச் சென்று கொன்றுவிடுங்கள் என்று தன் வேலையாட்களிடம் கூறினான்.
* அவர்களும் அவனை அழைத்துப் போக, அந்த சிறுவனோ பயந்து அழத் துவங்கினான். ஸ்ரீஹரியிடம் வேண்டினான்.
* அந்த வேலையாட்களோ அவன் மேல் கருணை கொண்டு, கொல்லாமல் விடுகின்றனர்.
* மந்திரியிடம் வந்து அவனை கொன்று விட்டோம் என்று பொய் கூறுகின்றனர்.
* அழுது கொண்டிருந்த சிறுவனை, காட்டு மிருகங்கள் / பறவைகள் சமாதானம் செய்தன. வனதேவி வந்து அவனை உணவு அளித்து காத்தாள்.
* அப்போது அந்த காட்டுத் தலைவன் புளிந்தன் அங்கு வேட்டையாட வந்தான்.
* ஹரி த்யானத்தில் இருந்த இந்த சிறுவனை கண்டான். அவனை தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.
* அவனுக்கு சந்த்ரஹாஸன் என்று பெயரிட்டு வளர்த்து வந்தான்.

**இரண்டாம் ஸந்தி**

* சந்த்ரஹாஸன் உயிருடன் இருப்பது அந்த மந்திரிக்கு தெரிந்தது. அவனை கொல்வேன் என்று நினைத்தான்.
* அங்கு, சந்த்ரஹாஸனுக்கு அக்ஷராப்யாஸம், உபநயனம் ஆகியவற்றை செய்தனர்.
* சந்த்ரஹாஸன் ஊரின் அனைவருக்கும் ஹரிபக்தியை ஏற்படுத்தி, ஏகாதசி உபவாஸங்களையும் செய்வித்தான்.
* சந்த்ரஹாஸன் பெரியவனாகி, போரில் அனைவரையும் வெல்லத் துவங்கினான்.
* ஒரு நல்ல நாளில் சந்த்ரஹாஸனுக்கு பட்டம் சூட்டி அந்த நாட்டின் அரசன் ஆக்கினார்கள்.
* பல மன்னர்களுக்கு நாம் கப்பம் கட்ட வேண்டியிருக்கிறது. அது நம்மால் முடியவில்லை என்றார் தந்தை.
* அதிக கப்பம் கொடுக்க வேண்டியதான குந்தளபுரத்திற்கு, சந்த்ரஹாஸன், தன் புரோகிதர் மூலம் பல பரிசுகளை அனுப்பி வைத்தான்.
* அவர்களும் அந்த பரிசுகளை எடுத்து மந்திரி துஷ்டபுத்தியிடம் வந்தனர்.
* மந்திரியும் அந்த பரிசுகளை ஏற்றுக் கொண்டு, தூதுவர்களை நன்றாக உபசரித்தான்.
* அவர்களோ எங்கள் புதிய அரசன் செய்த விதிப்படி, ஏகாதசியான இன்று நாங்கள் உண்பதில்லை என்றனர்.
* உங்கள் அரசனுக்கு மகனே இல்லையே?. இது எப்படி? இது யார்? என்று மந்திரி கேட்டான்.
* அப்போது புளிந்தனுக்கு காட்டில் சந்த்ரஹாஸன் கிடைத்த கதையை அவர்கள் கூறினர்.
* அப்போதே மந்திரிக்கு உண்மை தெரிந்து, சந்த்ரஹாஸனை கொல்ல வேண்டும் என்று தீர்மானித்தான்.
* மந்திரி, புளிந்தனின் நகரத்துக்குச் செல்கிறான். சந்த்ரஹாஸனை பார்க்கிறான்.
* சந்த்ரஹாஸனை தன் நகரத்துக்கு அழைக்கிறான்.

* சந்த்ரஹாஸனும் தன் பெற்றோரை வணங்கி, செல்லும்போது பற்பல சுப சகுனங்களை பார்க்கிறான்.
* வரும் வழியில் ஏரியில் குளித்து, தன் ஜப தப ஸந்த்யாவந்தனைகளை செய்கிறான். பூஜை செய்கிறான்.
* பிறகு ஸ்ரீஹரியின் நைவேத்யத்தை உண்டு, அங்கேயே மரத்தடியில் சிறிது ஓய்வு எடுத்துக் கொள்கிறான்.

**மூன்றாம் ஸந்தி**

* சந்த்ரஹாஸனுக்கு மந்திரியின் மகளுடன் திருமணம் ஏற்பாடு ஆனது.
* இந்தத் திருமணத்திற்கு ஊர் மக்கள் அனைவரும் திரண்டனர்.
* மந்திரியின் மகள் தன் தோழிகளுடன் வனத்தில் உலவிக் கொண்டிருந்தாள்.
* அப்போது அங்கு ஓய்வெடுத்துக் கொண்டிருந்த சந்த்ரஹாஸனை பார்க்கிறாள்.
* அவனின் சட்டையில் ஒரு கடிதம் இருப்பதை பார்த்து, அதை எடுத்து படிக்கிறாள்.
* மந்திரி, தன் மகனுக்கு எழுதிய கடிதம் அது. அதில் இந்த சந்த்ரஹாஸனை கொன்று விடவும் என்று எழுதியிருந்தது.
* விஷத்தைக் கொடுக்கவும் என்று இருந்ததை, விஷயத்தை கொடுக்கவும் என்று திருத்தினாள். (அவள் பெயர் விஷய).
* சந்த்ரஹாஸனிடம் தன் மனதை பறிகொடுத்தாள்.
* அங்கு சந்த்ரஹாஸன் தூக்கம் கலைந்து எழுந்து, மறுபடி பயணத்தை தொடர்ந்தான்.
* வந்து மந்திரியின் மகனை சந்திக்கிறான். அந்த கடிதத்தைக் கொடுக்கிறான்.
* தன் தங்கை விஷய'க்கு ஏற்றவன் இவனே என்று தீர்மானிக்கிறான்.
* உடனே திருமணம் ஏற்பாடானது. மணப்பெண் & மணமகனை தயார் செய்கின்றனர்.

**நான்காம் ஸந்தி**

* சந்த்ரஹாஸன் & விஷயெ இவர்களின் திருமணம் நடக்கிறது.
* திருமண நிகழ்ச்சிகளின் விவரங்கள் சொல்லப்படுகின்றன.
* விஷயெ'க்கு செய்த அலங்கார விவரங்கள் உள்ளன.
* திருமணத்தில் கோத்ர உச்சாரண, மங்களாஷ்டகங்கள் பாடப்படுகின்றன.
* மணமக்களின் கைகளில் கங்கணம் கட்டப்படுகின்றன.
* திருமணம் முடிந்தபின் அனைவரும் உண்கின்றனர். பூம பந்தி நடைபெறுகிறது.
* அடுத்த நாள் காலையில், விஷய & சந்த்ரஹாஸனுக்கு விஷய'வின் அண்ணன் விடை கொடுத்து அனுப்பினான்.
* சந்த்ரஹாஸனின் தந்தையும் அனைவருக்கும் அனைத்தையும் பகிர்ந்தளித்து மகிழ்ந்தான்.
* ஊருக்குத் திரும்பி வரும் துஷ்டபுத்தி அசுப சகுனங்கள் தென்பட்டன.
* எதிரில் வந்தவர்களை கேட்க, விஷயெ, சந்த்ரஹாஸனின் திருமண விவரம் தெரியவந்தன.
* தந்தை மகனுக்கு சண்டை வந்தது. கடிதத்தில் யாரோ மாற்றியிருக்கிறார்கள் என்பதை அறிந்தார்கள்.
* தன் ஊழியர்களை அனுப்பி, காளி கோயிலில் மறைந்து நிற்குமாறும், சந்த்ரஹாஸன் கோயிலுக்கு வரும்போது அவனை கொன்று விடுமாறும் கூறினான்.
* சந்த்ரஹாஸனிடம், கோயிலுக்குச் சென்று பகவந்தனுக்கு உணவு (பலி) கொடுக்குமாறு கூறினான்.
* மந்த்ரி தன் மகனை அழைக்க, வழியில் மகன் சந்த்ரஹாஸனை பார்க்க, மகன் அந்த நைவேத்யத்தை தான் எடுத்துக் கொண்டு கோயிலுக்குப் போகிறேன் என்றும், சந்த்ரஹாஸனை மந்திரியிடம் அனுப்பினான்.
* கோயிலுக்கு வந்த மதனனை சேவகர்கள், சந்த்ரஹாஸன் என்று நினைத்து கொன்றனர்.
* சந்த்ரஹாஸன் மந்திரியை பார்க்க வருகிறான். நடந்த விஷயத்தை சொல்கிறான்.
* மகனை சேவகர்கள் கொன்று விட்டார்கள் என்பதை அறிந்த மந்திரி, அழுதவாறு அவனை பார்க்கச் செல்கிறான்.
* அதே கோயிலில் தூணில் இடித்துக் கொண்டு, மந்திரியும் தலை உடைந்து இறந்தான்.
* நானும் என் உயிரை மாய்த்துக் கொள்கிறேன் என்றான் சந்த்ரஹாஸன்.
* அப்போது காளி தேவி அவனுக்கு தரிசனம் அளித்து அபயம் அளிக்கிறாள்.
* வரமாக, இவர்கள் இருவரையும் பிழைக்க வைக்க வேண்டும் என்கிறான் சந்த்ரஹாஸன். அப்படியே ஆனது.
* அனைவரும் சந்த்ரஹாஸனை புகழ்ந்தார்கள். சந்த்ரஹாஸன் மிகவும் அற்புதமாக நாட்டினை ஆண்டான்.

* சந்த்ரஹாஸனின் கதையை எழுதி, கேட்டவர்களுக்கு வந்த கஷ்டங்கள் அனைத்தும் பரிஹாரம் ஆகும் - என்று பலன் சொல்லப்படுகிறது.

**ஶ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**
***

## Chandrahasana kathe

### முதலாம் ஸந்தி

**ஶ்ரீரமணிய மனோஹர ஸுஜன மந்தார**
**த்ரைபு[4]வனோத்[3]தா[4]ர**
**காருண்யநிதி[4] ஹொளவனகட்டெ ரங்க[3]ய்யா**
**நாராயண ஶரணெம்பெ[3] ||1**

ஶ்ரீமஹாலக்ஷ்மியின் தலைவனான, ஸஜ்ஜனர்களின் கல்பவ்ருக்ஷமான, மூன்று உலகங்களையும் காப்பவனான, காருண்ய நிதியான, ஹொளவனகட்டெ ரங்கய்யனான, நாராயணனை நான் வணங்குகிறேன்.

**கட[3]லஶயன கல்பதருவெ இஷ்டார்த்த[2]வ**
**கொடு[3]வ ப[4]க்தர பா[4]க்[3]யநிதி[4]யே**
**நடெ[3]ஸுவெ நிம்ம தந்த்ரத[3]லி ஈ க்ருதியனு**
**நுடி[3]ஸய்யா என்ன ஜிஹ்வெயலி ||2**

பாற்கடலில் படுத்திருப்பவனே, கல்பதருவே, இஷ்டார்த்தங்களை அளிக்கும் பக்தர்களின் பாக்யநிதியே, உன்னுடைய அருளால் இந்த கிருதியை நான் எழுதுகிறேன். நீயே என் நாக்கினில் நின்று இதனை எழுத வைக்க வேண்டும்.

**பு[4]ஜக[3]ன ஹிடி[3]து[3] க[3]ர்ப்ப[4]வ ஸுத்திதா[3]தனெ**
**அஜஹரிஸுர வந்தி[3]தனெ**
**ப[4]ஜனெகி[3]ஷ்டார்த்த[2]வ கொடு[3]வ விக்[4]னேஶ்வர**
**நிஜவாகோ[3] மதிகெ[3] மங்க[3]ளவ ||3**

பாம்பினை பிடித்து வயிற்றில் கட்டிக் கொண்டிருப்பவனே. ப்ரம்ஹ, சிவ, இந்திராதி தேவர்களால் வணங்கப்படுபவனே. உன்னை வணங்கி பஜனை செய்பவர்களுக்கு இஷ்டார்த்தங்களை கொடுக்கும் விக்னேஸ்வரனே, என் மதியில் வந்து நின்று, எனக்கு மங்களங்களை அருள்வாயாக.

**ஶ்ருங்க[3]புரத[3] நெலவாஸெ ஸஜ்ஜனபோஷெ**
**ஸங்கீ[3]தலோலெ ஸுஶீலெ**
**மங்க[3]ளகா[3]த்ரெ ஶாரதெ[3] என்ன ஜிஹ்வெயலி**
**ஹிங்க[3]தெ[3] நெலஸென்ன தாயெ ||4**

ஷ்ருங்கேரியில் நிலைத்திருப்பவளே. ஸஜ்ஜனர்களை காப்பவளே. ஸங்கீதத்திற்கு மயங்குபவளே. அழகானவளே. மங்களமான தேகத்தை கொண்டவளே. ஷாரதையே. எவ்வித தடைகளும் இன்றி என்னுடைய நாக்கினில் வந்து நிற்பாய் அம்மா.

**நித்யானந்த³ ரஜதாசலவாஸனெ ப⁴க்த**
**வத்ஸல பா⁴ளநேத்ர**
**ஹெத்தோர மனெதெ³ய்வ ஸ்ரீ மைலாரகெ³**
**ஹஸ்தவ முகி³து³ வந்தி³ஸுவெ ||5**

நித்யானந்தனே; ரஜத மலையில் வசிப்பவனே; பக்தவத்ஸலனே; வீர்யமான கண்களை உடையவனே; பற்பல மக்களின் குலதெய்வமே; ஸ்ரீமைலார லிங்கேஸ்வரனுக்கு (ருத்ரதேவர்) என் கைகளை குவித்து வணங்குகிறேன்.

**ப்ருதி²வி ஆகாஶ ஸூர்ய சந்த்³ரரிகெரகு³வெ**
**பதிய சரணவன்னு நெனெவெ**
**ஸ்துதிஸுவெ கு³ருஹிரியரிகே³ தசித்ததி³**
**மதிகெ³ மங்க³ளவாக³லெந்து³ ||6**

ப்ருத்வி, ஆகாஷ, சூர்ய, சந்த்ரர் ஆகியோரை வணங்குகிறேன். என் தலைவனின் சரணங்களையும் வணங்குகிறேன். அனைத்து குரு, மூத்தவர்களை ஒரு மனதுடன் வணங்குகிறேன். என் மதிக்கு மங்களங்களை அருளுமாறு வேண்டிக் கொள்கிறேன்.

**ஸுரபுரவாஸ லக்ஷ்மியகாந்த ப⁴க்தர்க்கெ³**
**ப³ரெத³ந்த ஜைமினியொளகெ³**
**பரமப⁴க்த சந்த்³ரஹாஸன கதெ²யனு**
**சரிதெய மாடி³ வர்ணிஸுவெ ||7**

ஸுரபுரத்தில் வசிக்கும் லக்ஷ்மிதேவியின் தலைவனான, பக்தர்களை அருள்பவனான (பகவந்தனை வணங்கி), இந்த உலகில் பரமபக்தனான சந்த்ரஹாஸனின் கதையை, சரித்திரத்தை நான் இங்கு வர்ணிக்கிறேன்.

**இந்த்³ரஜ துரக³வ காணதெ³ மனத³ல்லி**
**ஸந்தே³ஹ மாடு³த்திரலு**
**சந்த்³ரஹாஸன கதா²ம்ருதஸாரவனு**
**நாரந்த³ பேளித³ ப²லுகு³ணகெ³ ||8**

அர்ஜுனன் ஆனவன், தன் குதிரையை காணாமல், மனதில் சந்தேகம் / கவலை கொண்டிருக்க, சந்த்ரஹாஸனின் கதையை நாரதர் அர்ஜுனனுக்கு கூறினார்.

**ப³ந்த³ரு க்ருஷ்ணார்ஜுனரு துரங்க³வ**
**முந்தொ³த்தி ரத²வ பெ³ம்ப³த்தி**
**சந்த³தி³ தி³க்³தே³ஷ திருகி³த³ ஹயவ தா**
**நிந்தி³ரிஸித³ சந்த்³ரஹாஸ ||9**

குதிரையை துரத்திக் கொண்டே, கிருஷ்ண அர்ஜுனர்கள் வந்தார்கள். தங்கள் தேர்களில் வந்தார்கள். மிகவும் விமரிசையுடன் அனைத்து தேசங்களிலும் சுற்றி வந்த அந்த குதிரையினை, சந்த்ரஹாஸன் நிறுத்தினான்.

**கட்டித³னெரடு³ துரங்க³வ லிகி²தவ**
**பி³ச்சோதி³கொண்டு³ நோடி³த³னு**
**வைஷ்ணவகுல ஶிரோரன்ன பராக்ரம**
**தி³ட்டரிகிது³ நீதவெந்து³ ||10**

அந்த இரு குதிரைகளையும் நிறுத்தி கட்டினான். அதில் கட்டப்பட்டிருந்த ஓலையை எடுத்து படித்தான். வைஷ்ணவ குல ஷிரோரத்ன பராக்ரமனான தனக்கு இது சரியான செயலே என்று நினைத்தான்.

**பிடி³கொண்டு³ ப³ந்த³ரு துரக³வ சரரு த**
**ந்னொடெயகெ³ பேளித³ராக³**
**பிடி³து³ துரங்க³வ கட்டித³ராரெந்து³**
**கடுசிந்தெயலி பார்த்த²னித்³த³ ||11**

அந்த குதிரையை தேடி வந்த வேலையாட்கள், அர்ஜுனனிடம் இவ்வாறு (சந்த்ரஹாஸன் கட்டினான்) என்னும் செய்தியை கூறினார்கள். அப்போது, தன் குதிரைகளை பிடித்து கட்டியவர்கள் யார் என்று நினைத்து கடும் சிந்தனையில் பார்த்தன் இருந்தான்.

**மனத³லி ஆலோசனெய மாடு³தலிரெ**
**தி³னகர ப்ரதிபி³ம்ப³த³ந்தெ**
**வனஜனாப⁴ க்ருஷ்ண ஶரணென்னுத**
**ஸுரமுனி இளித³ம்ப³ரதி³ந்த³ ||12**

அவன் இவ்வாறு மனதில் கவலைப்பட்டுக் கொண்டிருக்க, சூரியனின் ப்ரதிபிம்பத்தைப் போல ஒளியுடன், வனஜனாபனே கிருஷ்ணனே உன்னை வணங்குகிறேன் என்று சொல்லியவாறு ஸுரமுனியான நாரதர் வானிலிருந்து வந்து இறங்கினார்.

**இட்டிஹ கர்ணகுண்ட³லவ க்ருஷ்ணாஜின**
**உட்டிஹ கரதி³ வேணுவனு**
**முட்டி பா³ரிஸுத ஶ்ரீஹரிநாம ஸ்மரிஸுத**
**ஸ்ரேஷ்ட ப³ந்த³னு இவரெடெ³கெ³ ||13**

நாரதர், கர்ண குண்டலங்களை தரித்தவாறு, கிருஷ்ணாஜின உடுத்தியவாறு, கையில் வேணுவை பிடித்து வாசித்தவாறு, ஸ்ரீஹரியின் நாமத்தை நினைத்தவாறு, வந்தார், ஸ்ரீகிருஷ்ண அர்ஜுனர்களிடம்.

**ஏனிது³ ப³ந்த³ காரண எனுதலி இந்த்³ரஸுனு**
**கிருஷ்ணரு இதி³ரெத்³து³**
**கா³னவினோதி³யாக³மனவிதே³னெந்து³**
**ஆனந்த³தி³ந்த³ கேளித³ரு ||14**

நீங்கள் வந்த காரணம் என்ன என்று நாரதரிடம் கேட்டவாறு, அர்ஜுனன், கிருஷ்ணர் இருவரும் எழுந்து வந்து, பாடல்களை அருமையாகப் பாடுபவரே, உங்கள் வருகைக்கு என்ன காரணம் என்று மகிழ்ச்சியுடன் கேட்டனர்.

**குள்ளிரிஸித³ரு க³த்³து³கெ³யிட்டு முனிபகெ³**
**எல்ல வ்ருத்தாந்தவனருஹி**
**ப³ல்லித³ துரக³வ கட்டித³ தீ⁴ர**
**அல்லாரு எனுத கேளித³ரு ||15**

அந்த நாரத முனிவருக்கு ஒரு ஆசனத்தை போட்டு அமரச் செய்தனர். அவரும் அனைத்து செய்திகளையும் / தகவல்களையும் கூறி, தாங்கள் அனுப்பிய சிறந்ததான குதிரையை கட்டிய அந்த வீரன் யார் என்று கேட்டனர்.

**க³மனவாகித்³த³ துரங்க³வ கட்டித³**
**ப்ரமுக²ரில்யாரு பேளெனலு**
**நிமகி³த³ விவரிஸி பேளுவெனெந்த³ரெ**
**ஸமயவல்லவு பேளெனலு ||16**

சஞ்சாரம் செய்து கொண்டிருந்த குதிரையை இழுத்துக் கட்டிய முக்யஸ்தர் (வீரர்) யார் என்று அவர்கள் கேட்க, உங்களுக்கு இதனை விவரித்து சொல்வேன் என்று நாரதர் கூற, உடனடியாக சொல்லுங்கள் என்று ஸ்ரீகிருஷ்ண அர்ஜுனர்கள் கூறினர்.

**வ்யாஸாம்ப[3]ரீஷ விபீ[4]ஷணக்ரூர**
**பராஶர த்[4]ருவ ப்ரஹல்லாத[3]**
**ஈஸுமந்தி[3] ப[4]க்தரிக[3]தி[4]கனு**
**சந்த்[3]ரஹாஸனெம்பா[3] ஹரிப[4]க்த ||17**

நாரதர் கூறத் துவங்கினார். குதிரையை கட்டியவன் யாரென்றால் – அரசனான அம்பரீஷன், விபீஷ்ணன், அக்ரூரர், பராஷரர், த்ருவன், ப்ரகலாதன், என இவ்வளவு பேர் பக்தர்களைவிட சிறந்த பக்தனான சந்த்ரஹாஸன் என்னும் ஹரிபக்தன்தான் அவன்.

**ஹொளபே[3]கெனுத முனீஶனெந்தெம்ப[3]**
**கேராளதே[3]ஶ[3] ராஜ்யவனு**
**ஆளுவ ப்ரபு[4] தா[4]ர்மிகனெம்பா[3]தன**
**பா[3]ளனெம்ப[3]ரு ப்ரதா[4]னியனு ||18**

அவனைப் பற்றி மேலும் தகவலை சொல்லுங்கள் என்று நாரதரிடம் கேட்க, கேரள நாட்டின் ஒரு பகுதியை ஆளும் அரசன் அவன். அவனுடைய வாழ்க்கையையே தார்மிகமானது என்று அங்கிருப்பவர்கள் அனைவரும் சொல்கிறார்கள்.

**நீதிலி ராஜ்யவனாளுதிரலு கந்த[3]**
**பூ[4]தமூலத[3]லி புட்டித[3]னு**
**ஜாதகர்ம நாமகரண மாட[3]தெ[3] அவன**
**தாத காலவாகி[3] போத[3] ||19**

இவ்வாறு அந்த அரசன் நாட்டை ஆண்டு கொண்டிருக்க, அவனுக்கு ஒரு மகன் பிறந்தான். ஆனால், அந்த குழந்தைக்கு ஜாதகர்ம, நாமகரண ஆகிய சம்ஸ்காரங்களை செய்யாமல், அவனுடைய தந்தை இறந்து விட்டான்.

**நாயகரில்லத[3] காயவிதே[3]கெந்து[3]**
**ஸாயலாத[3]ளு ராஜபத்னி**
**மாயவாயிது ஸிரி மத்தெ ராஜ்யவ**
**பரராயரு ப[3]ந்து[3] கட்டி[3]தரு ||20**

தலைவன் இல்லாதபோது தனக்கு எதற்கு இந்த தேகம் என்று அரசியும் இறந்துவிடுகிறாள். குடும்பத்தின் செல்வம் அனைத்தும் இழந்து போயின. அரசையும் வேறு நாட்டு அரசர்கள் வந்து கவர்ந்தனர்.

**போஷணெ மாடு[3]வரில்லதி[3]ரலு**
**பரதே[3]ஶியந்த[3]தி[3] பா[3]லனிரலு**
**தா[3]ஸியொப்[3]ப[3]ளு கண்டு[3] மனத[3]ல்லி**
**மருகு[3]த[3] ஆ ஶிஶுவெத்தி நடெ[3]த[3]ளு ||21**

தன்னை காப்பவர்கள் யாரும் இல்லாமல், அந்த சிறுவனானவன் பரதேசியைப் போல இருக்க, அங்கிருந்த பணிப்பெண் ஒருத்தி அந்த சிறுவனைக் கண்டு மனமிரங்கி, அவனை வளர்ப்பதற்காக எடுத்துக் கொண்டு சென்றாள்.

**சிந்திஸி ஹலவு யோசனெய மாடு³தலாக³**
**குந்த¹ளபுரகாகி³ ப³ந்து³**
**ஸந்தத நெரெயலி ஶிஶுவனிட்டுகொண்டு³**
**நிந்தளு ஆ க³³ராமத³ல்லி ||22**

அந்த சிறுவனை எப்படி வளர்ப்பது என்று பலவாறாக சிந்தித்து, அந்தப் பெண் குந்தளபுரத்திற்கு வந்து, கையில் குழந்தையை வைத்துக்கொண்டு அந்த க்ராமத்தில் நின்றிருந்தாள்.

**திரிது³ ஹாகுவளு பால்பெ³ண்ணெய ஶிஶுவிகெ³**
**எரெது³ போஷணெய மாடு³வளு**
**தரளகெ³ பே³காது³தி³ல்லதி³ரலு தா³ஸி**
**மருகு³திர்த்த³ளு மனதொ³ளகெ³ ||23**

அங்கிங்கு சுற்றி யாசகம் பெற்று, அந்தக் சிறுவனுக்கு பால், வெண்ணையை வாங்கி ஊட்டுவாள். அவனை காத்து வந்தாள். அவ்வப்போது அவனுக்கு கொடுப்பதற்கு எதுவும் கிடைக்கவில்லையெனில், அந்த பணிப்பெண் மனதில் மிகவும் கவலைப்பட்டாள்.

**தே³ஶாதி⁴பதிய க³ர்ப்ப⁴தி ப³ந்து³ நினகீ³க³**
**ஹாஸுவ வஸ்த்ரக³ளில்ல**
**பீ³ஸி தூகு³வரெ தொட்டிலு இல்ல எனுதலி**
**பே³ஸத்து அளலுவளொம்மெ ||24**

நாட்டை ஆளும் அரசனின் கர்ப்பத்தில் (வம்சத்தில்) வந்து, உனக்கு இப்போது உடுத்த துணிகள் இல்லை; தூங்குவதற்கு தொட்டில் இல்லை என்றவாறு, மனதில் வருத்தப்பட்டு அந்தப் பெண் அவ்வப்போது அழுவாள்.

**பாலனெ மாடு³வளு பரிபரியலி**
**பா³லலீலெய நோடி³ ஹரிக³கு³வளு**
**ஶ்ரீ லோலனெ நீ க³தியெந்து³ தரளன**
**ஆலம்ப³த³ல்லிருதிஹளு ||25**

இவ்வாறு கஷ்டப்பட்டு அந்தப் பெண் அந்தக் குழந்தை பாதுகாத்து வளர்த்து வந்தாள். அவனுடைய பால லீலையை பார்த்து மகிழ்வாள். ஶ்ரீஹரியே, நீயே இவனுக்கு கதி என்று அந்த சிறுவனின் அருகில் இருந்து அவனை பார்த்து வந்தாள்.

**தொங்க³லகு³ருளு தோருதலிஹ மொளெவல்லு**
**கங்க³ள குடி³னோட¹வெஸெயெ**
**மங்க³ளகா³த்ரத³ முத்³து³பா³லகனெல்ல**
**ரங்க³ள தொ³ளகா³டு³திஹனு ||26**

நெற்றியில் புரளும் முடி, முளைப்பல் வளர்ந்திருக்க, அனைவரையும் மயக்கும் கண்களுடன், அழகான தேகம் கொண்டவனாகி, அந்தக் குழந்தையானவன், அக்கம்பக்கத்தில் அனைவரின் வீட்டிலும் சென்று விளையாடிக் கொண்டிருந்தான்.

**இருதிரெ தா³ஸி அந்தரிஸி போத³ளு பா³ல**
**பரபுட்டனாது³த³ கண்டு³**
**நெரெய நாரியரெல்ல தம்ம மக்கள கூடெ³**
**எரெது³ மடி³ய போதி³ஸுவரு ||27**

இவ்வாறான குழந்தையின் நிலையைக் கண்டு அந்தப் பெண் மிகவும் மகிழ்ந்திருக்க, குழந்தை சிறுவன் ஆனதைக் கண்டு அக்கம்பக்கத்தில் இருந்த பெண்கள் அனைவரும், தங்கள் குழந்தைகளுடன் அவனை விளையாடச் செய்து, அவனை கொஞ்சி மகிழ்ந்தார்கள்.

**மாகா³யி முரவிட்டு மன்னிஸி கெனெமொஸ**
**ரோக³ரவன்னு உணிஸுவரு**
**தூகு³வரு தொட்டிலொளகி³ட்டு தரள்ன**
**ராக³கா³னத³லி பாடு³வரு ||28**

மாம்பழம் போன்ற பழங்கள், சாப்பாடு ஆகியவற்றை, நன்கு உறை ஊற்றிய தயிரில் கலந்து அவனுக்கு கொடுத்தார்கள். அவனை தொட்டிலில் வைத்து தூங்கச் செய்தனர். நல்ல ராகத்துடன் பாடி அவனை தூங்கச் செய்தனர்.

**ஓரகெ³ மக்களு ஒட³கொ³ண்டு³ ஹோகி³**
**எண்ணூரிகெ³யனு கொடி³ஸுவரு**
**கேரி கேரிக³ளொளு கொடு³வரெல்லர**
**காருண்யத³ கந்த³னாகி³ ||29**

தங்களின் மக்களுடன் இவனையும் வெளியே அழைத்துச் சென்று, அவன் கேட்டதையெல்லாம் வாங்கிக் கொடுத்தனர். அந்த கிராமத்தில் உள்ள அனைத்து தெருக்களில் இருப்பவர்களின் கருணைக்கு பாத்திரனாக அந்த சிறுவன் வளர்ந்து வந்தான்.

**ஸொளெவெண்ணுக³ளெல்ல ஸெளெதெ³த்திகொண்டு³**
**தம்மாலயதொ³ளு கரெதொ³ய்து³**
**காலதொளெது³ கஸ்தூரியனிட்டு மல்லிகெ³**
**மாலெயனவகெ³ ஹாகுவரு ||30**

அங்கிருந்த சிறுமிகள் அனைவரும் அவனை தூக்கிச் சென்று, தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று, அவன் கால்களைக் கழுவி, கஸ்தூரி இட்டு, மல்லிகை மாலையை அவனுக்கு சூட்டினர்.

**கத³ளி கர்ஜூர கித்தலெ ஜம்பு³நேரில**
**மது¹ர மாவின ப²லக³ளனு**
**சதுரெயரெல்ல கொட்டு மன்னிஸுவரு**
**மத³ननய்யன கிங்கரகெ³ ||31**

வாழைப்பழம், கர்ஜூர, கித்தளே (ஆரஞ்சு), முந்திரி மற்றும் சுவையான மா ஆகிய பழங்களை அந்தப் பெண்கள் அவனுக்குக் கொடுத்து அவனை உபசரித்தார்கள், ஸ்ரீஹரியின் பக்தனான அந்த சிறுவனுக்கு.

**ப³ட்டெவிடி³து³ பா³ல ப³ருதிரெ கண்ட³னு**
**புட்ட ஸாலிக்³ராம ஶிலெய**
**க³ட்டுள்ள கோ³லியு தனகெ³ தொ³ரகிதெந்து³**
**அஷ்டு ஜனரிகெ³ தோரிஸித³ ||32**

அழகான ஆடைகளை உடுத்தி, அந்த சிறுவன் வந்து கொண்டிருக்க, ஒரு அழகான சாலிக்ராம சிலையினை அவன் பார்த்தான். அழகான ஸ்வாமியே தனக்கு கிடைத்தார் என்று அவன் ஊர் மக்கள் அனைவருக்கும் தெரிவித்தான்.

**ப¹யதி³ந்த³லித்³த³ பா³லகெ³ தொ³ரெகிது**
**புண்யோத³யதி³ ஸாலிக்³ராம ஶிலெயு**
**கைய து³டு³கிலி தொக்கொண்ட³னு ஹருஷதி³**
**லக்ஷ்மீ நாராயண மூருதிய ||33**

பயமின்றி இருந்த அந்த சிறுவனுக்கு கிடைத்தது, அவனுடைய புண்ய பலன்களால், அழகான ஒரு சாலிக்ராம சிலை. அதனை தன் கைகளில் ஏந்தியவாறு, மிகவும் மகிழ்ச்சியுடன் எடுத்து வந்தான் அந்த லக்ஷ்மி நாராயண மூர்த்தியை.

**ஆடி³கெ³ல்லுவ நால்குயிம்மடி³ கட்டுக³வ**
**கூடி³த³³ கெ³ளெயர கூடெ³**
**நோடி³³ ப³ச்சிடு³வரெ மனெயில்லதி³ரெ பா³ல**
**தெள³டெ³யொளிட்டு கொண்டி³ஹனு ||34**

அந்த சிறுவன் அனைவருடனும் விளையாடி வென்று வந்தான். நான்கு முழ வேட்டியை இரண்டாகக் கட்டிக் கொண்டான். அவனுடன் இருந்த நண்பர்கள் கேட்டாலும் (அந்த சிலையை) அவன் அவர்களுக்கு கொடுப்பதில்லை. அவர்களை பார்த்தவுடன் ஒளித்து வைத்து விடுவான். தான் வீட்டில் இல்லையெனில், அந்த சிறுவன் அந்த சிலையை ஒரு சிறிய பாத்திரத்தில் மூடி வைத்துக் கொண்டிருந்தான்.

**ஹிண்டு³கெ³ளெயர கூடி³கொண்டா³டு³வ லக்³கெ³**
**செண்டு³ பு³கு³ரி சன்னிக³ளனு**
**கண்டு³க³லியு தானாகி³ அவரெல்லர**
**மண்டெ³க³ளனு தக்³கி³ஸுவனு ||35**

அந்த ஊர் சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடி வந்தான் – மட்டை, பந்து, குழல், கோல் ஆகியவற்றை பிடித்து. வீரனான அந்த சிறுவன், அவர்கள் அனைவரையும் வென்று, அவர்களின் தலையை குனியச் செய்வான்.

**பெ³ச்சுவனபஹரிஸுவரெனுத ப³ஹு**
**எச்செத்து பிடி³தா³டு³வனு**
**ப³ச்சிடு³வரெ மனெயில்லதி³ரலு பா³ல**
**அர்ச்சிஸி பா³யொளகி³டு³வ ||36**

தன் விளையாட்டுப் பொருட்களை அவர்கள் கவர்ந்து விடுவார்கள் என பயந்து, எச்சரிக்கையுடன் அவற்றை பிடித்து ஆடுவான். அவற்றை அவர்கள் எடுத்து வீட்டில் ஒளித்து வைத்தால், சிறுவனானவன் அவர்களை நன்றாக திட்டுவான்.

**ஒந்து³ தி³வஸ குந்தளேந்த்³ரன மந்த்ரியு**
**மந்தி³ரத³லி விப்ரரிகெ³ ஆ**
**நந்த³தி³ந்த³லி போ⁴ஜன மாடி³ஸுவெனெந்த³**
**ப³ந்த³ரு பு³த³ஜனரெல்ல ||37**

ஒரு நாள் அந்த குந்தளபுரத்தின் அரசனின் மந்திரி, அவனின் வீட்டில், ப்ராம்ஹணருக்கெல்லாம் உணவு அளிக்கிறான் என்ற செய்தியுடன் மகிழ்ச்சியுடன் வந்தனர் அறிஞர்கள்.

**ம்ருஷ்டான்னவன்னு போ⁴ஜன மாடி³ஸி**
**ஸந்துஷ்டி ப³டி³ஸித³ ப்ராஹ்மரனு**
**பட்டஸாலெயொளெல்ல ஹரடி³ கத்³து³கெ³யிட்டு**
**ஸ்ரேஷ்டரெல்லர குள்ளிரிஸி ||38**

அவன் அனைத்து பிராமணர்களுக்கும் மிருஷ்டான்னத்தை அளித்து, மகிழ்ச்சிப் படுத்தினான். அனைவரையும் அரண்மனையில் அழைத்து அமர்த்தி அந்த சிறந்தவர்கள் அனைவரையும் அமர்த்தி மகிழ்வித்தான்.

**த³க்ஷிணே தாம்பூ³லவனு தெக்கொண்டு³**
**மந்த்ராக்ஷதெயனு மந்த்ரிகி³த்து**
**மக்களொட³னெ கூடி³ ஆடு³வ தரளன**
**லக்ஷணவன்னெ நோடி³த³³ரு ||39**

அந்த ப்ராமணர்களும், தங்களுக்கு கொடுத்த தக்ஷிணை, தாம்பூலங்களை பெற்றுக் கொண்டு, மந்திரிக்கு மந்த்ராக்ஷதைகளை கொடுத்து, அங்கு சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்த அந்த சிறுவனின் லக்ஷணத்தை கண்டனர்.

**இவனார மக³னெந்து³ நெரெதி³ர்த்த³ ஸபெ⁴யல்லி**
**தி³விஜனரெல்ல கேளித³ரு**
**மொரெது³ ஸந்தெயிஸுவராரில்லொரொளகொ³ப்ப³**
**பரதே³ஶியெந்து³ ஹேளித³ரு ||40**

நிறைந்திருந்த சபையில், இந்தச் சிறுவன் யாருடைய மகன் என்று கேட்க, அங்கிருந்தவர்கள், இவனை பார்த்துக் கொள்ள யாரும் இல்லாதவன்; இவன் ஒரு பரதேசி என்று கூறினர்.

**அதிலக்ஷணஸம்பன்ன ஸுஶீலனு**
**மதிவந்த மஹகு³ண தீ⁴ர**
**ஜதன மாடி³ரி ராஜ்யகிவனெ**
**அதி⁴பதியெந்து³ ஹேளித³ரவரு ||41**

அதி லக்ஷணத்தை கொண்டிருக்கிறான். அழகானவன். அறிவாளி. நற்குணங்களை கொண்டிருக்கிறான். வீரன். உடனாடியாக இவனை இந்த அரசுக்கே அரசன் ஆக்குங்கள் என்று கூறினர்.

**ஆ மஹாஸபெ⁴யொளுத்தமவெந்து³ மந்த்ரியு**
**நேமிஸித³னு தன்ன மனதி³**
**ப்³ராஹ்மராடி³த³³ மாது ஹுஸிஹோக³தெ³னுதலி**
**கோ³முக²வ்யாக்⁴ரத³ந்திர்த்த³ ||42**

உடனே மந்திரியானவன், அந்த சபையில் தன் மனதில் இவ்வாறு நினைத்தான். பிராமணர்கள் கூறிய பேச்சு வீண் ஆவதில்லை என்று நினைத்தவாறு, புலியின் வாயில் சிக்கிய பசுபோல செய்வதறியாது நின்றான்.

**நானல்லதீ³ ராஜ்யக¹தி⁴பதியில்லெந்து³**
**ஆனந்த³ப⁴ரிதனாகி³ர்தெ³**
**தானொந்து³ கார்யவாகி³தெ³யெந்து³**
**மந்த்ரியு த்⁴யானிஸிதனு தன்ன மனதி³ ||43**

என்னைத் தவிர வேறு யாரும் இந்த நாட்டிற்கு அரசன் இல்லை என்று மகிழ்ச்சியில் மிதந்திருந்தேன். இப்போது இவன் வந்திருக்கிறானே, என்ன செய்வது, இது என்ன இப்படி ஆகிவிட்டதே என்று அந்த மந்திரி தன் மனதில் நினைத்தான்.

**நெரெதி³ர்த³³ ஸபெ⁴யெல்ல ஹரிது³ஹோது³த³³ கண்டு³**
**கருணவில்லதெ³³ து³ஷ்டபு⁴த்³தி⁴⁴**
**கரெஸித³³ பஷுகா⁴தகர கையொளகெ³³ ஆ**
**தரளன கொட்டனாக்ஷணதி³ ||44**

பிறகு, நிறைந்த சபையினர் அனைவரும் கலைந்து சென்ற பிறகு, துஷ்ட புத்தி கொண்டு, கருணையில்லாமல், பசுவை கொல்பவர்களை அழைத்து, அவர்களிடம் அந்த சிறுவனை அந்த மந்திரி ஒப்படைத்தான்.

**யாரு அரியத³ந்தெ இவன ஒய்து³**
**கோ⁴ராரண்யத³லி ஶிரவரிது³**
**தோரிஸி தனகெ³ கு³ருத தந்து³ முந்த³க்கெ**
**காரண உண்டெ¹ந்து³ நுடி³த³ ||45**

அந்த மந்திரி, அந்த வேலையாட்களிடம் - யாருக்கும் தெரியாமல் இவனை காட்டிற்கு அழைத்துச் சென்று, இவன் தலையை அறுத்து எறியுங்கள். இவனை கொன்றதற்கான அடையாளத்தை தனக்கு கொண்டு வந்து காட்டுங்கள். இதற்கு ஒரு காரணம் இருக்கிறது - என்று கூறினான்.

**ஒட³னெ ஆடு³வ மக்களக³லிஸி தரளன**
**ஹிடி³து³ ஹொக³லமேலெ இட்டு**
**ஜடி³து³ ஜங்கிஸி அந்த்யஜரெளெதொ³ய்வாக³**
**நடு³கு³தீர்த்த³னு பா³லகனு ||46**

உடனே அங்கு ஆடிக் கொண்டிருந்த மக்களை விலக்கி, அந்த சிறுவனை பிடித்து, தங்களின் முதுகின் மேல் போட்டுக் கொண்டு, அடித்து அமுக்கி அந்த வேலையாட்கள் செல்ல, அந்த சிறுவனோ நடுங்கிக் கொண்டிருந்தான்.

**பாதகரொளகி³ர்த³ பரமாத்மனந்தெ¹ம**
**தூ³தரெளெயெ அஜாமிளனந்தெ**
**கா¹தரிஸி கங்கெ³ட்டு மருகு³தீர்த்தனு**
**ப⁴யபீ⁴தனாகி³ர்த³ பா³லகனு ||47**

கெட்டவர்களில் இருக்கும் பரமாத்மனைப் போல, யமதூதர்கள் இழுக்கும்போது இருந்த அஜாமிளனைப் போல, கவலைப்பட்டு புலம்பிக் கொண்டிருந்தான், பயம் கொண்டிருந்தான் அந்த சிறுவன்.

**காளரக்கஸரு ப்ரஹ்லாத³ன பிடி³வந்தெ**
**கோ³ரூவளித³ ஹொங்க³ளந்தெ**
**கா³ளிகொ³ட்³டி³த³ ஸொட³ரந்தெ தல்லணிஸுத**
**கோ³ளிட்டு ஹரிகெ³ தூ³ரித³னு ||48**

கடும் அசுரர்கள் பிரகலாதனை பிடித்ததைப் போல; கவலைப்பட்டு அழும் பெண்களைப் போல; காற்றில் ஆடும் எரியும் கற்பூரத்தைப் போல; கவலைப்பட்டவாறு, அழுதவாறு, ஸ்ரீஹரியிடம் முறையிட்டான் அந்த சிறுவன்.

**காகெ³ய கய்ய கோகி³லெயந்தெ நெக³ரு**
**நீராகெ³ க³ஜவ பிடி³த³³ந்தெ**
**லாகி³ஸி பஶுவ வ்யாக⁴ரனு பிடி³த³³ந்த³தி³**
**கூகு³தீர்த்த³னு பா³லகனு ||49**

காக்கையிடம் மாட்டிக் கொண்ட குயிலைப் போல; தண்ணீரில் யானையை முதலை பிடித்ததைப் போல; புலியானது பசுவை பிடித்ததைப் போல; அந்த சிறுவன் மாட்டிக் கொண்டிருக்க, உதவிக்காக கூவினான்.

**ராவு துடு³கித³ சந்த்³ரனந்தெ அரகி³ளியன்னு**
**பா³வுக³ பிடி³தெ³ளெத³³ந்தெ**
**தாவரெயொளக³ண உத³³கத³³ந்த³தி³ பா³ல**
**ஜீவதல்லணிஸுதலிஹனு ||50**

மடங்கி அமர்ந்திருக்கும் சந்திரனைப் போல; கிளியை பூனை பிடித்ததைப் போல; தாமரை இலையில் இருக்கும் தண்ணீரைப் போல; அந்த சிறுவன் தன் வாழ்க்கையை நினைத்து மருகிக் கொண்டிருந்தான்.

**நுடி³த³ நுடி³கெ³ நாராயணஹரி எம்பு³வன**
**பிடி³தொ³ய்து³ வ்ருந்த³தொ³ளிட்டு**
**அட³வியொளகெ³ அஞ்ஜெ அளுவ பா³லகன**
**கண்டு கடு³கர மனகரகி³து ||51**

எதை கேட்டாலும், நாராயண ஹரி என்று கூறுபவனை பிடித்து இழுத்து, தங்களின் கூட்டத்தில் வைத்து செல்லும்போது, அந்த காட்டில் பயந்து அழும் அந்த சிறுவனைக் கண்டு அந்த கடுமையான வேலையாட்களின் மனம் இரங்கியது.

**ஈ தரளன ப்ராணவனளித³ரெ ப³லு**
**பாதக ப³ஹுதெ³ந்தெ³னுத**
**ஆதனாஜ்ஞெய நோடி³கொம்பெ³வு**
**எனுதலி மாதாடி³த³ரு தம்மொள்தாவு ||52**

இந்த சிறுவனின் உயிரை எடுத்தால், நமக்கு மிகப்பெரிய பாவம் வரும் என்று கூறியவாறு, மந்திரியின் ஆணையை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லி, அந்த வேலையாட்கள் தமக்குள் தாமே பேசிக் கொண்டனர்.

**சாருவத³ன சித்ரமனெட³கா³லோள**
**கா³ரு பெ³ட்டிர்து³த³ கண்டு³ உத்தாரவனெ**
**மாடி³ தெகெ³து³கொண்ட³ ஹோகி³**
**தோரித³ரா மந்த்ரீஶ்வரகெ³ ||53**

அந்த சிறுவனின் அழகான முகத்தை பார்க்கின்றனர். அந்த சிறுவனின் இடது காலில் ஆறு விரல்கள் இருப்பதைக் கண்டு, அதை மட்டும் வெட்டி எடுத்துக் கொண்டு சென்று அந்த மந்திரியிடம் அவனை கொன்றதற்கான அடையாளமாக காட்டினர்.

**ரஜ்ஜெகி³க்கதெ³ அவன ரூபனளித³ரெந்து³**
**மெச்சுடு³கோ³ரெயனு கொட்டு**
**முச்ச ப³ந்த³ரு மாரியனெம்பு³த³ரியதெ³**
**நெச்சிகொண்டி³ர்த³ ப்ரதா⁴னி ||54**

எவ்வித அடையாளமும் கண்டுபிடிக்க முடியாதவாறு, அவனை கொன்றோம் என்று செய்தியை சொல்லியவர்களை மெச்சி, அவர்களுக்கு பரிசினை அளித்து அனுப்பினார் மந்திரி. அவனை அவர்கள் கொல்லவில்லை என்பதை அறியாமல், அவர்களை நம்பினான் அந்த மந்திரி.

**ஹாலு ஸக்கரெ குடி³த³னு மந்த்ரியு இத்த**
**ஶ்ரீலோலன கிங்கரனு**
**ஆலி பர்வதத³ அரண்யத³ல்லிர்த³னு**
**காலகா³யத³ நோவினலி ||55**

அங்கு அரண்மனையில் பால், சர்க்கரை (பாயசம்) ஆகியவற்றை அந்த மந்திரி குடித்துக் கொண்டிருக்க; இங்கு (காட்டில்) அந்த ஶ்ரீஹரியின் பக்தன் (சிறுவன்) தன் காலின் காயத்தை பார்த்து, அதன் வலியில் துடித்துக் கொண்டிருந்தான்.

**அளுவ த்⁴வனிய ஆலிஸுவ தும்பி³யு**
**அரகி³ளி நுடிஸுத்தலிஹவு**
**எளெதளிரனெ தந்து³ ஹாஸுவ கரிக³ள**
**ஸுளிகா³ளி பீ³ஸுவ க²க³னு ||56**

இந்த சிறுவனின் அழுகுரலைக் கேட்ட தும்பியானது, கிளி ஆகியவை அவனை வந்து என்னவென்று விசாரித்தன; இலை தழைகளை வந்து அவன் படுப்பதற்காக போட்டன; பறவையானது (தன் இறக்கையால்) சுகமான காற்றினை வீசினான்.

**பஸரிஸி கரிய மயூர பக்ஷிக³ளெல்ல**
**பி³ஸிலிகெ³ மரெய மாடு³வவு**
**ஒஸருவ கண்ணீரு ஒரஸுவ கபிக³ள**
**ப³ஸ வளிதிர்த பா³லககெ³ ||57**

பற்பல பறவைகள், மயில் போன்றவை, அந்த சிறுவன் மேல் வெயில் படாமல் அவனை காத்தன. அவனது கண்ணீரை துடைத்தன. குரங்குகளின் கூட்டமும் அங்கு வந்து அவனுக்கு காவல் காத்தன.

**எல்லிய ரப⁴ஸவிதே³னெந்து³ வனதே³வி**
**மெல்லடி³யிடு³த தாபந்து³**
**க³ல்லவ பிடி³து³ தொடெ³யொளிட்டு ரம்பி³ஸி**
**ப³ல்லித³னாகெ³ந்து³ ஹரஸி ||58**

எங்கிருந்த இந்த சத்தங்கள் வருகின்றன என்று நினைத்தவாறு, வனதேவியானவள் மெதுவாக அடியெடுத்து அங்கு வந்து, அந்த சிறுவனின் கன்னத்தை தடவிக் கொடுத்து, அவனை தன் துடை மேல் அமர்த்தி, சமாதானம் செய்து, அவன் யார் என்று கேட்டாள்.

**எதெ³யூரி பா³ய்தெரெவுதலிரெ தரளகெ³**
**மது⁴பி³ம்ப³ கரெவுதலிஹுது³**
**பெ³த³ரபே³டெ³ந்து³ ஆகாஶவாணி நுடி³த³ஸு**
**மத³னனய்யன கிங்கரகெ³ ||59**

அவனை இழுத்து அணைத்துக் கொண்டு, அந்த சிறுவனுக்கு தேன், உணவுகளை கொடுத்தாள். பயப்படாதே என்று அப்போது ஒரு அசரீரி கேட்டது. அந்த ஸ்ரீஹரியின் பக்தனான அந்த சிறுவனை சமாதானம் செய்தது.

**பரிபரி பக்ஷி ம்ருகா³தி³க³ளெல்லவு**
**நெரெது³பசார மாடு³வவு**
**த⁴ரெகி³ளித³னு சந்த்³ரயெனுதா கா⁴யவ**
**ஹுல்லெமரிக³ளு ஜிஹ்வெயிந்தொ³ரஸி ||60**

அங்கிருந்த பறவை, விலங்குகள் அனைத்தும் திரும்பத்திரும்ப வந்து அந்த சிறுவனுக்கு உபசாரங்களை செய்தன; மேலிருக்கும் சந்திரன் தரைக்கு இறங்கி வந்தான் என்று கூறியவாறு, மான் குட்டிகள் அவனின் காயத்தினை தங்கள் நாக்கினால் தடவிக் கொடுத்தன.
**யாராத³ரூ தன்ன நம்பிதவர**
**பா⁴ராபா⁴ரதொ³டெ³ய ஸ்ரீஹரியு**
**ஊரிகி³ந்த காடு³ லேஸாயிது எந்து³**
**முராரிய நெனெவ கிங்கரகெ³ ||61**

தன்னை நம்புபவர்கள், அவர்கள் யாராக இருந்தாலும், அவர்களின் பிரச்னைகளை களைபவனான ஸ்ரீஹரி; ஊரைவிட இந்த காடு மேலானது என்று நினைத்த அந்த சிறுவனையும் (ஹரி பக்தனையும்) காத்தான்.

**வ்யாக்⁴ர கேஸரி து³ஷ்டம்ருக³த பா³தெ⁴ய**
**ப³ஹு வெக்³க³ளவெந்து³ ஹேளித³ரு**
**நிக்³ரஹ மாட³பே³கெனுத புளிந்த³னு**
**ஷீக்⁴ரதி³ந்த³லி தெரளித³னு ||62**

புலி, சிங்கம் போன்ற துஷ்ட மிருகங்களின் பாதை மிகவும் அதிகமாக இருக்கும் என்று கூறினார்கள். ஆகவே, அவற்றை அழிக்க வேண்டும் என்று அந்த காட்டுத் தலைவனான புளிந்தன் அங்கு விரைந்து வந்தான்.

**சித்ததி³ நெனெது³ புளிந்த³னு ஹொரடனு**
**ஹத்து ஸாவிர ப³லகூ³டி³**
**மத்தொந்து³ அத்³பு⁴தவாயிது வ்ருந்த³க்கெ**
**முத்திகெ³யனெ ஹாகித³ரு ||63**

அந்த காட்டிற்கு சென்று வேட்டையாட வேண்டும் என்று நினைத்துக் கொண்டு, 10,000 பேர்களுடன் புறப்பட்டான் அந்த காட்டுத் தலைவனான புளிந்தன். காட்டில் ஒரு அற்புத சம்பவம் நடக்கப் போகிறது அவர்களுக்கு; அவர்கள் ஒரு கூடாரம் அமைத்து அங்கு தங்கினர்.

**தொப்பலுடு³கெ³ உட்டு தெள்வஸுரின**
**த³ரோப்பாகி³ கூர்க³ணெவிடி³து³**
**கப்பு மையவரெல்ல கவிது³ ம்ருக³ங்க³ள**
**தப்பதெ³ பீ³ளலெஸெத³ரு ||64**

இலை தழைகளின் ஆடைகளை அணிந்து, கூர்மையான வாள், கம்புகளை பிடித்து, காட்டிற்குள் சென்றனர். கருப்பான தோல்களை கொண்டிருந்தனர். மிருகங்களை தவற விடாமல் கொன்று குவித்தனர்.

**ஹிடி³ பி³ல்லு நடெ³ முந்தெ³ மக்களு**
**மந்தி³யு பி³டு³ நாய தி³க்கு தி³க்கினலி**
**தடெ³ ப³ந்த³ ம்ருக³வன்னு பொடெ³ தட்டலெஸெவந்தெ**
**பி³ட³தி³ரு எதெ³ய தை⁴ர்யவனு ||65**

வில்லினை பிடித்து, அனைவரும் முன்னே நடங்கள். பயத்தை விடுங்கள். நான்கு திசைகளிலும் செல்லுங்கள். எதிரில் வரும் மிருகங்களை உடனே கொல்லுங்கள். இதயத்தில் இருக்கும் பயத்தை விடுங்கள்.

**க³ப்³பி³னாய்க³ள ஸன்னெமாடி³ பி³ட்டரு**
**அப்³ப³ரத³லி ஹோகி³ துடு³கி**
**தப்³பி³ப்³பு³கொ³ளிஸுத தவகதி³ பிடி³த³ரு**
**ஹெப்³பு³லி கரடி³ ஹந்தி³க³ள ||66**

காட்டு நாய்களை முன்னே அனுப்பினர் (துரத்தி விட்டனர்); ஒரு கும்பலாக சென்று, அனைத்து இடங்களிலும் தேடியவாறு, புலி, கரடி, பன்றி ஆகியவற்றை வீரத்துடன் பிடித்தனர்.

**பி³ட்ட பா³ய்க³ளு நிடி³து³ நாலகெ³யு**
**தெள்வட்டஸுவின பா³வுலியு**
**அட்டி ஹிடி³து³ பரிபரி ம்ருக³வனு**
**தந்தொ³ட்டித³ராள்த³ன முந்தெ³ ||67**

வாய் திறந்து, நீண்ட நாக்குகளுடன், மிகப்பெரிய உருவம் கொண்ட வவ்வால்களை அப்படியே பிடித்து; மற்றும், இவ்வாறு பற்பல வித மிருகங்களை பிடித்து, அந்த தலைவனின் முன்னே கொண்டு வந்து போட்டனர்.

**இது³ ஸிம்ஹகெரகி³த³ பரிய மஸ்தகத³**
**முத்துது³ரித³ டா²வு நோடி³த³கு**
**இது³ ஸாரங்க³ மரிய ஹாகித³ டா²வு**
**இது³ ப¹ந்தி³ கெத³ரித³ நெலவு ||68**

இது சிங்கத்தை கொன்று தலையை பிய்த்த இடம், பார்த்துக் கொள்ளவும். இது மான் குட்டியை கொன்ற இடம். இது பன்றியை கொன்ற நிலம்.

**ஹொக்கு ஜவ்வனத³ புளிந்தெ³யரெல்லரு**
**அக்கரதி³ந்தொ³ல்லப⁴கெ³**
**பொக்கு கானந்தொ³ளு சரிஸுத புனகி³ன**
**பெ³க்க ஹிடி³த³ரொலவினலி ||69**

வாலிபர்களாக இருந்த வேட்டைக்காரர்கள் அனைவரும் அனைத்தையும் தலைவனிடம் சமர்ப்பித்தனர் / காட்டினர். அந்த காட்டில் மறுபடி சென்று, புனுகு பூனைகளை பிடித்தனர்.

**கங்க³ள டா⁴ள உங்கு³ர நடு³வின**
**அங்க³னெ ப³ருதிரெ கண்டு³**
**ஸிங்க³விதெ³ந்து³ நோடு³த மைமரெதிர்த³**
**ஸிங்க³த பீ³ளலெஸெத³ரு ||70**

சிவந்த கண்களுடன். மெலிதான இடையுடன், ஒரு பெண் வருவதைக் கண்டு, இது சிங்கமோ என்று நினைத்தவாறு, மெய் மறந்து அவளை பிடிக்கச் சென்றனர்.

**ஹரிதந்து³ ஹரி பெ³ம்ப³த்தி புளிந்த³னு**
**ஹரிவரியிந்த³ ப³ருதிரலு**
**ஹரிய த்⁴யானத³ல்லி இருவ பா³லகன கண்டு³**
**ஹருஷதி³ ஹரிய நில்லிஸித³ ||71**

ஒரு குதிரையை பிடித்து, அதன் மேல் ஏறிக் கொண்டு, அந்த தலைவனான புளிந்தன் மிகவும் அவசரத்துடன் வந்து கொண்டிருக்க, ஸ்ரீஹரியின் த்யானத்தில் இருக்கும் அந்த சிறுவனைக் கண்டு மிகவும் மகிழ்ச்சியுடன் தன் குதிரையை நிறுத்தினான்.

**ஏனிது³ நோடிதா³ஶ்சர்யவாகி³தெ³ ஈ**
**கானனதொ³ளகொ³ந்து³ ஶிஶுவு**
**தா³னவாந்தகன த்⁴யானதொ³ளிர்த³காரண**
**ஹானியில்லதெ³ உளிதி³ஹுது³ ||72**

என்ன இது பார்ப்பதற்கே ஆச்சரியமாக இருக்கிறதே?. இந்த காட்டில் ஒரு சிறுவன். ஸ்ரீஹரியின் த்யானத்தில் இருப்பதால், எவ்வித பிரச்னைகளும் இல்லாமல் உயிர் பிழைத்திருக்கிறான்.

**பாபகௌஸி ப³ந்து³ பூர்வத³லி**
**புண்யரூபவ கண்ட³ந்தெ மனதி³**
**ஜாபவனிளுஹித³ ராயனு பே³க³தி³**
**ஸ்ரீபதிகெ³ ஶரணெந்தெ³னுத ||73**

முன்னர் வந்த பாவங்களை கழித்துவிட்டு, புண்ய ரூபத்தை கண்டதைப் போல, தன் வில் அம்புகளை இறக்கி வைத்த அந்த வேடர் தலைவன், உடனடியாக மனதில் ஸ்ரீஹரிக்கு சரணாகதி அடைந்தான்.

**இளிது³ ஸக்³க³ளெ உத³³கத³³லி கா³யவ**
**தொளெது³ முஞ்ஜெரகி³³ந்த³³லொரெஸி**
**தரள்ன எத்தி தொடெ³யொளிட்டு ரம்பி³³ஸி**
**ப³ளிதெ³ பா³ரய்ய எனுத ||74**

உடனே, அந்த சிறுவனின் காலில் இருந்த காயத்தை துடைத்து, துணியால் அதனை துடைத்து, அந்த சிறுவனை எடுத்து தன் துடையில் வைத்துக் கொண்டு, அணைத்து, மிகவும் கஷ்டப்பட்டிருக்காயே சிறுவனே என்றான்.

**ப³ட³வகெ³ பா⁴க்யத³³ லக்ஷ்மி தொ³ரெதந்த³³தி³³**
**எட³³ஹி நிதா⁴ன கண்ட³³ந்தெ**
**படெ³³தெ³³ ஆயாஸவில்லதெ³³ பா³லகனனெந்து³³**
**கடு³³ஹருஷவனு தாளித³³னு ||75**

கடும் ஏழைக்கு, பாக்யத்தின் லக்ஷ்மியே வந்ததைப் போல, தடுமாற்றம் கொண்டவன் நிதானத்தை கண்டதைப் போல, எவ்வித கஷ்டமும் (முயற்சியும்) இன்றி, நான் பாலகனை கண்டேன் என்று மிகவும் மகிழ்ச்சி கொண்டான்.

**தே³வர தே³வன க்ருபெயிது³³ எனுதலி**
**பா⁴விஸித³³னு தன்ன மனதி³³**
**ஜீவந்தவாகி³ர்த³³ ம்ருக³வனெல்லவ பி³ட்டு**
**நிர்ஜீவிக³ளவரவர்கி³த்து ||76**

இந்த சிறுவன் எனக்கு கிடைத்தது, அந்த தேவதேவனின் கருணையே காரணம் என்று கூறியவாறு, இதையே தன் மனதில் நினைத்தான். பிறகு தன்னிடம் உயிருடன் இருந்த மிருகங்கள் அனைத்தையும் விட்டுவிட்டு, இறந்திருந்த ப்ராணிகளையும் அங்கிருந்த பலருக்கும் பிரித்துக் கொடுத்தான்.

**ஸரஸிஜனாப⁴ன க்ருபெயிது³³ எனுதலி**
**கரெஸித³³ காலாளுக³ளனு**
**அரஸி மேதா⁴வதிக³ருஹி ஸுத்³தி⁴யனெந்து³³**
**புரகாகி³³ சரரனட்டித³³னு ||77**

இது ஸ்ரீஹரியின் கருணையே என்று சொல்லியவாறு, தன் வேலையாட்களை அழைத்தான். உடனடியாக சென்று தன் மனைவியிடம் (மேதாவதி) இந்த செய்தியை சொல்லுங்கள் என்று சொல்லி, அவர்களை தன் நகரத்திற்கு விரைந்து அனுப்பினான்.

**புரகாகி³³ சரரு ப³ந்த³³ரு ஈ வார்த்தெ**
**யனருஹிதரா மேதா⁴வதிகெ³³**
**கருணி கிருஷ்ண நிமகெ³³ குமாரனனித்தனு**
**ஸிரிவந்தெ கேளு பி³ன்னபவ ||78**

அந்த தூதுவர்களும் உடனடியாக ஊருக்கு வந்து, மேதாவதியிடம் இந்த செய்தியை கூறினர். கருணியான ஸ்ரீகிருஷ்ணன், உங்களுக்கு குமாரனை கொடுத்திருக்கிறான். ஸிரிவந்தையே, கேள் இந்த செய்தியை – என்றனர்.

**ம்ருக³³த³³ பே³ண்டெய போகி³³ மக³³ன**
**படெ³³த³³ரெம்போ³³த³³கணித ஆஶ்சர்ய ஜக³³தி³³**
**நகெ³³ய மாதல்ல நாராயண ஹரி நிம்ம**
**ப³கெ³³யரிதி³³த்த பா³லகன ||79**

மிருக வேட்டைக்காக சென்று, ஒரு மகனை பெற்றார் என்னும் செய்தி, உலகத்தில் மிகவும் வியப்பான செயல் ஆகும். இது நகைச்சுவையான செய்தி அல்ல. நாராயணான ஸ்ரீஹரியே, அந்த சிறுவனை உங்களிடம் கொடுத்திருக்கிறான்.

**லேஸாயிது என்ன தோஷஹிங்கி³து எந்து³**
**ஏஸு ஜன்மத³ புண்யப²லவோ**
**போஶரனய்யன க்ருபெயிந்த³ மக³னாத³**
**வாஸியாயிது பா³ள்வெயெந்து³ ||80**

என் மனம் மிகவும் மகிழ்ந்தது. என் தோஷங்கள் அகன்றன. இது எவ்வளவு பிறவிகளின் புண்ய பலனோ. ஸ்ரீஹரியின் கருணையால் மகன் கிடைத்திருக்கிறான் என்ற செய்தி கிடைத்திருக்கிறது. இனி நான் வாழ்வேன் என்று கூறினாள்.

**கேரிகேரியொளெல்ல ஸாரி ட³ங்கு³ர ஹொய்ஸு**
**பே³ரிஸித³ளு ஸக்கரெய**
**தோரணவனெ கட்டி தவகதி³ந்த³லி ப்ரஜெ**
**பரிவாரனெல்ல கரெஸித³ளு ||81**

நகரத்தின் அனைத்து தெருக்களிலும் சென்று, முரசு கொட்டி, சர்க்கரையை பகிர்ந்தாள். தோரணங்களை கட்டி மிகவும் மகிழ்ச்சியுடன் அனைத்து மக்களையும், அவர்களின் குடும்பங்களையும் அழைத்தாள்.

**ஹிடி³து³ துரங்க³வனேரிஸி தரள ஜடி³த³**
**தம்ப³டெ பே³ரியிந்த³**
**எட³ப³லத³ல்லி பி³ல்லாள்க³ளனொட³கொ³ண்டு³**
**நடெ³தந்த³ராசந்த³னாவதிகெ³ ||82**

(காட்டில் அந்த தலைவன்) சிறுவனை பிடித்து குதிரையில் ஏற்றினான். தம்பட்டை, பேரி ஆகியவற்றை முழங்கியவாறு, இட வல புறங்களில் வில்லாட்களுடன், சந்தனாவதி நகருக்கு அந்த தலைவன் விரைந்தான்.

**த²ள²ளிஸுவ ஹொன்ன தளிகெ³**
**ஆரதிக³ள களஸ கன்னடி³க³ள பிடி³து³**
**நளினமுகி²யரொடகொ³ண்டு³ ஹருஷதி³**
**எளெய பா³லகனிதி³ர்கொண்டு³ || 83**

பளபளப்பான பொன், தங்க ஆரத்திகளை, பூர்ண கலசங்களை, கண்ணாடிகளை பிடித்து, அழகான பெண்களுடன் சேர்ந்து, மிகவும் மகிழ்ச்சியுடன், ஊரில் இருந்தவர்கள் அந்த சிறுவனை வரவேற்க வந்து கொண்டிருந்தார்கள்.

**பா⁴ளபரியலி கத³ளி ஆரத்தியெத்தி**
**நிவாளிக³ளனெ ஹாகுவரு**
**பா³லன எத்தி தக்கெயிஸி ஸந்தோஷதி³**
**ஆலயவனெ பொக்கராக³ ||84**

பற்பல விதமான ஆரத்திகளை எடுத்து, திருஷ்டிகளை எடுத்து, அந்த சிறுவனை எடுத்து, கொஞ்சியவாறு, மிகவும் மகிழ்ச்சியுடன் தம் வீட்டிற்குள் எடுத்துச் சென்றார்கள்.

**தரிஸித³ ஹொன்ன தட்டெயலி தாம்பூ³லவ**
**இரிஸி எல்லரிகி³த்து களுஹி**
**ஸுரதரு கைவஶவாத³ந்தெ தரள பெ³ரஸி**
**ஸந்தோஷத³ல்லிஹரு ||85**

தட்டுக்களில் பொன், தாம்பூலம் ஆகியவற்றை கொண்டு வந்து, அனைவருக்கும் அதனை கொடுத்து, அனுப்பி வைத்து, சுரதருவான கல்பவ்ருக்ஷமே தமக்கு கிடைத்தது போல நினைத்து மகிழ்ந்திருந்தனர்.

**கோமலாங்க³வு களகளிஸுவ நகெ³ முத்³து³**
**ஸோம வத³ன ஸண்ணவகெ³**
**நாமகரண மாட³பே³கெந்து³ த்⁴யானிஸி**
**ப்³ராஹ்மணரெல்லர கரெஸித³னு ||86**

மிருதுவான அங்கம், அனைவரையும் மயக்கும் புன்னகை/ சிரிப்பு, அழகான முகம் அந்த சிறுவனுக்கு இருந்தது. இவனுக்கு நாமகரணம் செய்ய வேண்டும் என்று நினைத்து, பிராமணர்களை அழைத்தான்.

**கந்த³ர்ப்பகோடிலாவண்யத³ தரளகெ³**
**சந்த³தா³ப⁴ரணவனிட்டு**
**சந்த்³ரஹாஸனெம்போ³ பெஸரிட்டு கரெத³ரு**
**முகுந்த³ன கருணத³ ஸுதகெ³ ||87**

கோடி மன்மதனின் அழகிற்கு ஈடாக இருந்த அந்த சிறுவனுக்கு, அழகான ஆபரணங்களை உடுத்தி, சந்த்ரஹாஸன் என்று பெயர் வைத்து அழைத்தனர், முகுந்தனின் கருணையால் கிடைத்த அந்த மகனுக்கு.

**ஆடி³ஸுவளு மேதா⁴வதி அணுக³ன பா³லக்ரீடெ³ய**
**நோடி³ ஹருஷதி³**
**ரூடி⁴யொளகெ³ தன்ன ஸுதன லாவண்யக்கெ**
**ஜோடி³ல்லவெந்து³ ஹிக்³கு³வளு ||88**

அந்த சிறுவனுடன் மேதாவதி விளையாடினாள். அவனது பால லீலைகளை தினமும் பார்த்து மகிழ்கிறாள். இந்த உலகில் தன் மகனின் அழகிற்கு ஈடு இணை யாரும் இல்லை என்று நினைத்து மகிழ்கிறாள்.

**கத்தலமனெகெ³ தீ³விகெ³யனித்தந்தெ**
**தே³வோத்தம கவிகளிகெ³**
**சித்தக்கெ சதுரநுடிக³ளு தொ³ரகித³ ஹாகெ³**
**ப³த்தித³ கெரெ தும்பி³த³ந்தெ ||89**

இருட்டான் வீட்டிற்கு தீவட்டி கொண்டு சென்றதைப் போல, கவிகளின் மனதில் ஸ்ரீஹரியானவன் அழகான பாடல் வரிகளை கொடுத்ததைப் போல, வற்றிய ஏரி நிறைந்ததைப் போல (இவள் மகிழ்ந்தாள்).

**சந்த³னாவதிய பட்டணத³ புளிந்த³ன**
**மந்தி³ரத³லி ஸ்தி²ரதரதி³**
**இந்தி³ராபதி ஹொளவனகட்டெரங்க³**
**கோ³விந்த³ன ப⁴ஜனோப்பித³னு ||90**

சந்தனாவதியின் பட்டணத்தில், புளிந்தனின் வீட்டில், இந்திராபதியான ஹொளவனகட்டெ கோவிந்தனின் பக்தனான சந்த்ரஹாஸன் நிலைத்தான்.

## இரண்டாம் ஸந்தி

**மந்த்ரி மச்சரவன்னு மனதொ³ளகி³ட்டு**
**ஶ்ரீகாந்தன கருணவுள்ளவகெ³**
**தந்த்ரவ ஹரூடி³ கொல்லுவெனெந்து³ நேமிஸி**
**குந்தளபுரகெ களுஹித³னு ||1**

(சிறுவனை கொல்லச் சொன்ன) அந்த மந்திரி, (அவன் உயிருடன் இருப்பதை அறிந்து) தன் மனதில் வந்த கோபத்தை அடக்கிக் கொண்டு, ஶ்ரீகாந்தனின் கருணை உள்ளவனை (அந்த சிறுவனை) ஏதாவது தந்திரத்தை செய்து கொல்வேன் என்று நினைத்து, குந்தளபுரத்திற்கு தன் சேவகர்களை அனுப்பினான்.

**அக்ஷராப்⁴யாஸவ மாட³பே³கெனுத**
**க³ந்தாக்ஷதெ ப²லபுஷ்பதி³ந்த³**
**ஸாக்ஷாது க³ணபதிக³ர்ப்பிஸி தரளன**
**ஶிக்ஷாகு³ருவிகெ³ ஒப்பிஸித³ ||2**

அக்ஷராப்யாஸம் செய்ய வேண்டும் என்று கந்த, அக்ஷதை, பழம், புஷ்பம் ஆகியவற்றை கணபதிக்கு அர்ப்பித்து, அதனை அந்த சிறுவனின் குருவிற்கு சமர்ப்பித்தான்.

**மண்ண ஹரஹி அக்ஷரவ ப³ரெது³**
**என்னண்ண நீ தித்³து³ பா³ எனலு**
**பன்னகஶயன நாராயண ஹரிகிருஷ்ண**
**என்னொடெ³ய ஶரணெந்து³ ப³ரெத³ ||3**

மண்ணினை பரப்பி, அதில் எழுத்துக்களை எழுதி, வா சிறுவனே இதில் எழுதிப் பழகு என்று கூற, அந்த சிறுவனோ அதில் 'பன்னங்கஷயன நாராயண ஹரிகிருஷ்ண என்னொடெய ஷரணு' என்று எழுதினான்.

**ஓநாமவ ப³ரெயெந்த³ரெ பரெயதெ³**
**ஶ்ரீநாத² ஶரணெந்து³ ப³ரெத³**
**நானொந்த³ ஹேளலு நீனொந்த³ ப³ரெவெ**
**நின்ன ஞான பே³ரெ சித்த பே³ரெ ||4**

ஓம் என்று எழுது என்று கூறினால் அதை எழுதாமல், ஶ்ரீநாத ஷரணு என்று எழுதினான். நான் ஒன்று கூறினால், நீ வேறொன்று எழுதுகிறாய். உன்னுடைய ஞானமே வேறு என்னுடைய ஞானமே வேறு – என்றார் ஆசிரியர்.

**ஒந்த³ ஹேளித³ரொந்த³ ப³ரெவெயாத³ரெ நின்ன**
**தந்தெ³கெ³ ஒய்து³ ஒப்பிஸுவெ**
**குந்து³ நம்ம மேலெ இடு³வ நிம்மய்யன**
**எந்து³ தி⁴க்காரிஸி ஹேளித³னு ||5**

நான் ஒன்றை கூறினால், நீ அதனை எழுதாவிட்டால், உன்னை உன் தந்தையிடமே ஒப்படைத்து விடுவேன். இதனால் உன் தந்தை, என்மேல் குற்றம் சுமத்துவார் என்று அந்த ஆசிரியர் கூறினார்.

**நீதிலி ப³ரெயெந்த³ரெ ப³ரெயதெ நின்ன**
**சாதுர்யத³ பு³த்³தி⁴ பே³ரெ**
**ஈதன தோட³ரு நமகெ³ பே³ட³வெந்த³வர**
**தாதகெ³ ஒய்து³ ஒப்பிஸித³ ||6**

ஒரு முறையாக எழுது என்று கூறினால் அப்படி செய்யாமல் இருக்கிறாய். உன்னுடைய புத்திசாலித்தனமான புத்தியே வேறு. இவனுடைய தொடர்பே நமக்கு வேண்டாம் என்று சொல்லி, அந்த சிறுவனை குருவானவர் தந்தையிடமே ஒப்படைத்தார்.

**ஹிந்த³க்கெ ஹிரண்யகஶ்யப தன்ன தனய**
**முகுந்த³ன ப⁴ஜனெந்தெ³னதெ³³**
**ப³ந்தி⁴ஸி ப³ஸுர ப³கிஸிகொண்டா³தன மனஸு**
**ப³ந்த³³ ஹாங்கி³ரலெந்து³³ ஸுதன ||7**

முன்னர், ஹிரண்யகசிபு, தன் மகன் பிரகலாதன், முகுந்தனின் பக்தன் என்றும் நினைக்காமல் (பொருட்படுத்தாமல்), அவனை சிறையில் அடைத்து, மகனை அவன் இஷ்டத்திற்கு விடாமல், அவன் மனதை மாற்ற முயன்றான் (அதைப் போலவே இங்கும் நடக்கிறது).

**த்⁴ருவ ப்ரஹ்லாத³³ அக்ரூராம்ப³ரீஷ மாத⁴வ**
**முராரியன்னு ப⁴ஜிஸி**
**த³வரிகி³ந்து³த்தம குமாரனு இன்னு ப⁴வ**
**ப⁴யாதி³க³ளில்ல நமகெ³³ ||8**

த்ருவ, ப்ரகலாத, அக்ரூர, அம்பரீஷ, ஆகியோர் மாதவ, முராரியை பஜித்தார்கள். இவர்களைப் போல உத்தம குமாரன் நமக்கு பிறந்திருக்கிறான். இனி நமக்கு பயம் என்பதே இல்லை.

**ஸ்ரேஷ்டரெல்லரு கூடி³³ ஶுப⁴லக்³னவனு**
**கட்டிகொட்டரு கரலேஸு எனுத**
**அஷ்டவருஷத³³ குமாரகெ³³ முஞ்ஜிய**
**கட்டித³ர் வேதோ³க்தத³லி ||9**

சிறந்தவர்கள் அனைவரும் சேர்ந்து, சுப லக்னத்தை பார்த்துக் கொடுத்தனர். அந்த எட்டு வயதான சிறுவனுக்கு, வேதங்களில் சொல்லப்பட்ட விதமாக, உபநயனம் செய்வித்தனர்.

**வேத³ஶாஸ்த்ர த⁴னுர்வித்³யா ஸாத⁴னெக³ள**
**ஓதி³ஸித³ரு கு³ருமுக²தி³³**
**மாத⁴வனல்லதெ³³ அன்யத்ரரில்லவெந்து³³**
**பே⁴தா³பே⁴த³வனெல்ல ||10**

வேத சாஸ்திரம், தனுர்வித்யா ஆகிய சாதனைகளை குரு முகத்தினால் கற்றுக் கொடுத்தனர். மாதவன் ஸ்ரீஹரி இன்றி வேறு யாரும் நமக்கு கதி இல்லை என்று, பேத-அபேத விஷயங்கள் அனைத்தையும் சொல்லிக் கொடுத்தனர்.

**எளது³ளஸிய வனமாலெயனெ ஹாகி**
**ஹொளெவ ஸ்ரீ முத்³ரிகெயிட்டு**
**நளினநாபன பூஜெமாடு³வ ப³ன்னிரெந்து³³**
**கெ³ளெயரெல்லரிகெ³³ போ³தி⁴ஸித³³ ||11**

இளம் துளசியின் வனமாலையை அணிவித்து, ஒளிரும் ஸ்ரீ முத்ரிகையை இட்டு, ஸ்ரீஹரியின் பூஜையை செய்வோம் வாருங்கள் என்று அந்த சிறுவன், நண்பர்கள் அனைவரையும் அழைத்தான்.

**பதிதராத³பக³தி குமாரரிகெ³ல்ல**
**ஸத்க³தியாக³பே³கெந்தெ³னுத**
**ஹிதவ சிந்திஸி நம்பி³த³வரிகே³காத³ஶி**
**வ்ரதவ மாடி³ஸித³னாஜ்ஞெயலி ||12**

பதிதர்களான சிறுவர்கள் அனைவரும் அபகதி கிடைக்காமல், ஸத்கதியே கிடைக்கட்டும் என்று சொல்லியவாறு, அனைவருக்கும் நலனே சிந்தித்தவாறு, தன்னை நம்பியவர்களுக்கு / நண்பர்களுக்கு ஏகாதசி விரதத்தையும் சொல்லி, செய்ய வைத்தான்.

**ஆ தே³ஶதொ³ளகி³ர்த³ ஜனரிகெ³ பணெயல்லி**
**த்³வாத³ஶ நாமவ ஹச்சி**
**ஸாதி³ ஸாதி⁴ஸிரி ஏகாத³ஶி**
**வ்ரதவெந்து³ போ³தி⁴ஸித³னு எல்லரிகெ³ ||13**

அந்த ஊரில் இருந்த மக்களுக்கு, நெற்றியில் த்வாதஶ ஊர்த்வ புண்ட்ரங்களை தரிக்க வைத்து, தவறாமல் ஏகாதசி விரதத்தை அனுசரியுங்கள் என்று சொல்லி, அனைவருக்கும் போதித்தான் அந்த சிறுவன்.

**எல்லரு ஏகாத³ஶிய ஜாக³ர மாடி³**
**புல்லனாப⁴ன ப⁴ஜிஸுவரு**
**ஸொல்லுஸொல்லிகெ³ நாராயண ஹரியெம்போ³த³ல்லதெ³**
**பரகோ³ஷ்டியில்ல ||14**

அனைவரும் ஏகாதசியன்று ஜாகரணை செய்து, ஶ்ரீஹரியை பஜனை செய்தனர். ஒவ்வொரு சொல்லுக்கும் நடுவில் நாராயண, ஹரி என்று சொன்னார்களே தவிர, வேறு வீண் பேச்சு இல்லை.

**மலெதவரனு முரிதொ³த்தி ஶக்தியகொனெ**
**பெ³ளஸுவ ஹரிப⁴க்தரொட³னெ**
**ப³லவந்த த⁴ரெய கெ³த்³து³ த⁴ரெயொளு**
**ப³ஹு பராக்ரமியெனிஸித³னு ||15**

இதற்கு எதிர்ப்பு தெரிவித்தவர்களை வென்று, அவர்களிடம் ஹரிபக்தியை வளர்த்தவாறு, வீரனானவன் பூமியை வென்று, இந்த பூமியில் மிகவும் சிறந்த வீரன் என்று பெயர் பெற்றான்.

**ஶூரத்வத³லி தந்தெ³யாளுவ ராஜ்யவயெந்**
**த³ருஹி இம்மடி³யனு கெ³த்³து³**
**ஊர துருவனெல்ல திருஹி மாணிக முத்து**
**ஹேரிஸித³னு தன்ன புரகெ ||16**

வீரத்தில் தன் தந்தையைப் போலவே இருக்கிறான் என்று அனைவரும் பாராட்ட, சந்த்ரஹாஸனோ போரில் அனைவரையும் வென்று, ஊர் ஊராக சென்று போரிட்டு, அங்கிருந்து மாணிக்கம், முத்து என அனைத்தையும் தன் ஊருக்கு கொண்டு வந்து சேர்த்தான்.

**கெந்தூ⁴ளு ஸுஸுத ப³ந்த³ குமாரகெ³**
**தந்து³ ஆரதிக³ளனெத்தி**
**இந்தி³ரெ மாதெ நாராயண பிதனஹு**
**தெ³ந்து³ சரணக்கெரகி³த³னு ||17**

இவ்வாறு தன் படையுடன், தூசி பறந்தவாறு திரும்பி வந்த தன் குமாரனுக்கு, ஆரத்திகளை கொண்டு வந்து எடுக்க, சந்த்ரஹாஸன் தன் தாய் இந்திரா, தன் தந்தை நாராயணன் என்று சொல்லி அவர்கள் கால்களில் விழுந்து வணங்கினான்.

**அக³ணித ஆயுஷ்யவந்தனு நீனாகு³**
**ஜக³த³தி⁴பதியாகு³ எந்து³**
**மக³ன தக்கெயிஸி முண்டா³டி³ ஸந்தோஷதி³**
**மிகெ³ ஹருஷவனெ தாளித³ளு ||18**

நீ அபாரமான ஆயுளை கொண்டிரு. உலகத்தின் தலைவன் ஆகு என்று மகனை ஆசிர்வதித்து, அவனை கொண்டாடி மகிழ்ச்சியுடன் அவனை உச்சி முகர்ந்தனர்.

**லேஸாத[3] ஶுப[4]லக்[3]னவ கட்டி ஸுதன**
**ஸிம்ஹாஸனத[3]ல்லி குள்ளிரிஸி**
**பூ[4]ஸுர ப[3]ந்து[3]க[3]ளெல்லரு நெரெதி[3]ந்து[3]**
**ஹாஸகெ[3] பட்டகட்டித[3]ரு ||19**
ஒரு அருமையான சுப லக்னத்தை பார்த்து, மகனை சிம்மாசனத்தில் அமர்த்தி, பூமியில் இருக்கும் உறவினர்கள் அனைவரும் நிறைந்திருந்து, சந்த்ரஹாஸனுக்கு பட்டத்தை கட்டினர்.

**மாதெபிதர மாதுமம மீரி நடெ[3]யதெ[3]**
**அனாத[2]ர பரி பாலிஸுத்த**
**ப்ரீதியிந்த[3]லி தே[3]வப்[3]ராம்ஹரொட[3]னெ**
**ராஜ்ய நீதியிந்தா[3]ளுதலிஹனு ||20**

தந்தை தாய்களின் பேச்சினை மீறி நடக்காமல், தன் நாட்டு மக்களை நன்றாக காத்தவாறு, மிகவும் அன்புடன் ப்ராமணர்களுடன், சந்த்ரஹாஸன் தன் நாட்டினை, நீதிப்படி சிறப்பாக ஆண்டு வந்தான்.

**பா[3]லக ப[3]ஹுபராக்ரமி என்ன மாத நீ**
**லாலிஸு குந்த[1]ளேஶ்வரகெ[3]**
**காலகாலகெ கப்பவ கொட்டு ப[3]ஹெவு**
**ஆலஸ்யவாயிது எந்த[3] ||21**

பாலகனே, வீரனே, என் பேச்சினைக் கேள். குந்தளேஷ்வரனுக்கு ஒவ்வொரு காலமும், கப்ப காணிக்கை கொடுத்து, நம்மால் முடியவில்லை – என்றான் தந்தை.

**மீரபா[3]ரது[3] பிதனாஜ்ஞெயெந்தெ[3]னுத**
**உதா[3]ரப[3]த்[3]தி[3]யலிந்து[3]ஹாஸ**
**யார்யரிகெ[3] ஹோகி[3] கொட[3]பே[3]கு எனுத**
**விசாரிஸித[3]னு தன்னபிதன ||22**

தந்தையின் வாக்கினை மீறக்கூடாது. ஆகவே, யார் யாருக்கு எவ்வளவு கப்பங்களை கொடுக்க வேண்டும் என்று சந்த்ரஹாஸன் தன் தந்தையின் விவரங்களை கேட்டான்.

**குந்தளபுரத[3]ரஸகெ[3] து[3]ஷ்டபு[3]த்தி[4]யெம்ப[3]**
**மந்த்ரி ஜோயிஸ புரோஹிதகெ[3]**
**காந்திகொ[3]ட[3]த[3] கனகாப[4]ரணவெல்லவ**
**அந்தஸ்ததி[3]ந்த[3] கட்டித[3]னு ||23**

குந்தளபுர அரசனுக்கு மந்திரியான துஷ்டபுத்தி என்பவன் (என்று தந்தை சொல்ல); சந்த்ரஹாஸனும் ஜோயிஸ என்னும் புரோகிதனை அழைத்து, ஒளி பொருந்திய கனகாபரணங்கள் பலவற்றை ரகசியமாக அவனுக்கு கொடுத்தான்.

**ஆனெ குது[3]ரெ அர்த்த[4]ஸேனெ த[3]ளவ கொட்டு**
**ஞானவுள்ள ப்[4]ருத்யரொட[3]னெ**
**நீவித[3] குந்தளேஶ்வரகெ[3] கொட்டு ப[3]ன்னிரெந்து[3]**
**தா[3]னவாந்தகன கிங்கரனு ||24**

யானை, குதிரை, பாதி சேனை, ஆகியவற்றை கொடுத்து, புத்தி உடைய சேவகர்களிடம் அதனை கொடுத்து, நீங்கள் இதனை குந்தளேஷ்வரனுக்கு கொடுத்து விட்டு வாருங்கள் என்று ஸ்ரீஹரியின் பக்தனான சந்த்ரஹாஸன் கூறினான்.

**கரவ முகி³து³ இந்து³ஹாஸனப்பணெயிந்த³**
**தெரளித³ரல்லிந்த³ முந்தெ³**
**ப³ரதி³ந்த³ ப³ந்து³ பி³ட்டுது³ த³ண்டு³**
**குந்த³ளபுரத³ ஹெப்பா³கி³ல முந்தெ³ ||25**

அவர்களும் கைகளை குவித்து, சந்த்ரஹாஸனின் ஆணைப்படி அந்த ஊருக்கு சென்று, குந்தளபுரத்தின் புற வாயிலில் சென்று சேர்ந்தது அந்த படை.

**பட்டணதொ³ளு ப³ந்து³ பாளயவனெ பி³ட்டு**
**திட்டராரெந்து³ கேளித³னு**
**கொட்டு கப்பவ குந்த³ளேந்த்³ரகெ³ கொடி³ரெந்து³**
**அட்டிதெ³ன்னொடெ³ய புளிந்த³ ||26**

தங்கள் ஊரினை விட்டு, பட்டணத்தை அடைந்து, தலைவன் யார் என்று கேட்டார்கள். எங்கள் தலைவனான புளிந்தன், உங்கள் தலைவனான குந்தளேந்த்ரனுக்கு கொடுங்கள் என்று கூறி அனுப்பினான் - என்றனர்.

**எந்த³ மாதனு கேளி மந்த்ரிகெ³ பேளலு**
**மந்தி³ரகாகி³ கரெஸித³**
**தந்த³ கப்பவ து³ஷ்டபு³த்³தி⁴ய முந்தி³ட்டு**
**நிந்தெ³த்³து³ கரவ முகி³த³ரு ||27**

என்ற செய்தியினை, மந்திரியிடம் சொல்ல, அவர்களை உடனே அரண்மனைக்கு அழைத்தான். அவர்கள் கொண்டு வந்த கப்ப காணிக்கைகளை துஷ்டபுத்தியின் முன்னர் வைத்து, கைகளை குவித்தவாறு நின்றிருந்தனர்.

**கடெ³கண்ணலி நோட³லில்லவரொளு மாத**
**நுடி³யதெ³ ஸன்மானிஸதெ³**
**தடெ³யேகி¹ஷ்டு தி³வஸவெந்து³ மந்த்ரியு**
**ஜடி³து³ ஜேங்கரிஸி கேளித³னு ||28**

அவர்கள் அந்த மந்திரி கடைக்கண்களால்கூட பார்க்காமல், அவர்களிடம் பேசாமல், அவர்களுக்கு மரியாதை கொடுக்காமல், இந்த காணிக்கைகளை கொடுப்பதற்கு ஏன் இவ்வளவு தாமதம் என்று கர்ஜித்து கேட்டான்.

**ஜீய ஹஸாத³ நிம்மடி³கெ³ இந்தி³ன**
**வாயித³ கட்டித³ த⁴னவு**
**ஆயதவாகி³தெ³ இளுஹிஸி நோடி³ரி**
**தே³வரு கைகொம்பு³தெ³னலு ||29**

ஸ்வாமி, உங்களிடம் இங்கு வைத்திருக்கும் இன்று கொண்டு வந்திருக்கும் செல்வத்தினை, இறக்கி (அவிழ்த்து) பாருங்கள். ஸ்வாமி எங்களை காக்க வேண்டும் - என்றார்கள்.

**தெகெ³ஸித³ மந்த்ரியு குஶலக³திக³ளிந்த³**
**நக³ நாண்ய தே³வாங்க³னவனு**
**தெகெ³ஸி நோடி³த³³னு ப³கெ³ப³கெ³ ஸப்த¹ங்க³ள**
**நக³ நாண்ய தே³வாங்க³வனு ||30**

உடனடியாக அந்த மந்திரி, அந்த மூட்டைகளை அவிழ்த்து பார்த்தான். அதில் நகை, நாணயங்கள் இருந்தன. எடுத்துப் பார்த்தான். பற்பல விதங்களான நகை, நாண்ய, வஸ்துகள் அதில் இருந்தன.

**ಮಕ³ನ ಕರೆದು³ ಹೋಳಿತಿ³ವರಿಕೆ³ ಪೋ⁴ಜನ**
**ಸೊಕ³ಸಾಕಿ³ ಮಾಡಿ³ಸೂ ಎಂತ³**
**ಪ³ಕೆ³ಪ³ಕೆ³ಯಿಂತ³ಲಿ ತ್ರುಪ್ತಾಕ³ ಪ³ಟಿ³ಸೂ ಎಂದು³**
**ನಕೆ³ಮುಕ²ತಿ³ಂತ³ ಹೋಳಿತ³ನು ||31**

ಉಡನಡಿಯಾಕ ತನ್ ಮಕನೆ ಅಳೆತ್ತು, ಅವ್ಕಳುಕ್ಕು ನಲ್ಲ ಉಣವಿನೆ ಕೊಡುಪ್ಪಾಯಾಕ ಎನ್ರಾನ್. ವಿತಮ್ವಿತಮಾನ ಉಣವುಕಳೆ ತಿರುಪ್ತಿ ಅಡೆಯುಮ್ವರೆ ಪರಿಮಾರು ಎನ್ರು ಪುನ್ನಕೆಯುಡನ್ ಕೂರಿನಾನ್ ಅಂತ ಮಂತ್ರಿರಿ.

**ಸಂಣ್ಣ ರಾಜಾನ್ನತ³ಕ್ಕಿಯನು ಶಾಕವು**
**ಅಣ್ಣೆವಾಲೆರೆತ³ ಪಾಯಸವು**
**ಪೆ³ಣ್ಣೆಕಾಸಿತ³ ತುಪ್ಪ ಪ⁴ಕ್ಷಯಂಗ³ಳನು ಮಾಡಿ³**
**ಉಣ್ಣೇಳಿರೆಂತ್ತು³ ಕರೆತ³ರು ||32**

ಅರಸಿನ್ ಸಿರಿಯ ಅರಿಸಿಯಿಲ್ ಸೆಯ್ಯಪ್ಪಟ್ಟ ಸಾತಮ್, ಕಾಯ್ಕರಿಕಳ್, ತೂಯ್ಮೆಯಾನ ಪಾಲ್ ಕಲಂತ ಪಾಯಸಮ್, ವೆಣ್ಣೆಯಿಲಿರುಂತ್ತು ಕಾಯ್ಚ್ಚಪ್ಪಟ್ಟ ನೆಯ್, ಪಕ್ಷಯಂಗಳೆ ಸೆಯ್ತು, ಇತನೆ ಉಣ್ಣುಂಗಳ್ ಎನ್ರು ಅವ್ಕಳೆ ಉಪಚರಿತ್ತನರ್.

**ಅತಿತೆ³ನ್ಯತಿ³ಂತ³ ಹೋಳಿತ³ರು ಏಕಾತ³ಶಿ**
**ವ್ರತ ನಿರಾಹಾರವು ನಮಕೆ³**
**ಸತುರತನವೇ ನಮ್ಮೊಡ³ನೆ ಕಿರಾತನ**
**ಮತವಿತು³ ಎಂತ್ತು³ ಕೇಳಿತ³ನು ||33**

ಅವ್ಕಳೋ ಮಿಕವುಂ ಮರಿಯಾತೆಯುಡನ್ ಇವ್ವಾರು ಕೂರಿನರ್ – ಎಂಗಳುಕ್ಕು ಇಂರು ಏಕಾತಸಿ ವಿರತಂ. ತಣ್ಣೀರ್ ಕೂಡ ನಾಂಗಳ್ ಕುಡಿಪ್ಪತಿಲ್ಲೆ ಇಂರು. ನಾಂಗಳ್ ವೇಟ್ಟೆಕ್ಕಾರ ಕುಲತ್ತವರ್ಕಳ್ (ಕಿರಾತ) ಇತೆ ಪಿಂಪರ್ರುಕಿರೋಂ ಎನ್ರು ಕೂರಿನಾರ್ಕಳ್.

**ಹೊಂಮೆ ನಿಮ್ಮೊಡ³ನೆ ಮಾಡು³ವುತೆ³ಕಕೆ ಜೀಯ**
**ಎಮ್ಮೊಡೆ³ಯನ ಸೂಕುಮಾರ**
**ತಮ್ಮ ರಾಜ್ಯತ³ಲಿ ಏಕಾತಶಿವ್ರತ**
**ನಿರ್ಮಾಣವನ್ನೆ ಮಾಡಿ³ತ³ನು ||34**

ನಾಂಗಳ್ ಏನ್ ಉಂಗಳಿಡಂ ಇವ್ವಾರು ಪೆರುಮೆಯಾಕ ಸೊಲ್ಲಿಕ್ ಕೊಳ್ಕಿರೋಂ ಎನ್ರಾಲ್, ಎಂಗಳ್ ತಲೈವನಿನ್ ಕುಮಾರನ್, ಅವ್ಕಳಿನ್ (ಎಂಗಳಿನ್) ರಾಜ್ಯತ್ತಿಲ್, ಏಕಾತಸಿ ವಿರತತ್ತೆ ನಿರ್ಮಾಣಂ ಸೆಯ್ತಾನ್.

**ಎಲ್ಲಿಯ ಮಾತಿತು³ ಆತನ ಸತಿ ಪ³ಞ್ಜೆ**
**ಎಂತೆ³ಲ್ಲರು ಹೋಳಿತಲಿಹರು**
**ಅಲ್ಲತ³ ಮಾತಿತು³ ಅತಿ ಸೋತ್³ಯವಾಕಿ³ತೆ³**
**ಎಲ್ಲಿತ್³ತ³ ಆತಕೆ³ ಸೂತನು ||35**

ಅತು ಎಪ್ಪಡಿ ಸಾತ್ತಿಯಂ?. ಅಂತ ತಲೈವನಿನ್ ಮನೈವಿಕ್ಕು ಕುೞಂತೈಕಳೇ ಇಲ್ಲೈಯೇ? ಎನ್ರು ಅಂಗಿರುಂತವರ್ಕಳ್ ಕೂಱತ್ ತುವಂಗಿನರ್. ಇತೆ ಎಪ್ಪಡಿ ಸೊಲ್ಕಿರೀರ್ಕಳ್? ಇತನೆ ಪರಿಸೋತಿಕ್ಕ ವೇಂಡುಂ. ಅವನುಕ್ಕು ಮಕನೇ ಇಲ್ಲೈಯೇ?

**ತು³ಷ್ಟಡಂರುಕ³ವನೆಚ್ಚು ಕೆಡ³ಹೂವೆನೆನುತ**
**ಹಿಂತ³ಟ್ಟಿ ಹೋತ³ನು ಪುಲಿಂತ³**
**ಪುಟ್ಟ ಪಾ³ಲನ ನಾರಾಯಣ ಹರಿಯೆನುತ**
**ಅಟ್ಟಡ³ವಿಯೊಳಕಿ³ರಲು ||36**

ಅತ್ರ್ಕು ಅವರ್ಕಳ್ ಪತಿಲ್ ಕೂರಿನರ್: ತುಷ್ಟ ಮಿರುಕಂಗಳೆ ವೇಟ್ಟೆಯಾಡುವೇನ್ ಎನ್ರು ಪುಲಿಂತನ್ ಕಾಟ್ಟಿರ್ಕು ಸೆನ್ರಾನ್. ಅಂಗೋ, ಒರು ಸಿರುವನ್, ನಾರಾಯಣ, ಹರಿ, ಎನ್ರವಾರು ಅಂತ ಕಾಟ್ಟಿಲ್ ಇರುಪ್ಪತೆ ಕಂಡಾನ್.

**ஆ ஶிஶுவனெ தந்து³ அதிஶயதி³ந்த³லி**
**போஷணெயனு மாடி³த³ரு**
**வாஸுதே³வன கிங்கர இந்த்³ரஹாஸனு**
**பூ⁴ஸுரரனெ பாலிஸுவனு ||37**

அந்த சிறுவனையே கொண்டு வந்து மிகவும் சிறப்புடன் அவனை காத்து வளர்த்து வந்தான். வாசுதேவனின் பக்தனான இந்த்ரஹாஸ (சந்திரஹாஸ), இந்த ஊர் மக்கள் அனைவரையுமே காத்து வருகிறான்.

**எந்த³ மாதனு கேளி எதெ³யொளு அலகு³**
**நட்டந்த³தி³ மனதொ³ளு மருகி³**
**அந்து³ மாடி³த³ கார்ய ஆக³லில்லவு ஸித்³த⁴**
**எந்து³ தா மனதொ³ளு திளித³ ||38**

என்ற அவர்களின் பேச்சினைக் கேட்டு, இதயத்தில் அம்பு கொண்டு குத்தியதைப் போல ஆனது, மனதில் மயங்கி, அன்று நான் செய்த காரியம் முடியவில்லை; இது நிச்சயம் என்று மனதில் அந்த மந்திரி நினைத்தான்.

**மனுஜரைத¹னதி³ந்த³லேனஹுது³ தெ³ய்வ**
**அனுகூலவாத³ கார்யவு**
**நெனெத³ந்தெ அஹுதெ³ன்னுத துஷ்டபு³த்³தி⁴யு**
**மனத³ல்லி சிந்தெ மாடி³த³னு ||39**

மனிதனின் முயற்சியில் என்ன இருக்கிறது; அனைத்தும் தெய்வத்தின் காரியமே ஆகும்; அவன் நினைப்பதைப் போலவே ஆகிறது என்றவாறு, துஷ்டபுத்தியானவன், மனதில் கவலை கொண்டான்.

**த்³வாத³ஶி தி³வஸ பாரணெய மாடி³ஸி**
**அவரிகா³த³ரிஸி உடு³கோ³ரெயித்து**
**க்ரோத⁴வ மனதொ³ளகி³ட்டு வீள்யவ கொட்டு**
**கே²த³தி³ந்த³வர களுஹித³னு ||40**

அடுத்த நாள் த்வாதசி பாரணையை செய்வித்து, அவர்களை உபசரித்து, பரிசுகளை கொடுத்து, கோபத்தினை மனதிலேயே அடக்கிக் கொண்டு, தாம்பூலங்களை கொடுத்து, மரியாதையுடன் அவர்களை அனுப்பி வைத்தான்.

**காவகருணி கிருஷ்ணராய ப⁴ஜகன**
**ஆவாவ பரியல்லி தந்து³**
**ஜீவஹத்யவ மாட³பே³கெந்து³ நேமிஸி**
**பா⁴விஸித³னு தன்னமனதி³ ||41**

கருணாமூர்த்தியான கிருஷ்ணனின் பக்தனை (சந்த்ரஹாஸனை), ஒரு முறையான வழியில் அழைத்து, அவனை கொன்றுவிட வேண்டும் என்று நினைத்து, தன் மனதில் இவ்வாறு தீர்மானித்தான்.

**தெரளித³ மந்த்ரியு புளிந்த³ன குமாரன**
**இரவ நோடி³த³னு எந்தெ³னுத**
**மரிகோகி³லெயந்த³தி³ மாதனாடு³த**
**ஸொரக³ பிடி³து³ ஸுகுமாரி ||42**

புளிந்தனின் மகனை பார்க்க வேண்டும் என்று அந்த மந்திரி அங்கிருந்து புறப்பட்டான். அப்போது சிறு குயில் போல பேசி அவனுடைய ஆடையை பிடித்து விளையாடி அவனது மகளிடம்..

**சூதவ்ருக்ஷவு காகு ப²ல பக்வவாயிது**
**ஏதகெ யாரு பு⁴ஞ்ஜிஸுவெ**
**சாதுர்யத மாத பேளி நினகொ³ப்³ப³**
**காந்தன்னா தஹெனு எந்தெ³னுத ||43**

அற்புதமான மரம் ஒன்று வளர்ந்து பழம் கனிந்திருக்கிறது. யாரும் உண்ணாமல் ஏன் இருக்கிறது?. எப்படியாவது புத்திசாலித்தனமாக பேசி, உனக்கு ஒரு கணவனை கொண்டு வருகிறேன் என்று மகளிடம் கூறினான்.

**ஸெளெநடு³ ப³ளுகுத தெள்வஸுரின நடு³**
**ஹொளெஹொளெவ தனுகாந்திய**
**எளெ வத³னத³ ஸுகுமாரிய ரம்பி³ஸி**
**வளெயக்கெ குளுஹி தா தெரள்த³ ||44**

மெலிதான இடை, பருத்த பின்புறம், ஒளிரும் தேகம், அழகான முகம் ஆகியவற்றை கொண்ட தன் பெண்ணை உள்ளே அனுப்பிவிட்டு, தான் கிளம்பினான்.

**அல்லல்லி நோடு³த ப³ந்த³னு மந்த்ரியு**
**ப¹ல்லயிஸித³ பெருக³ள**
**பி³ல்லாள முந்த³லட்டிஸெ புளிந்த³னு**
**தல்லணிஸித³ தவகத³லி ||45**

மந்திரி அங்கும் இங்கும் பார்த்தவாறு முன்னேறினான். நன்றாக விளைந்து வளர்ந்திருந்த பயிர்களை கண்டான். தன் வில்லாட்களை முன்னர் நிறுத்திவிட்டு, புளிந்தன் பின்னால் நின்று கொண்டு தவித்துக் கொண்டிருந்தான்.

**பட்டணவனு ஸிங்க³ரிஸி பி³டா³ரவ**
**பி³ட்டு ப³ந்த³ந்த ப்ரஜெகெ³**
**தொட்டு களசித³ எளனீரு கத³ளிகப்³பு³**
**தட்டெயொளகெ³ இரிஸித³ரு ||46**

பட்டணத்தை அலங்கரித்தனர். தங்கள் வீட்டினை விட்டு வந்திருந்த மக்களுக்கு, சுவையான இளநீர், வாழைப்பழங்கள், கரும்பு, ஆகியவற்றை கொடுத்து உபசரித்தனர்.

**சிது³ரிஸி தன்னரமனெயொளு மந்த்ரிகெ³**
**நத³ரு மாடி³ஸித³ புளிந்த³**
**நத³ருகா³ணிகெ கப்பவகொட்டு மந்த்ரிய**
**இதி³ருகொ³ண்ட³ரு ஹருஷத³லி ||47**

மந்திரியை தன் அரண்மனைக்குள் அழைத்துச் சென்று, புளிந்தன் அவனை உபசரித்தான். காணிக்கை, கப்பங்கள் ஆகியவற்றை கொடுத்து, மந்திரியை உபசரித்தான் மிகவும் மகிழ்வுடன்.

**ப³ந்து³ க³த்³து³கெ³மேலெ குள்ளிரிஸி மந்த்ரிய**
**நிந்தெ³த்³து³ கரவ முகி³த³னு**
**தந்து³ காணிகெ கப்பவ கொட்டு ப்ரதா⁴னிகெ³**
**கந்த³ன தந்து³ தோரிஸித³ ||48**

மந்திரியானவன் வந்து இருக்கையில் அமர்த்தி, தன் கைகளை குவித்தவாறு நின்றான். கப்ப, காணிக்கைகளை மந்திரிக்கு கொடுத்து, பின் தன் மகனை அழைத்து வந்து காட்டினான்.

**ஈத லக்ஷண ஸம்பன்ன ஸுஶீலனு**
**ஈத ஶ்ரீஹரிய கிங்கரனு**
**ஈதன கருணதி³ ஸலஹபே³கெந்த³வர**
**தாத கொட்டனு மந்த்ரி கைகெ³ ||49**

இவன் அனைத்து லக்ஷணங்களையும் கொண்டவன்; மிகவும் அழகானவன்; இவன் ஶ்ரீஹரியின் பக்தன்; இவனை நீங்கள் கருணையுடன் காப்பாற்ற வேண்டும் என்று மந்திரியிடம் சந்த்ரஹாஸனை, புளிந்தன் ஒப்படைத்தான்.

**தன்னிந்த³ தானெ குமாரனாத³னு ப³ஹுத⁴ன்ய**
**நீனஹுதெ³ந்தெ³னுத**
**க³ன்னக³தகவனு மனதொ³ளகி³ட்டுகொண்டு³**
**மன்னிஸித³னு ஸபெ⁴யொளகெ³ ||50**

யாருடைய உதவியும் இன்றி (இவன் காட்டில்) தனக்குத் தானே வளர்ந்திருக்கிறான். இவனை அழைத்துச் செல்லும் உங்களுக்கு நன்றி எனக் கூற, மந்திரியோ தன் ஏமாற்றும் புத்தியை மனதில் வைத்துக் கொண்டு, அவனை அந்த சபையில் சிரித்த முகத்துடன் வரவேற்றான்.

**கரெத³னு சந்த்³ரஹாஸன கையல்லி**
**ப³ரெது³ கொட்டனு மந்த்ரி ஒட³னெ**
**மரளித³ யாரிகெ³ தோரதெ³ குந்தள**
**புரகாகி³ போகு³ நீ எனலு ||51**

சந்திரஹாஸனை அழைத்து மந்திரியிடம் ஒப்படைத்தான். உடனே அந்த மந்திரி, தன் படையினரிடம், உடனடியாக நீ யாருக்கும் தெரியாமல் நீ குந்தளபுரத்திற்கு சென்றுவிடு என்று கூறினான்.

**பே³காத³தொ³ந்து³ துரங்க³வனேரு**
**நால்கு மனுஜரொட³கூடி³**
**ஜோகெயிந்த³லி ஒய்து³ மத³னன**
**கையல்லி ஏகாந்தத³லி கொடு³ எந்த³ ||52**

ஒரு குதிரையை கொடுக்கிறேன்; அதில் ஏறி, நான்கு பேர்களுடன் சென்று, இவனை அழைத்துச் சென்று, இவனை மதனனின் (உங்கள் அரசனின்) கையில் ஒப்படைத்துவிடு என்றான்.

**மந்த்ரியப்பணெயிந்த³ மனெகெ³**
**ப³ந்த³னு ஶுத்³த⁴ அந்தரங்க³த³ பா³லகனு**
**ஸந்தோஷதி³ம் தாயி தந்தெ³கெ³ எரகி³த³³**
**மந்த்ரவாஹகன கிங்கரனு ||53**

மந்திரியானவன் அப்படியே தன் வீட்டிற்கு திரும்பி வந்தான். சுத்தமான மனதுடைய அந்த பாலகன் மகிழ்ச்சியுடன் தன் பெற்றோர் கால்களில் விழுந்து வணங்கினான். அனைத்தும் திட்டமிட்டு நடத்துபவனின் (ஶ்ரீஹரியின்) பக்தன் அவன்.

**ஆயுஷ்யவந்த நீனாகு³ உத்தமவுள்ள**
**ஸ்த்ரீயரனாளு எந்தெ³னுத**
**மாயவாக³லி ப³ந்த³ து³ரிதவு**
**கமலத³ளாயதாக்ஷன க்ருபெயிந்த³ ||54**

நீ நல்ல ஆயுளைப் பெற்றவனாக இரு; உத்தமான பெண்களின் கணவன் ஆவாயாக என்று கூறியவாறு, உனக்கு (நமக்கு) வந்த கஷ்டங்கள் அனைத்தும் விலகட்டும், இவை அனைத்தும் அந்த தாமரைக் கண்களைக் கொண்ட ஶ்ரீஹரியின் கருணையால் நடக்கட்டும்.

**ஹஸெய மேலெ குள்ளிரிஸி குமாரகெ[3]**
**மொஸரு அக்ஷதெக[3]ளனிட்டு**
**எஸளு தூ[3]ர்வெக[3]ளனு முடி[3]ஸி**
**ஸேஸெய தும்பி[3] வஸுதீ[4]ஶனாகெ[3]ந்து[3] ஹரஸி ||55**

சந்த்ரஹாஸனை மணையின் மேல் அமர்த்தி, மங்கள அக்ஷதைகளை தூவி, தளிர் பூக்களை சூட்டி, மந்திராட்சதைகளுடன் ஆசிர்வதித்து, நீ அரசன் ஆவாயாக என்று ஆசிர்வாதம் செய்தனர்.

**மத்தெ தாயி தந்தெ[3]கெ[3]ரகி[3] பொரமட்டு தெரளித[3]**
**சித்ததி[3] ஹரிய நெனெவுத**
**மித்ரெயரீர்வரு தும்பி[3]த[3] கொட[3]க[3]ள**
**ஹொத்துகொண்டி[3]தி[3]ரிகெ[3] ப[3]ரலு ||56**

மறுபடி சந்த்ரஹாஸன், தன் தாய் தந்தையரை வணங்கி, உடனடியாக கிளம்பினான், ஸ்ரீஹரியை வணங்கியவாறு. அப்போது அவனுடைய நண்பர்கள் இருவர், நிரம்பிய குடங்களை தாங்கிக் கொண்டு எதிரில் வந்தனர்.

**பீ[3]தி[3]வரிது[3] பா[3]ல பருதிரெ**
**கண்ட[3]னு வேத[3] பாட[2]கரிப்[3]ப[3]ரனு**
**ஸாதி[4]ஸி முத்தெயிதெ[3]யர கண்ட[3]னு**
**இது[3] ஶுப[4]காதா[4]ரவெந்து[3] நடெ[3]த[3]னு ||57**

அவர்களைத் தாண்டி சந்த்ரஹாஸன் வந்து கொண்டிருக்க, வேத அறிஞர்களை கண்டான்; பிறகு சுமங்கலிகளை கண்டான்; இவை அனைத்தும் சுபத்திற்கே அறிகுறி என்று நினைத்து மேலும் நடந்தான்.

**மது[4]ர மாவினஹண்ணு க[3]ந்த[4]புஷ்பக[3]ளன்னு**
**இது[3]ரலி தந்து[3] கொடு[3]வரு**
**மது[3]வணிக[3]ர ஹொன்னகளஸவ கண்ட[3]னு**
**இது[3] லேஸு எந்து[3] நடெ[3]த[3]னு ||58**

சுவையான மாம்பழங்களை, சந்தன, பூக்களை, எதிரில் வந்து கொடுத்தனர். வாணிபர்களின் பொன் கலசங்களை எதிரில் கண்டான். இதுவும் நன்மைக்கே என்று சொல்லியவாறு மேலும் நடந்தான்.

**பே[4]ரி ப[3]டி[3]த[3]வு ஶங்க[2]நாத[3]வெஸெத[3]வு**
**சீரித[3]வு சின்னகஹளெ**
**போ[4]ரெந்து[3] பஞ்சம வாத்[4]யவு எஸெத[3]வு**
**ஊரிந்த[3] ஹொரெ ஹொண்ட[3]ல்லிக்கெ ||59**

பேரி முழங்கியது; சங்கு நாதம் கேட்டது; சின்ன, கஹளெ ஆகிய வாத்த்தியங்கள் இசைத்தன. போர என்னும் ஐந்தாவது வாத்தியமும் கேட்டது. இவ்வாறு அவன் ஊரை விட்டு வெளியே சென்று கொண்டிருக்கையில்.

**த[4]த்யன்னவன்னு கண்ட[3]னு பா[3]ல இதி[3]ரலி**
**மத்[4]யத[3] கும்ப[4]வ கண்ட[3]**
**பத்[3]மனாப[4]ன கிங்கர முந்தெ[3] ப[3]ருதிரெ**
**தித்[3]தி[3] கொட்டனு வாயஸவு ||60**

தயிர் சாதத்தை கண்டான், சந்திரஹாஸன் எதிரில் கண்டான். மத்ய பானத்தின் கும்பத்தை எதிரில் கண்டான். பத்மனாபனின் பக்தனான சந்த்ரஹாசன், முன்னேறி வந்து கொண்டிருக்கையில், காக்கை கூவியது.

**ஹங்க³ன க³ரிய வாமத³ பா⁴க³ ஜம்பு³க**
**முங்கு³லி ஹரிணவ கண்ட³**
**ஶ்ருங்கா³ரவுள்ளந்த² ஸ்த்ரீயரு ப³ருதிரெ**
**இது³ ஶுப⁴வெந்து³ நடெ³த³³னு ||61**

சிட்டுக்குருவி, படம் எடுத்து ஆடும் பாம்பு, கீரிப்பிள்ளை, மான் ஆகியவற்றை கண்டான்; அழகான பெண்கள் எதிரில் வந்துகொண்டிருக்க இது நன்மைக்கே என்று சந்த்ரஹாஸன் நினைத்தான்.

**இந்து¹ ஈ பரிய ஶகுனவ மன்னிஸிகொண்டு³**
**ஸந்தோஷதி³ந்த³ ப³ருதிரலு**
**குந்தளபுரத³ பா³கி³ல ஹொன்ன களஸவ**
**நந்தரவனெ கண்ட³ இதி³ர ||62**

என்று இவ்வாறான சுப சகுனங்களை பார்த்தவாறு, மிகவும் மகிழ்ச்சியுடன் சந்த்ரஹாஸன் வந்து கொண்டிருக்க, எதிரில் குந்தரளபுரத்தின் வாயிலின் பொற் கலசங்களை கண்டான்.

**உத³யவாகி³ர்த்த³ நாரங்க³ கித்தளெ மாவு**
**கத³ளி தா³ளிம்ப³ த்³ராக்ஷிக³ளு**
**ஹத³னாத³ ப²ல்பக்வப⁴ரித வனங்க³ள**
**எதி³ருகொ³ம்ப³ந்தெ தா கண்ட³ ||63**

பழமாகியிருந்த சாத்துக்குடி, ஆரஞ்சு, மா, வாழை, மாதுளை, திராட்சைகள், ஆகியவை பூத்துக் குலுங்கிய வனங்கள் எதிரில் இருப்பதை தான் கண்டான்.

**எஸளு மல்லிகெ³ ஸம்பிகெ³ ஶாவந்திகெ³**
**ஹஸனாத³ ஸுரகி³ பாத³ரியு**
**குஸுமத³ பரிமள எஸெவுதிர்து³த³³ கண்டு³**
**ஶஶிஹாஸவனகெ ஹாரெயிஸி ||64**

மலர்ந்த மல்லிகை, சம்பிகை, சாமந்தி, நறுமணம் மிக்க சம்பங்கி, பாதரி, நறுமணம் மிக்கதாக மலர்ந்திருந்ததைக் கண்டு சந்திரஹாஸன் மகிழ்ந்து மேலும் முன்னேறினான்.

**ப³ளித³ ஶ்ரமவன்னு தும்பி³ஸுவெனெந்த³³வாஜி**
**அளிது³ ரக்ஷகர காவலிட்டு**
**அளிக³ளு ஜோம்பி¹டு³தலி கெந்தா³வரெ**
**தளிர ஸரஸிய தா கண்ட³ ||65**

இவ்வளவு தூரம் பயணம் செய்த சிரமத்தை போக்கிக் கொள்வேன் என்று, குதிரையை நிறுத்தி, இறங்கி, காவலர்களை குதிரைக்கு காவல் வைத்து செல்ல, அங்கு ஏரிக்கரையில், நன்கு வளர்ந்த புதர்களில் கெந்தாவரை பூக்கள் மலர்ந்திருப்பதை தான் கண்டான்.

**கட்டுவனாக³ வாஜிய தம்பலி**
**பெ³ன்னட்டி ரக்ஷகர காவலி**
**தொட்ட மைஜோட³ ஸடிஸிலி கெலத³³ல்**
**லிட்டு ஸரஸியன்னு தா இளித³ ||66**

குதிரையை அங்கேயே நிழலில் கட்டினான். அதற்கு காவலாளிகளை காவலுக்கு வைத்து, சோம்பல் முறித்துக் கொண்டு, மெதுவாக அந்த ஏரியில் இறங்கினான்.

**மிந்து³ மடி³யன்னுட்டு மரெயதெ³ ஜபதப**
**ஸந்த்⁴யாவந்த³னெய மாடி³த³³னு**
**மந்தா³ர மல்லிகெ³ புஷ்பங்க³ளிந்த³**
**முகுந்த³ன பூஜெ மாடி³த³³னு ||67**

அங்கேயே குளித்து, மடித் துணியை அணிந்து, பின் ஜப தப சந்த்யாவந்தனங்களை செய்தான். மந்தார, மல்லிகை பூக்களால் அங்கே முகுந்தனின் பூஜையை செய்தான்.

**மீஸலாகி³ர்த³ ஸித்³தா⁴ன்னவ தெகெ³து³ ஸ்ரீ**
**வாஸுதே³வங்கெ³ அர்ப்பிஸித³**
**ஶேஷவனுண்டு³ ஹருஷதி³ந்த³லி ஆக³**
**ஹொஸதா³த³³ ஹோதி³கெய ஹொத்³த³³ ||68**

தயாராக இருந்த அன்னத்தை எடுத்து, ஸ்ரீவாசுதேவனுக்கு அர்ப்பணம் செய்தான், அதில் மிச்சம் இருந்ததை தான் உண்டு, மிகவும் மகிழ்ச்சியுடன், புத்தாடையை தான் அணிந்தான் சந்த்ரஹாஸன்.

**மேரு கி³ரி³ய பர்வதத³ துதி³யல்லி**
**மைதோ³ருவ பா⁴ஸ்கரனந்தெ**
**பீ³ருவ கெம்பின தளிர ஹாஸிகெக³ளு**
**சாருஹாஸகெ³ ஆத³வல்லி ||69**

மேரு மலையில் அடிவாரத்தில் தெரியும் சூரியனைப் போல, ஒளிரும் சிவந்த இலைகளினால் ஆன படுக்கைகள் அங்கு சந்த்ரஹாஸனுக்கு ஆயின (இவ்வாறான படுக்கைகளை தயார் செய்து கொண்டான்).

**மேலு கர்ப்பூர வீள்யவ ஸவித³னு**
**நளிதோள்க³ள தலெகி³ம்ப³லிட்டு**
**ப³ளித³ ஸுக²நித்ரெகெ³ய்வ**
**ஹொளவனகட்டெ வெங்கடேஶ்வரன கிங்கரனு ||70**

பச்சை கற்பூரம், வெற்றிலையை அவன் உண்டான். தன் கைகளையே தன் தலைக்கு தலையணையாக வைத்துக் கொண்டு, படுத்து தூங்கினான். ஹொளவனகட்டெ வெங்கடேஸ்வரனின் பக்தனான சந்த்ரஹாஸன்.

## மூன்றாம் ஸந்தி

**நித்³ரெகெ³ய்தி³ந்து³ ஹாஸன கஞ்சுளிகெயல்லிர்த்த³**
**பத்ரவனோதி³கொண்டு³**
**திர்த்தி³ தா வது⁴வாத³ளு மந்த்ரிதனுஜெயு**
**பத்மனாப⁴ன கிங்கரகெ³ ||**
**லீலெயிந்த³லி சம்பகமாலெ விஷயெ**
**விஶாலதி³ ஸகி²யரு கூடி³**
**ஆலயதி³ந்த³லி ஹொரடனு வஸந்தகால**
**ப³ந்தி³ரெ நந்தனகெ³ ||1**

ரவிக்கை (புடவை) அணிந்திருந்த மந்திரியின் மகள், கல்யாண பத்திரிக்கையை படித்துவிட்டு, அந்த சந்த்ரஹாஸனுக்கு, ஸ்ரீஹரியின் பக்தனுக்கு தான் மணப்பெண் ஆனாள். லீலையினால் சம்பகமாலையை தான் அவனுக்கு சூடினாள். தன் தோழிகளுடன் கூடி, தன் அரண்மனையிலிருந்து இவர்கள் புறப்பட்டனர் – வசந்த காலம் வந்துவிட்டது என்று சொல்லி, வனத்திற்கு புறப்பட்டனர்.

**வச்சேரெரங்க³ள வாரிஜமுகி²யரு**
**நிச்சளாங்க³த³ நீரெயரு**
**ஹெச்ச ஹிரிய ஹெங்க³ள ரன்னேரு**
**பெ³ச்சதெ³ பெரெது³ நடெ³த³ரு ||2**

கூர்மையான கண்களைக் கொண்ட, தாமரை போன்ற முகத்தையுடைய பெண்கள், நிஸ்சலமான தேகம் கொண்ட பெண்கள், மிகச் சிறிய வயதுடைய சிறுமிகள், சோர்வடையாமல் தம்பதிகளுடன் நடந்தனர்.

**மல்லிகெ³னனெ முத்³து³முக²வாலெ கந்தே⁴ரு**
**செல்லெக³ங்க³ள செல்லெயரு**
**பு²ல்லஶயன மத³னானெயந்தொலெவுத**
**எல்லரைதி³த³ரு நந்த³னகெ ||3**

மல்லிகை சூடிக்கொண்டு, அழகான முகங்களுடன், சந்தனம் பூசியவர்கள், நீளமான கண்களைக் கொண்ட பெண்கள், நீண்ட கண்களைக் கொண்டு மத யானையைப் போல, அனைவரும் நந்தவனத்தினை சென்று அடைந்தனர்.

**களலீரவாணியரு காளாஹிவேணியரு**
**களகளிஸுவ வத³னெயரு**
**களஸகுசதோ³ரு கம்பு³கந்த⁴ரெயரு**
**குந்த¹ளகாகி³ நடெ³த³ரு ||4**

இனிமையான குரல் கொண்டவர்கள், கரும் பாம்பு போன்ற நீளமான கூந்தல் உடையவர்கள்; அழகான முகம் கொண்டவர்கள்; கலசத்தைப் போன்ற மார்பு கொண்டவர்கள்; சங்கு போன்ற கழுத்து கொண்டவர்கள்; என அனைவரும் குந்தளபுரத்திற்கு நடந்தனர்.

**குடிலகுந்தளெயரு கோமலாங்கி³யரு**
**செந்து³டி செலுவின பா³லெயரு**
**ப³ட்ட பொம்பொ³க³ரிய குசத³ பா³லகியரு**
**நட¹னெயிந்தெ³ல்ல நடெ³த³ரு |5**

சுருள் முடி கொண்டவர்கள்; அழகான தேகம் கொண்டவர்கள்: சிவந்த உதடு கொண்ட அழகான பெண்கள்; உருண்டையான பெரியதான மார்புகள் கொண்ட பெண்கள்; நடனமாடிக் கொண்டே சென்றார்கள்.

**ஒப்³ப³ர ஹெக³லல்லி ஒப்³ப³ர நளிதோளிட்டு**
**தப்³பு³த தாகொ³லவுதலி**
**கப்³பு³வில்லன கோலாஹல உல்லஸதி³**
**தப்³பி³ நடெ³த³ரு நந்த³னகெ¹ ||6**

ஒருவர் முதுகில் இன்னொருவர் தமது நளினமான தோள்களை வைத்து தள்ளியவாறு மகிழ்ச்சியுடன், வருத்தம் இல்லாத மகிழ்ச்சியுடன், நடந்து சென்றனர் நந்தவனத்திற்கு.

**ஸொக்கு நுடி³யோரு ஸொப³கு³ மதியோரு**
**ரக்கஸ குசத³ பா³லெயரு**
**நக்குனலிது³ நானா சேஷ்டெக³ளிந்த³**
**ஹொக்கரு நந்த³னவனவ ||7**

மயங்கி நடந்தனர், அழகான மதி உடையவர்கள், அழகான முலைகளைக் கொண்ட பெண்கள், சிரித்தவாறு பற்பல செயல்களை செய்தவாறு நந்தவனத்தை சென்று அடைந்தனர்.

**காடி³கார்த்தியரெல்ல கமகதி³ந்த³லி**
**ஒடகூ³டி³ ஸரோவரவிளிது³**
**மாடி³த³ர் கைசளகவ ஜல**
**க்ரீடெ³யனாடி³த³ரதி ஹருஷத³லி ||8**

இத்தகைய பெண்கள் அனைவரும் ஒன்று கூடி, அந்த ஏரியில் இறங்கி, கைகளை ஆட்டியவாறு விளையாடி, ஜலக்ரீடை ஆடினர். மிகவும் உற்சாகத்துடன்.

**பொளகு¹வ மீனுக³ள் நீலகுந்தளவு**
**களகளிஸுவ கெந்தா³வரெ மொக்³கு³**
**அரளித³ம்பு³ஜ தாரெக³ளு கோமலெயர**
**நீராடவனெ கண்டு³ ஹருஷதி³ ||9**

நீந்தும் மீன்கள், நீல குந்தள மலர்ச் செடிகள், செந்தாமரை மலர்கள், மலர்ந்த தாமரை மலர்கள், ஆகியவை இந்த பெண்களின் நீராட்டத்தை பார்த்து மகிழ்ந்தன.

**கோமலெயர நீராடத³ ரப⁴ஸக்கெ**
**தாவரெக³ளு பெ³ர³கா³கி³**
**பா⁴வகியர முக²வனெ நோடி³ அம்பு³ஜ**
**ஹொவதி³ தலெய தக்³கி³த³வு ||10**

இந்த பெண்களின் ஆட்டத்திற்கு இந்த தாமரைகள் பார்த்து மயங்கி, இந்த பெண்களின் முகத்தை பார்த்து, தாமரையானது வெட்கத்தில் தலை குனிந்தன.

**நவரத்னத³ ஸோபா¹னவனேரோரு**
**நவயவ்வனெயர் ஹருஷத³லி**
**கமலமுகி²யர மெல்லடி³க³ள பா⁴ரக்கெ**
**ஸமனாகி³ தோருத¹லிஹவு ||11**

நவரத்னங்கள் பதிக்கப்பட்ட படிக்கட்டுகளில், இளமையான அந்த பெண்கள் மகிழ்ச்சியுடன் ஏறினர். அந்த தாமரை முகம் கொண்ட பெண்களின் மென்மையான அடிகளின் பாரத்திற்கு அவை சமமான தரையைப் போல தென்பட்டன.

**தருணியருட்ட தங்க³லவஸ்த்ர மையொளு**
**ஒரெது³ தி³வ்யாங்க³ தோருதலி**
**குருகுசத³ பா³லெயரு நிந்த¹ரு காமன**
**ஹொகெய கொரம்பி³னந்த³த³லி ||12**

அந்தப் பெண்கள் உடுத்தியிருந்த மெலிதான ஆடையானது, உடலிலிருந்து விலகி அவர்களின் தேகத்தை காட்டியது. பெரியதான முலைகளைக் கொண்ட பெண்கள், காமனின் கூரான அம்பில் தாக்கப்பட்டவர்களைப் போல மயங்கி நின்றனர்.

**ப³ட³னடு³வின தே³வாங்க³வனரிது³ட்டு**
**ஸடி³லிதா³ப⁴ரணவனிட்டு**
**நிடு³கு³ருளிகெ³ தூ⁴பவ ஹொகெ³யனு கொட்டு**
**முடி³த³ரு துதி³வெண்ணெக³ண்டு ||13**

மெலிதான இடை கொண்டவர்கள், அழகான தேகம் கொண்டவர்கள், பளபளக்கும் ஆபரணங்களை அணிந்து, வளைந்த கூந்தல்லுக்கு தூபத்தின் புகையை காட்டி, பின் அந்த முனையை இழுத்து கட்டிக் கொண்டார்கள்.

**பணெகெ³ கஸ்தூரியிட்டு பூஸி ஶ்ரீக³ந்த⁴வ**
**கண்ணிகெ³ அஞ்ஜன ஹச்சி**
**ஸம்பிகெ³ மகரந்த³ பத்ரிகெயனிட்டு**
**லலனயெரெல்ல ம்ருங்கா³ரதி³ ||14**

நெற்றியில் கஸ்தூரியை வைத்து, சந்தனத்தை பூசிக் கொண்டு, கண்களில் மை தடவி, தேன் நிறைந்ததான சம்பிகை பூ, இலைகளை பெண்களை வைத்து அலங்காரம் செய்து கொண்டனர்.

**ஆனந்த³கா³த்ரெயரு அதிஹருஷதி³ மது⁴**
**பானவ மாடி³ ஸம்ப்⁴ரமதி³**
**தே⁴னுவா கோமல ம்ரவணனாலிஸுவந்தெ**
**மானினியரு தெரளித³ரு ||15**

திடமான தேகம் கொண்டவர்கள், மிகவும் மகிழ்ச்சியுடன், மதுபானம் செய்தவாறு, மிகவும் சம்ப்ரமத்துடன், அழகான நட்சத்திரம் மினுமினுப்பதைப் போல அந்தப் பெண்கள் சென்றனர்.

**த³ர்ப்பணவனெ நோடி³ ரமணியரெல்ல**
**கந்த³ர்ப்பன மத³தா³னெயந்தெ**
**கர்ப்புர வீள்யவ கரத³ல்லி பிடி³து³**
**கு³ப்பவடெ³த³ரு நாரியரு ||16**

அந்தப் பெண்கள் அனைவரும் கண்ணாடிகளை பார்த்து, மன்மதனின் மதம் பிடித்த யானையைப் போல, கற்பூர வெற்றிலையை கையில் பிடித்து, அந்தப் பெண்கள் ஊரை சென்று சேர்ந்தனர்.

**வனமுகி²யரு வனாந்தரவனு பொக்கு**
**ப²னராக³தி³ந்த³ பாடு³தலி**
**நமகெ³ தமகெ³யெந்து³ கொய்த³ரு தம**
**தம்ம மனப³ந்த³ ப²ல புஷ்பங்க³ள ||17**

தாமரை முகம் கொண்ட பெண்கள், அந்த வனத்தினை சென்று அடைந்து, அழகான ராகத்துடன் இசைத்து பாடியவாறு, எனக்கு உனக்கு என்று தமக்கு பிடித்தமான பழங்களை, பூக்களை பறித்து உண்டனர்.

**மிண்டெ³வெண்ணுக³ளெல்ல மத³வெத்³து³ தம்மொளு**
**கண்ட³கடெ³கெ³ செல்லுவரிது³**
**ஸொண்டி³ல கத³ளிய வனவ பொக்கந்த³தி³**
**உத்³த³ண்ட³த³னதலாடு³திஹரு ||18**

வாலிப வயதைக் கொண்ட பெண்கள் அனைவரும் மதம் பிடித்தவாறு, கண்ட இடத்தில் அனைத்தையும் இறைத்தவாறு, யானை வாழைத் தோட்டத்தில் நுழைந்ததைப் போல, மிகவும் கொண்டாட்டத்தில் ஆடிக் கொண்டிருந்தனர்.

**அரஸன மக³ளு சம்பகமாலெ ஸகி²யரு**
**பெரஸிகொண்டா³டு³தலிஹரு**
**மரெஸி மத்தொந்து³ கடெ³கெ³ தானு ப³ந்த³ளு**
**ஹருஷதி³ந்த³லி மந்த்ரி தனுஜெ ||19**

அரசனின் மகள் சம்பகமாலை, தோழிகள் ஆகியோர் மகிழ்ச்சியுடன் விளையாடிக் கொண்டிருக்க, மந்திரியின் மகள், வேறொரு இடத்திற்கு தான் வந்தாள் மிகவும் மகிழ்ச்சியுடன்.

**சிக்க ப்ராயத³ கோமலாங்கி³யு**
**ஹெம்மக்களனக³லி தா சூத**
**வ்ருக்ஷத³ நெரளல்லி மலகி³த்³தா³தன கண்டு³**
**பெ³க்கஸ பெ³ரகா³கி³ நிந்த³ள் ||20**

சிறிய வயது பெண்ணான அவள், தன் தோழிகளை விட்டு விலகி, மா மரத்தின் அடியில் அதன் நிழலில் படுத்திருந்தவனைக் கண்டு வெட்கம் கொண்டு அங்கு நின்றாள்.

**அதிசெலுவ புருஷன காணுத மூர்ச்செ**
**க³தளாகி³ திளிது³ எச்சத்து**
**ப்ருது²வியொளகெ³ இந்த² செலுவனில்லவெந்து³**
**மதிப்⁴ரமெயிந்த³ நோடி³த³ஸு ||21**

மிகவும் அழகான அந்த ஆணைக் கண்டு, மூர்ச்சை கொண்டு , பின் தெளிவடைந்து, இந்த பூமியில் இத்தகைய அழகானவன் வேறு யாரும் இல்லை என்று மனம் மயங்கியவாறு அவனை பார்த்து நின்றாள்.

**பார்வதிபதியெம்பெ³னெ பணெக³ண்ணில்ல**
**வாரிஜோத்³ப⁴வனிவனல்ல**
**நாராயணனெம்பெ³னெ ஶங்க²சக்ரவு**
**தோருவதி³ல்ல கையொளகெ³ ||22**

இவன் பார்வதி பதி என்று சொல்வேனோ?. ஆனால் நெற்றியில் கண் இல்லை; தாமரையில் பிறந்த பிரம்மன் இவன் இல்லை; இவனை நாராயணன் என்பேனோ? சங்கு, சக்ரம் தென்படுவதில்லை இவன் கையில்.

**இந்த்³ரனெம்பெ³னெ பி³ளியானெ கெலத³லில்ல**
**சந்த்³ரனெம்பெ³னெ ம்ருக³வில்ல**
**குந்த³ரெ லோகலோகவ திருகி³த³ ரவி**
**ப³ந்தி³ளித³னோ பூ⁴தளகெ ||23**

இவன் இந்த்ரன் என்று சொல்வேனோ? வெள்ளை யானை அருகில் இல்லை; இவன் சந்த்ரன் என்று சொல்வேனோ? ஆனால் இவனிடம் எவ்வித களங்கமும் இல்லை; எவ்வித சோர்வும் இன்றி, அனைத்து உலகங்களையும் சுற்றி வந்த சூரியன் இந்த பூமியில் வந்து இறங்கினானோ?

**வஸுதே³வவஸுதனாத்மஜ தானெம்பெ³னெ**
**குஸும பா³ணவு கையொளில்ல**
**த³ஶதி³க்பாலனோ யக்ஷக³ந்த⁴ர்வனோ எந்து³**
**விஸ்மிதெயாத³ஸு விஷயெ ||24**

வஸுதேவனின் மகனான கிருஷ்ணனின் மகனான மன்மதன் என்பேனோ, நறுமணம் மிக்க பாணம் இவன் கையில் இல்லையே?. தஷ திக்குகளை காக்கும் திக்பாலனோ, யக்ஷ கந்தர்வனோ என்று தன் மெய் மறந்து அங்கு நின்றாள் அந்தப் பெண்.

**ஸுத்தநோடு³வளார ஸஞ்சாரவில்லெனுத**
**ஹத்திரெ ப³ந்து³ நில்லுவளு**
**சித்ததொளொம்மொம்மெ நெரெய நேமிஸுவளு**
**ஹொத்தல்லவெந்து³ ஸாருவளு ||25**

சுற்றும் முற்றும் பார்த்தாள். அங்கு யாருமே இல்லை என்று பார்த்து, அவன் அருகில் வந்து நிற்கிறாள். மனதில் ஒரு தீர்மானம் செய்கிறாள். நேரம் ஆகிவிட்டது என்று நினைக்கிறாள்.

**இட்ட காலந்தி³கெ³ அலுக³த³ந்த³தி³ ப³ந்து³**
**முட்டுவெனெந்து³ நில்லுவளு**
**தி³ட்ட ஹெங்க³ஸு இவளாரோ எம்பு³வனெந்து³**
**த²ட்டனெ கடெ³கெ³ ஸாருவளு ||26**

அடி மேல் அடி வைத்து மெதுவாக வந்து, அவனை தொடுவேன் என்று நிற்கிறாள். இவ்வளவு அழகான பெண் இவள் யாரோ என்று இவன் சொல்வான் என்று நினைத்து மறுபடி அவனிடம் செல்கிறாள்.

**ஆது³தா³க³லி இவன அக³லலாரெனு**
**லஜ்ஜெஹ்ஹோத³ரு ஹோக³லி எனுத**
**பாத³தி³ந்தி³டி³து³ மஸ்தக பரியந்தர**
**பே⁴தி³ஸி நோடி³த³ளவன ||27**

என்ன வேண்டுமானாலும் ஆகட்டும், இவனை விட்டு செல்ல மாட்டேன். வெட்கம் என்னை விட்டுச் சென்றாலும் செல்லட்டும் என்றவாறு கால் முதல் தலை வரையில் மெதுவாக அவனை பார்த்தாள்.

**ஸொக³ஸிந்த³ நித்³ரெகெ³ய்தி³ந்து³ஹாஸனு தொட்ட**
**சோகெ³ய குப்பஸத³ கொனெயல்லி**
**பி³கி³து³கட்டிர்த³ பத்ரிகெயன்னுமெல்லனெ**
**தெகெ³து³கொண்ட³ளு மந்த்ரி தனுஜெ ||28**

மிகவும் ஆழமான தூக்கத்தில் இருந்தான் சந்த்ரஹாஸன். அவனுடைய நீளமான சோகெய (long skirt) சட்டையின் முனையில் கட்டப்பட்டிருந்த பத்திரிக்கையை மெதுவான எடுத்துக் கொண்டாள் அந்த மந்திரியின் பெண்.

**நித்³ரெய திளிது³ எச்செத்து நோடு³வனெந்து³**
**ஹொத்³தி³த்³த³ லஜ்ஜெ பா⁴வத³லி**
**ஸத்³து³ மாட³தெ³ ஸம்பிகெ³ வ்ருக்ஷவனெ**
**ஸார்த்து³முத்³ரெயொடெ³த³ளம்பு³ஜாக்ஷி ||29**

தூக்கம் கலைந்து இவன் எழுந்து பார்ப்பான் என்று தான் கொண்டிருந்த வெட்கத்தில், சத்தம் எழுப்பாமல், அருகில் இருந்த ஸம்பிகெ மரத்தை அடைந்து, அந்த பத்திரிக்கையின் முத்திரையை உடைத்துப் பார்த்தாள், மீனைப் போன்று கண்களைக் கொண்ட அந்தப் பெண்.

**நோடி³து³ தம்ம தந்தெ³ய ஸ்வஹஸ்தத³**
**மோடி³ய ப³ரெத³ ப³ரஹனு**
**ரூடி⁴யொளதி செலுவ இவனெந்து³ களுஹித³னா**
**மாடி³த³ ஸுக்ருதத³ ப²லதி ||30**

தன் தந்தை, தன் சொந்தக் கையெழுத்தில் எழுதிய கடிதத்தை அவள் பார்த்தாள். இந்த ப்ரதேசத்தில் (ரூடியில் = பழக்கத்தில்) மிகவும் அழகன் இவன் என்று (என்னை இவனிடம்) அனுப்பியிருக்கிறான். இது தான் செய்த ஸுக்ருதத்தின் பலனே என்று நினைக்கிறாள்.

**ஸ்ரீமது மந்த்ரி து³ஷ்டபு³த்³தி⁴ மத³னகெ³**
**நேமிஸி களுஹித³ கார்ய**
**ஸீமெக³ரஸு இவனஹனு காணுத ஶீக்⁴ர**
**விஷவ கொடு³வது³த்தமவு ||31**

அரசனின் மந்திரியான துஷ்டபுத்தி, தன் மகனான மதனனுக்கு எழுதிய கடிதம் அது. அதில் இவன் (கடிதத்தை கொண்டு வருபவன்) இந்த பகுதியின் அரசன். உடனடியாக இவனுக்கு விஷம் கொடுத்து கொல்லவும் (என்று எழுதியிருந்தது).

**ஒந்து³ லிகி²த ஸஹஸ்ர லிகி²த³வு**
**எந்து³ பா⁴விஸி நின்ன மனதி³**
**ஸந்தே³ஹவில்லதெ³ விஷவ கொடு³வுது³**
**முந்த³க்கெ லேஸுண்டு நமகெ³ ||32**

மேலும் அதில் இவ்வாறு எழுதியிருந்தது. நான் ஒரு முறை எழுதியிருப்பது, ஆயிரம் முறை எழுதியதற்கு சமம் என்று உன் மனதில் நினைத்து, சந்தேகம் கொள்ளாமல், இவனுக்கு விஷம் கொடுக்கவும். அதனால், எதிர்காலத்தில் நமக்கு நல்லதே நடக்கும்.

**விப்பன்னவார்கி³ர்த³ வரன காணுத**
**நம்மப்பனவரு களுஹித³ரு**
**தப்புண்டு இத³ரொளு கெடு³வுது³ கார்ய**
**கைதப்பெந்து³ மனத³ல்லி திளிது³ ||33**

தூங்கிக் கொண்டிருந்த அந்த சந்த்ரஹாஸனை பார்த்தவாறு, நம் தந்தையா இவ்வாறு (கடிதத்தை) அனுப்பியிருக்கிறார்?. இதில் ஏதோ தவறு இருக்கிறது. (இதனை அப்படியே விட்டால்) காரியம் கெட்டு விடும். காரியம் கை மீறிப் போய்விடும் என்று மனதில் நினைத்தாள்.

**வாகாரவனெ செள்ளுகுரிந்த³லி தித்³தி³**
**யோகாரவனெ மாடி³த³ளு**
**ஜோகெயிந்த³லி எந்தி³னந்த³தி³ கட்டி**
**விரஹாகாதுரதி³ந்த³ மருகி³த³ளு ||34**

'விஷவா' என்று கடிதத்தில் இருந்ததை, 'விஷயே' என்று திருத்தினாள். (விஷத்தை கொடுக்கவும் என்பதை விஷயத்தை கொடுக்கவும் என்று திருத்தினாள். அவளுடைய பெயர் விஷய). மிகவும் கவனத்துடன், முன்னர் இருந்தவாறே அந்த கடிதத்தை கட்டி வைத்தாள். தான் விரக தாபத்தில் விழுந்தாள்.

**தெகெ³து³ சாபவ கிவிகே³ரிஸி மன்மத²**
**பி³கி³து³ கட்டித³ ப⁴ரதி³ந்த³**
**தகு³லிது எதெ³கெ³ கூரம்பு³ பெ³ன்னலி**
**தட்டுகி³யிது தலெயனு எத்தி ||35**

மன்மதன், வில்லினை எடுத்து, காதுவரை நாண் இழுத்து, கட்டினான். இதயத்தில் வந்து குத்தியது கூர் அம்பு முதுகில் வந்து தட்டியது. தூங்கிக் கொண்டிருந்தவனையே தலை தூக்கி பார்த்தவாறு இருந்தாள்.

**ஹிந்த³க்கெ ஹொஜ்ஜெயனிடு³வரெ காலேளவு**
**நிந்து³ நிந்தொ³ம்மெ நோடு³வளு**
**ஹொந்தி³து இந்து³ஹாஸன மேலெ சித்தவு**
**கந்தி³ காதரிஸுதலிஹளு ||36**

அவன் பின்னால் அடி மேல் அடி வைத்து நின்று நின்றவாறு அவனை பார்க்கிறாள். சந்த்ரஹாஸனின் மேல் அவள் கவனம் இருந்தது. விரகத்தில் குன்றி தவித்துக் கொண்டிருந்தாள்.

**மத³னவிகாரதி³ந்த³லி மோஹனாங்கி³யு**
**பெ³த³ரித³ ஹுல்லெயந்த³த³லி**
**நது³ருத³ப்புவளு நில்லுவளு நாசுவளொம்மெ**
**ஹ்ருத³ய ஸஞ்சலிஸுதலிஹளு ||37**

மன்மதனின் இந்த விளையாட்டினால், அந்தப் பெண், பயந்த மான் போல, ஓடுவாள். நிற்பாள். வெட்கத்தில் ஒவ்வொருமுறை மனதில் சஞ்சலம் கொள்கிறாள்.

**மனவ பே³ரிட்டு மாதாட³ளெல்லர கூடெ³**
**வினயதி³ ஹுஸி நுடி³க³ளனு**
**மன்மத² தாபத³ பெ³மார்வனிக³ளிந்த³**
**நெனெத³வு உட்ட தே³வாங்க³ ||38**

மனதில் அடியிலிருந்து யாரிடமும் பேசுவதில்லை. யாரிடமும் மரியாதையுடன், இதமான வார்த்தைகளை பேசுவதில்லை. மன்மதனின் தாபத்தின் பலன்களால், வியர்வைகளால் அவளது ஆடைகள் நனைந்தன.

**ஹேளதி³த்³த³ரெ ஹுஸிவுதெ³ ஈ வார்த்தெயு**
**கா³ளிகெ³ பரிமள மாஜுவுதெ³**
**தா³ளிம்ப³ பக்வவாத³ரெ பா³ய பி³ரியதெ³**
**நாளெ துப்³பு³வுது³ ஈ ஸுத்³தி³ ||39**

சொல்லவில்லையென்றால் தெரியுமல் போகுமா இந்த விஷயம்?. காற்றில் நறுமணம் பரவாமல் இருக்குமா?. மாதுளை பக்குவம் அடைந்தால் வாயை அடையாமல் இருக்குமா?. நாளை அனைவருக்கும் இந்த செய்தி தெரியவே போகிறது.

**இவள மனோபீ⁴ஷ்ட ஆயதவாத³ரெ**
**சந்த்³ரமௌளேஶன ஸதிகெ³ ப³ஹு**
**வித⁴தி³ந்த³ அர்ச்சனெ மாடி³ஸுவெனெந்து³**
**யுவதியரு ஹொத்தரு ஹரகெயனு ||40**

இவளுடைய மனோபீஷ்டம் நிறைவேறினால், சந்த்ரமௌளீஸ்வரனின் மனைவிக்கு (பார்வதிதேவிக்கு) பல விதங்களில் அர்ச்சனை செய்கிறேன் என்று அந்தப் பெண்ணின் தோழிகள் ப்ரார்த்தனை செய்தனர்.

**குட்டினிந்த³லி இந்து³ஹாஸகெ³ ப³ஹு**
**மனவிட்ட பா³லெயனொட³கொ³ண்டு³**
**கட்டிகங்கணத³ நாரியரெல்லரு தாவு**
**பட்டணகாகி³ நடெ³த³ரு ||41**

சந்திரஹாஸனிடம் தன் மனதினை பறிகொடுத்துவிட்டு, மிகவும் ரகசியமாக தன் தோழிகளுடன் சேர்ந்து, அழகான கங்கணங்களை கட்டியிருந்த அந்த பெண்கள் அனைவரும், பட்டணத்தை நோக்கி நடந்தனர்.

**குடி³தெ¹க³ங்க³ள கோமலெயரெல்லரு**
**எட³ப³லத³லி கரவிடி³து³**
**நுடி³ஸுத மாதாடி³ஸுத மெல்லமெல்லனெ**
**நடெ³தந்த³ரவரவர மனெகெ³ ||42**

கருப்பு கண்களைக் கொண்ட, மெலிதான தேகம் கொண்ட பெண்கள் அனைவரும், இடது வலங்களில் கைபிடித்து பேசியவாறு, பேச வைத்தவாறு, மிகவும் மெதுவாக, அனைவரும் அவரவர்களின் வீட்டுக்கு நடந்தனர்.

**அரமனெ ஹொக்களு மந்த்ரிய தனுஜெ**
**உப்பரிகெ³யனேரி மன்மத²**
**நுருஹின பா³ணதி³ந்த³லி இந்து³ஹாஸன**
**ப³ரவ நோடு³திர்த்த³ளப³லெ ||43**

மந்திரியின் பெண்ணும் அரண்மனைக்கு திரும்பினாள். உப்பரிகையில் ஏறி, மன்மதன் விட்ட பாணத்தில் தவித்தவாறு, சந்த்ரஹாஸனின் வருகையை பார்த்தவாறு நின்றிருந்தாள்.

**ஹாஸோரு தளிர ஹாஸிகெக³ள ஸகி²யரு**
**பீ³ஸுணிகெ³யலி பீ³ஸுவரு**
**லேஸாத³ பன்னீர சளெயவ கொடு³வரு**
**ஆபத்து அளலுவளொம்மெ ||44**

தண்மையான படுக்கைகளை தோழிகள் விரித்தனர். விசிறி கொண்டு வீசுகின்றனர். சுகந்தமான பன்னீர் நிறைந்த பாத்திரத்தை கொடுத்தனர். இவை அனைத்தும் செய்தாலும், அவள் அவ்வப்போது அழுது கொண்டிருந்தாள்.

**வீணெய நுடி³ஸலோல்லளு இந்து³முகி²**
**ஸர்ப்பவேணியரொட³னெ மாதாட³ள்**
**ஆனந்த³தி³ந்த³லி கா³னவ மாட³ளு**
**பஞ்சபாணனுருஹு ப²னவாகி³ ||45**

வீணையின் வாசிப்பினை தாங்குவதில்லை அவள். இந்துமுகி. பாம்பு போன்ற கூந்தலையுடைய பெண்களுடன் பேசுவதில்லை. மகிழ்ச்சியுடன் பாடுவதில்லை. பஞ்ச பாணங்களால் கடுமையாக தாக்கப்பட்ட அந்தப் பெண்.

**ஸாரங்க³ எரளெ ஜவாஜிய மரியனு**
**தோரதெ³ மரெய மாடு³வளு**
**நீரஜமுகி²யரெல்லரு கூடி³ ஶைத்யோப**
**சாரவ மாடு³தலிஹரு ||46**

தவிக்கும் மான்குட்டியைப் போல செய்வதறியாமல் மறைந்து நிற்கிறாள். தாமரைக் கண்களைக் கொண்ட பெண்கள் அனைவரும் அவளை குளிர்விப்பதற்காக பல்வேறு உபசாரங்களை செய்கின்றனர்.

**அங்க³ஜனட்டுளி அதிக⁴னவாகி³ரெ**
**ஶ்ருங்கா³ரவனவனெ ஹொக்கு**
**ஶ்ருங்க³த³ ரப⁴ஸக்கெ கோகிலெ**
**ஸ்வரக³ய்யெ அங்க³ஜ தாபவு ஹெச்சி ||47**

மன்மதனின் தொந்தரவு மிகவும் கடுமையாக இருக்க, அழகான அந்த வனத்தை அடைந்து கார்மேகத்தின் நடைக்கு குயில் அழகான குரலெடுத்து பாட, இங்கோ இந்தப் பெண்ணின் விரக தாபம் அதிகமடைந்தது.

**ஹரன கோபதி³ ஸிக்கி ஜ்வாலெயொ**
**ளுரித³வ ஏகெ புட்டிஸித³னோ யெளவனகெ**
**ஸர்வக³³ராஸவ மாட³லி ப²ணிசந்த்³ர**
**திருகி³ தானேகெ ப³ஹனோ ||48**

ருத்ரதேவரின் கோபத்திற்கு சிக்கி, (அவரது நெற்றிக்கண்ணின்) நெருப்பினால் எரிந்தவன் ஏன் இவளை பிறக்கச் செய்து, யௌவனத்தை கொடுத்தானோ?. அனைத்தையும் உண்பவனான சந்திரன், தான் ஏன் திரும்ப வந்தானோ?.

**குஸுமக³ந்தி⁴னி காமிஸித³ புருஷ தன்ன**
**வஶவாக³பே³கு எந்தெ³னுத**
**ப³ஸவளிவுதலி சிந்தெய மாடு³தலிரெ**
**ஶஶிஹாஸ நித்³ரெய திளித³ ||49**

நல்ல நறுமணம் கொண்ட அந்தப் பெண், தான் விரும்பிய ஆடவன், தன் வசம் ஆகவேண்டும் என்று சொல்லியவாறு, மிகவும் மயங்கியவாறு, கவலைப்பட்டவாறு இருக்க, அங்கு சந்த்ரஹாஸன் தூக்கம் கலைந்து எழுந்தான்.

**மைமுரிதெ³த்³து³ கொளன தீரகெ ப³ந்து³ கைகாலு**
**மோரெய தொளெது³**
**கைரத³கு³ளிகெ³ கர்பூரத³ வீள்யவ ஹாகி ஹுயவ**
**சப்பரிஸி ஏரித³னு ||50**

தூக்கம் கலைந்து எழுந்தவன், குளக்கரைக்கு வந்து, கை, கால், முகத்தை கழுவிக் கொண்டு, மூலிகை கலந்த கற்பூர வெற்றிலையை போட்டுக் கொண்டு, குதிரையை தட்டிக் கொடுத்து, அதில் ஏறினான்.

**ஸ்வாரிவந்த³னு தண்ட³தண்ட³த³லி**
**த்³வாரவ தா³ண்டி நடெ³த³னு**
**ஊர ஹொக்கனு கோ³தூ⁴ளியிந்த³லி படெ³**
**கா³ரிகெ³ ப³ந்தி³ருவ ||51**

பற்பல குழுக்கள் கூடும் இடங்களை தாண்டி குதிரையில் சவாரி வந்தான். பல வாயில்களை தாண்டி வந்தான். கோதூளி எனப்படும் விடியலில் ஊரை அடைந்தான். ஊர் படையினரிடம் இவ்வாறு கூறினான்.

**கேளிப³ல்லிரெ புளிந்த³னஸுத கருணாளு**
**ஸ்ரீ ஹரிய கிங்கரனு**
**ஆலஸ்யவாயிது ப³ந்து³ மன்னிஸி கோ³ஷ்டி**
**நாளெ ஆதீ³து சித்தெயிஸு ||52**

புளிந்தனின் மகனான நான், கருணாளுவான ஸ்ரீஹரியின் சேவகன் வந்திருக்கிறேன். மிகவும் சோர்வாக இருக்கிறது. மன்னியுங்கள். தாமதம் ஆகிவிட்டது. கருணை காட்டுங்கள் – என்று சொல்லி வாருங்கள் என்றான்.

**ஸ்ரீபதிப⁴ஜக ப³ந்தா³லஸ்யவாயிது**
**ஈ பரியலி பாத³க்கெ**
**தாபத்ரயவ பி³ட்டு அவன மன்னிஸு**
**பே³க³ பூ⁴ப சித்தயிஸுவதா⁴ன ||53**

ஹே அரசனே. (சந்த்ரஹாஸன்) பயணம் செய்து வந்ததால் சோர்வடைந்திருக்கிறான். ஆகையால், அவனை விரைவில் மன்னித்துவிடு. ஹே அரசனே. அவனுக்கு கருணை காட்டுங்கள் – என்றனர்.

**ஆ மாத கேளிதி³ரெத்³து³ மத³ன ப³ந்து³**
**ஸோமஹாஸன தக்கெயிஸி**
**க்ஷேமவ கேளி கத்³து³கெ³ய தந்தி³ரிஸித³**
**தா³மோத³ரன கிங்கரகெ³ ||54**

இவ்வாறான பேச்சினைக் கேட்டு, மதனன் வந்து சந்த்ரஹாஸனை வரவேற்று, அவனுடைய நலன்களை கேட்டு, (அவன் அமர்வதற்கு) ஆசனங்களை வரவழைத்தான், பகவந்தனின் பக்தனுக்கு.

**இந்தி³ன தி³வஸ உத்தம நிம்ம த³ருஶன**
**ஒந்து³ கோடி லாப⁴வெந்த³**
**சந்த³த³லி ஸிம்ஹாஸனவ தந்தி³ரிஸித³**
**ப³ந்த³ வார்த்தெயனு கேளித³னு ||55**

இன்றைய நாள் மிகவும் நல்ல நாள். உங்களின் தரிசனம் எனக்கு ஒரு கோடி லாபம் ஆனதைப் போல என்றான். மிகவும் அழகான சிம்ஹாஸனத்தை கொண்டு வந்து இறக்கினான். தாங்கள் வந்த நோக்கம் என்ன என்று கேட்டான்.

**ஏகாந்தத³லென கரெது நிம்மய்ய**
**அனேக பரியலி பு³த்³தி⁴க³லிஸி**
**லோகவரியத³ந்தெ ஈ லிகி²தவ ஒய்து³**
**ஏகாந்தத³லி கொடு³ எந்த³ ||56**

உங்களின் தந்தையான மந்திரி, என்னை தனிமையில் அழைத்து, பற்பல புத்திமதிகளை சொல்லி, வேறு யாருக்கும் தெரியாதவாறு, இந்த கடிதத்தை எழுதி, இதனை உங்களிடம் தனிமையில் கொடுங்கள் என்றார் – என்றான் சந்திரஹாஸன்.

**தந்தெ³ களுஹித³ பத்ரிகெய மத³னனொளிந்**
**தெந்து³ தக்கொண்டு³ ஸபெ⁴யிந்த³**
**இந்து³ஹாஸன குள்ளிரிஸி தனுஜெகூ³டி³**
**ப³ந்த³ தன்னந்தஸ்த²புரகெ ||57**

தன் தந்தை கொடுத்து அனுப்பிய கடிதத்தை மதனன் கொடுங்கள் என்று வாங்கிக் கொண்டு, தன் சபையில் சந்த்ரஹாஸனை அமர்த்தி, மந்திரியின் மகனான அவன், தன் அந்தப்புரத்திற்கு வந்தான்.

**பி³ச்சி நோடி³தனு ஓலெயனாக³ மந்த்ரிய**
**உத்ஸாஹதொ³ஸகெ³ ஸம்ப்⁴ரமவ**
**அச்சுத ஹரிய கிங்கர தங்கி³கெ³ வரனெந்து³**
**நம்மப்ப மெச்சித³ நீ வரன ||58**

அந்த கடிதத்தை பிரித்து படித்தான். மந்திரியின் உற்சாக வசனங்களை படித்தான். இந்த அச்சுதனின் சேவகனை, தன் தங்கைக்கு வரனாக தன் தந்தை தீர்மானம் செய்தான் என்று நினைத்தான்.

**ஸ்ரீமது மந்த்ரிது³ஷ்டபு³த்³தி³ மத³னகெ³**
**நேமிஸி களுஹித³ கார்ய**
**ஸீமெக³ரஸு இவனஹனு காணுத ஶீக்⁴ரதி³**
**விஷயெ கொடு³வுது³த்தமவு ||59**

அந்த கடிதத்தில் இவ்வாறு எழுதியிருந்தது. மந்திரியான துஷ்டபுத்தி மகனான மதனனுக்கு இவ்வாறு செய்ய வேண்டும் என்று சொல்லப்பட்ட செயல். இவன் இந்த பகுதிக்கு அரசன். விரைவாக விஷயே (மந்திரியின் மகள்) திருமணம் செய்து கொடுக்க வேண்டும்.

**ஒந்து³ லிகி²த ஸஹஸ்ர லிகி²தவு**
**எந்து³ பா⁴விஸி நின்ன மனதி³**
**ஸந்தே³ஹவில்லதெ³ விஷயெ கொடு³வுது³**
**முந்த³க்கெ லேஸுண்டு நமகெ³ ||60**

நான் எழுதிய ஒரு கடிதம், ஆயிரம் கடிதங்களுக்கு சமம் என்று மனதில் நினைப்பாயாக. எவ்வித சந்தேகமும் இன்றி, விஷயேவை கொடுக்கவும். இதனால் அடுத்து நமக்கு நன்மையே நடக்கும்.

**கரெஸித³ க³ணித¹ஜ்ஞரிகெ³ க³த்³து³கெ³ய**
**தந்தி³ரிஸி குள்ளிரிஸி கேளித³னு**
**பெ³ரெஸி ப³ந்தி³தெ³ க³ணகூடராயிக³ளெந்து³**
**அரிஸினக³ள திவரித³ரு ||61**

(மந்திரியின் மகன்) உடனடியாக அறிஞர்களை (ஜோதிடர்களை) அழைத்தான். நாற்காலிகளை வரவழைத்து அவர்களை அமரச் செய்து கேட்டான். ஜாதக கட்ட ராசிகளை எழுதி வந்திருக்கிறோம் என்று கூறியவர்கள், அவற்றில் மஞ்சள்களை தடவினர்.

**கு³டி³ தோரணக³ள கட்டி பட்டணவன்னு**
**தட³வமாட³தெ³ ஸிங்க³ரிஸி**
**கிடி³ பி³டி³ தம்மட பஞ்சவாத்⁴யக³ளு**
**உக்³க³டி³ஸிது குந்தளபுரதி³ ||62**

கோயில்களில் தோரண அலங்காரங்களை கட்டி, பட்டணங்களை உடனடியாக அலங்காரங்கள் செய்து, பல்வேறு விதமான பஞ்சவாத்தியங்களை ஒலிக்கச் செய்தான், அந்த குந்தளபுரத்தில்.

**மங்க³ள வாத்⁴யக³ளெஸெத³வு ஸகி²யரு**
**ரங்க³வாலெக³ள ஹாகுவரு**
**அங்க³ஜஸகி²யரு இந்து³ஹாஸகெ³ண்ணெயனொத்தி**
**பொங்க³ளஸிகெ³ன்யெரெத³ரு ||63**

மங்கள வாத்தியங்கள் முழங்கின. தோழிகள் ரங்கோலிகளை வரைந்தனர். தாமரைக் கண்களைக் கொண்ட பெண்கள், சந்திரஹாஸனுக்கு எண்ணெய் பூசி, மங்கள ஸ்னானம் செய்வித்தனர்.

**அல்லிய ஸுத்³தி³யனெல்லவ ஸகி²யரு**
**மெல்லனெ விஷயெக³ருஹித³ரு**
**மல்லிகெ³க³ந்தி⁴ தா மனத³ விகாரவ**
**தல்லணவனெ தம்பி³ஸிது³ ||64**

அங்கு நடந்த செய்திகள் அனைத்தையும் அந்த தோழிகள் மெதுவாக விஷயே' க்கு தெரிவித்தனர். மல்லிகை போன்ற நறுமணம் கொண்டவளின் மனதின் சஞ்சலங்களை அந்த செய்தி தண்மை ஆக்கியது.

**பி³ஸிநீர மஜ்ஜன எரதி³ந்து³ஹாஸகெ³**
**ஹொஸப¹ட்டெயனுட³கொட்டு**
**எஸெவ மாணிக ஹொன்னபத³கவ கொட்டரு நொஸலிங்கெ³**
**பா³ஸிங்க³ கட்டி ||65**

சந்திரஹாஸனுக்கு வென்னீர் ஊற்றி மங்கள ஸ்னானம் செய்வித்து, புதிய ஆடைகளை அணிவிக்கக் கொடுத்து, ஒளிரும் மாணிக்கம், பொன், பதக்கம் ஆகியவற்றை கொடுத்தனர். அவனின் நெற்றிக்கு பாஸிங்கத்தை கட்டினர்.

**நம்பி³த³ ப⁴க்த குடும்பி³ ரக்ஷகனஹு**
**தெ³ம்ப³ ஹொளவனகட்டெ ரங்க³**
**பி³ம்பி³ட³த³லி இந்து³ஹாஸன மது³வெகா³**
**ரம்ப⁴க³ளனெ மாடி³ஸித³ || 66**

தன்னை நம்பிய பக்தர்களின் குடும்பங்களை காப்பவன் என்று பெயர் பெற்றவனான ஹொளவனகட்டெ ரங்க, எவ்வித தடைகளும் இன்றி, சந்திரஹாஸனின் திருமணத்திற்கான ஏற்பாட்டினை செய்தான்.

## நான்காம் ஸந்தி

**விஷய சம்பகமாலினிகெ[3] புருஷனாகி[3]**
**ஶஶிஹாஸ காளியனொலிஸி**
**அஸுவ படெ[3]த[3] மாவபா[4]வன ஜக[3]கதி**
**பொஸதாகி[3] தோரிதாஶ்சர்ய ||**

ஸம்பங்கி மலர்களால் ஆன மாலைகளை சூடிய விஷயைக்கு புருஷனாக சந்திரஹாஸன், காளியை வணங்கி மகிழ்வித்து அரசினை அடைந்த தன் மாமனார், மைத்துனர்களின் ஆட்சிக்கு (மக்களுக்கு) மிகவும் வியப்பினை அளித்தான்.

**மத்தெ கேளய்ய அர்ஜுன இந்து[3]ஹாஸகெ[3]**
**மித்[2]யத[3] விஷவனு உணிஸி**
**ஹத்யவ மாடி[3] கொல்லுவெனெந்து[3] நேமிஸெ**
**க்ருத்யவெ பத்[2]யவாது[3]தனு ||1**

ஹே அர்ஜுனனே கேள். சந்த்ரஹாசனுக்கு கெட்டதான விஷயத்தை கொடுத்து, கொன்றுவிடு என்று சொல்லிய செயலானது, அவனுக்கு நல்லதாகவே முடிந்தது.

**குந்தியாத்மஜ கேளு இந்து[3]ஹாஸகெ[3] லக்ஷ்மி**
**காந்தன கருணத[3] ப[3]கெய**
**குந்தளேந்த்[3]ரன ஸுகுமாரி சம்பகமாலெ**
**மந்த்ரிய தனுஜெய விஷய ||2**

குந்தியின் மகனே, சந்த்ரஹாஸனுக்கு லக்ஷ்மிகாந்தனின் கருணை எப்படி இருந்ததென்று கேள். குந்தளேந்த்ரனின் மகளான சம்பக மலர்களால் ஆன மாலையை அணிந்தவளான, மந்திரியின் மகளான விஷயை (திருமணம் செய்தாள்).

**இந்து[3]ஹாஸன ஸிங்க[3]ரிஸி பா[4]வகியரு**
**ப[3]ந்த[3]ரு விஷயெ இத்[3]தெ[3]டெ[3]கெ[3]**
**மந்த[3]க[3]மனெ மாதாட[3]லொல்லளு லஜ்ஜெ**
**யிந்த[3]த்த தலெய தக்[3]கு[3]வளு ||3**

தோழிகள், சந்த்ரஹாஸனை அலங்கரித்து, விஷயை இருந்த இடத்திற்கு அழைத்து வந்தனர். மெதுவாக நடப்பவளான அவள் வெட்கத்தினால் எதுவும் பேசவில்லை. தலை குனிந்தவாறு இருந்தாள்.

**நின்ன மனோபீ[4]ஷ்டெ ஆயிதவ்வ தாயி**
**பன்னக[3]த[4]ரன க்ருபெயிந்த[3]**
**இன்னேகெ மனத[3] ஸம்ஶயவெந்து[3] ஸகி[2]யரு**
**ஸன்மானவனெ மாடி[3]தரு[3] ||4**

உன் மனதின் ஆசைகள் நிறைவேறின தாயே. அந்த பன்னகதரனின் (ருத்ரதேவரின்) கருணையால். இனி எதற்கு மனதில் கவலைகள் என்று அவளது தோழிகள் அவளுக்கு சமாதானம் செய்தனர்.

**பா[3]ரவ்வ தாயி மஜ்ஜனவ மாடே[3]ளெந்து[3]**
**ஜாரித[3] குருளனோஸரஸி**
**வாரிஜமுகி[2]யரு ஒட[3]கொ[3]ண்டு[3] ப[3]ந்த[3]ரு**
**சாருமாணிக்க[2]சித பீட[2]க்கெ ||5**

வாம்மா, தாயே. ஸ்னானம் செய்வாயாக என்று பாய்ந்த கூந்தலை ஒதுக்கினர். தாமரை போன்ற முகம் கொண்டவர்கள் அவளை அழைத்து வந்தனர், பளபளக்கும் மாணிக்கம் இழைத்த பீடத்திற்கு.

**பருஷத[3] கணிய தந்தி[3]ரிஸி குள்ளிரிஸோரு**
**ஹரஸி அக்ஷதெக[3]ளனிட்டு**
**ஸரஸதி[3] முடி[3] பி[3]ச்சி ஸம்பிகெ[3]ண்ணெயனொத்தி**
**அரஸினக[3]ள திவரித[3]ரு ||6**

வீரமான அந்தப் பெண்ணை அழைத்து வந்து அங்கு அமர்த்தினர். அவளை துடைத்து, அக்ஷதைகளை இட்டனர். உடனடியாக அவளது கூந்தலை விடுவித்து, ஸம்பிகை எண்ணையை தடவி, மஞ்சள்தூளை பூசினர்.

**கன்னடி[3] கத[3]பினங்க[3]னெகெ[3] மஜ்ஜன மாடி[3]**
**பொன்ன தம்பி[3]கெ[3]ய லோகு[1]ளிய**
**ரன்னது[3]டியரு ராஜீவமுகி[2]யரு**
**பெ[3]ன்னலோகுளியனெரெத[3]ரு ||7**

கண்ணாடியைப் போல பளபளக்கும் தேகம் கொண்ட பெண்ணுக்கு ஸ்னானம் செய்வித்து, தங்க சொம்பில் புனித நீரை இறைத்தார்கள். சிவப்பு உதடுகளைக் கொண்டவர்கள், தாமரை போன்ற முகம் கொண்டவர்கள், முதுகில் புனித நீரை இறைத்தார்கள்.

**முடி[3]மெய்க[3]ளனொஸரிஸி து[3]கூலவ**
**ப[3]ட[3]னடு[3]விகெ[3] அளவடி[3]ஸி**
**ஜடி[3]ததாப[4]ரணகரடி[3]கெ[3]யனு**
**தந்தி[3]டு[3]வரு இக்கெலத[3]ல்லி ||8**

தலை கூந்தலைகளை துடைத்து, பட்டுத்துணிகளை உடம்பில் போர்த்தி, பளபளக்கும் ஆபரண, நகைகளை கொண்டு வந்து அவள் அருகில் வைத்தார்கள்.

**பீட[2]த[3] மேலெ குள்ளிரிஸி மண்டெ[3]ய ஹிக்க**
**பாடி[1]ஸி துருப[3]னொஸரிஸி**
**மீடாத[3] மாணிக்ய முத்தினப[3]ட்டு**
**லலாட மத்[4]யத[3]லி இடு[3]வரு ||9**

பீடத்தின் மேல் அமர்த்தி, தலையை நன்றாக சீவி, கூந்தலில் முடிச்சு போட்டு, பளபளக்கும் மாணிக்கம், முத்து கலந்த வட்டமான பொட்டினை நெற்றியின் நடுவில் வைத்தனர்.

**கஞ்ஜலோசனெகெ[3] அஞ்ஜன ஹச்சி கர்ணவ**
**ரஞ்ஜிஸி பெ[3]ளகு[3]வ மூகு[3]திய**
**பஞ்ஜெனோலெய முத்தின கொப்பனிடு[3]வரு**
**மந்த[3] க[3]மனெயரு ஹருஷத[3]லி ||10**

தாமரைக் கண் கொண்டவளுக்கு மை தடவி, காதுகளை அலங்காரம் செய்து, ஒளிரும் மூக்குத்தியை, அதில் முத்து கற்களை வைக்கின்றனர். இவ்வாறு பெண்கள் அவளை மகிழ்ச்சியுடன் அலங்கரிக்கின்றனர்.

**அக[3]ருவ எளெ ஸம்பிகெ[3]ய நாஸிகத[3]ல்லி ஹொளெவ**
**மூகு[3]தியனிக்குவரு**
**கோகிலகா[3]னெ குடிலகுந்தளதா[3]னெ**
**பா[3]கி[3]த[3] பா[3]வுலிக[3]ளலி ||11**

ஒளிர்வதான மலர்ந்த ஸம்பிகை போன்ற மூக்கில், ஒளிரும் மூக்குத்தியை வைக்கிறார்கள். குயில் போல பாடுபவர்கள், சுருள் சுருளாக இருந்த கூந்தலில், யானை உருவம் பொறித்த ஆபரணங்களை சூடினர்.

**இட்டரு தோள சளரக்ஷெ மணிக³ள**
**கட்டிகங்கண சளகக³ள**
**உட்டரேகெ¹ய ஹிடி³வாள கட³க³**
**அளவட்டிஹ பெ³ரள முத்³ரிகெயு ||12**

தோள்களை பாதுகாக்கும் ஆபரணத்தில் மணிகளை கட்டினர். கங்கணங்களை கட்டினர். பளபளக்கும் கட்க (வளையல்களை), அளவெடுத்த விரல் முத்ரிகைகளை (மோதிரங்களை) சூட்டினர்.

**எடெ³யெடெ³கெ³ வஜ்ரத³டி³கெ³ கத³ம்ப³வ**
**கட³க³ முத்தின ஹத்தெ கட³க³**
**எடெ³பணிசிந்தாகத³ ஸரிகெ³ய**
**தந்தி³டு³வரங்க³னகெ³ நாரியரு ||13**

இடையில் வைர ஒட்டியாணம். பல முத்துக்களை சேர்த்து கட்டிய ஆபரணங்கள். தலையில் சரிகையால் ஆன ஆடையை கொண்டு வந்து கட்டினர் அந்தப் பெண்கள்.

**ஹொரஹொம்முவ குச மத்⁴யத³லி பச்செ**
**ஸர கண்ணடி²ஸர பி³ல்லஸரவு**
**கரஹரிநடு³விகெ³ இட்டரு காஞ்சீதா³ம**
**ஸரஸிஜ க³ந்தி⁴யரொலிது³ ||14**

பெரியதாக இருக்கும் மார்புகளின் நடுவில், ஒளிர்வதான காசுமாலை, மணிச்சரம், கைகளின் நடுவில் கட்டினர் ஒட்டியாணத்தை, தாமரை போல மெலிதானவளுக்கு.

**பா³ளெய கத³ளிய ஹொலுவ தொடெ³**
**கணகாலுக³ளெஸெவ பா⁴வகிய**
**ஸாலுக³ண்ணடெ கெ³ஜ்ஜெ ஸரபளி**
**ப²லிரெம்ப³ காலந்தி³கெ³யனிடு³வரு ||15**

வாழைத் தண்டினைப் போன்றதான துடை; கணுக்கால்களில் அசையும் சலங்கை. வரிசையாக மணிகள் கட்டிய சலங்கை, கலீர் என்னும் சத்தம் வர, மெதுவாக அடி வைத்து வருகிறாள்.

**கெந்தா³வரெய போலுவ பாதா³ங்கு³லி**
**உங்கு³ர முத்³ரிகெயிட்டு**
**சந்த³தி³ந்த³லி மீண்டு¹கிரிபில்லி எல்லவு**
**மந்த³க³மனெகெ³ ஒப்பித³வு ||16**

செந்தாமரை போன்றதான பாதங்கள். மெட்டிகள் அணிந்த விரல்கள். அழகான அந்த மெட்டிகள், மெதுவாக நடக்கும் அந்தப் பெண்ணிற்கு சரியாக பொருந்தின.

**பா³வன்ன பரிமள புனுகு³**
**லேபனவு ஸாரிஸி அங்க³க்கெ திகு³ரி**
**ஸுவர்ணவாத³ மாணிக முத்து க²சித³**
**ஹாவுகெ³யன மெட்டிஸித³ரு ||17**
நறுமணம் மிக்க புனுகு கலவையை கலந்து அவளின் கைகளில் தடவினர். தங்கமயமான, மாணிக்க, முத்து இழைத்த பாதுகைகளை அவளுக்கு அணிவித்தனர்.

**நாரியரெட³ப³லத³லி கரவிடி³யலு**
**சாருவத³னெ சஞ்சலாக்ஷி**
**ஆரடி³கு³ருளின அலஸதெ³ மணிய**
**ப³ந்தே³ரித³ளொஜ்ரத³ந்த³ணவ ||18**

இடது, வலது என இரு புறங்களிலும் பெண்கள் அவள் கை பிடித்து நடக்க, அழகான முகம் கொண்ட, சஞ்சலம் கொண்ட கண்களைக் கொண்ட அவள், கருங்கூந்தல்களை ஆட்டாதவாறு, அந்தப் பெண் வந்து தன் பல்லக்கில் ஏறினாள்.

**முத்தெயித³யரு மங்க³ளகீ³த பாடு³த**
**ஹொத்தரு களஸ கன்னடி³ய**
**இத்தரத³லி சாமர டா⁴ளிஸுவரு**
**ஹொத்தித³ காளஞ்ஜியவரு ||19**

தசரத மகாராஜாவின் மக்கள் நால்வர் உண்டு. அந்த தசரத மகாராஜாவிற்கு மூன்று மனைவிகள் உண்டு. தாமரை முகத்தை கொண்டவளான கௌஸல்யாதேவிக்கு, ராமசந்திரன் மகனாக அவதரித்தான். அவனே அஸுரர்களைக் கொல்பவன். அவனே உங்களின் தந்தை.

**ஆ புரவனு பி³ட்டு இல்லிகே³தகெ ப³ந்தி³**
**ஈத வால்மிக எனுவரு**
**ஆத நம்மய்யகெ³ ஏனு தப்பனு மாடி³தெ³யோ**
**நூகிபி³ட்டரு வனதா³கெ³ ||168**

(அப்போது அந்தக் குழந்தைகள் இவ்வாறு கேட்கின்றனர்). அந்த நகரத்தை விட்டு, இந்த வால்மிகியின் இடத்திற்கு ஏன் வந்தீர்கள்? அப்படியான எங்களின் தந்தைக்கு என்ன தவறினை நீங்கள் செய்தீர்கள்? அவர் உங்களை இந்த வனத்திற்கு தள்ளிவிட்டாரே?.

**தாடகி³த்தி ப³ந்து³ பாபக்கெ பட²ப³ரெது³**
**நூகிபி³ட்டளு யன்ன மெய்கெ³**
**ப³ந்தமாரி வல்லெனெந்த³ரெ பி³டு³வுதெ³**
**இது நன்ன விதி⁴ காட³லாகி³ ||169**

கெட்டவளான ஒருத்தி வந்து, என்னுடைய பாவத்திற்காக ஒரு படம் வரைந்து, என் மேல் அதனை தள்ளி விட்டாள். வந்த நோயானாது, வேண்டாம் என்றால் விடுமா?. இதுவே என் விதியாக மாறி, என்னை பாடாய் படுத்துகிறது.

**முஞ்ஜி க்ருஷ்ணாஞ்ஜின த³ண்ட³ கய்யலி கொட்டு**
**சந்த³த³ யக்ஞபவித்ரா**
**சந்த³த³ ஶ்ரீராம கா³யத்ரி உபதே³ஶ**
**ஸந்த்³யவந்த³னவ கலிஸித³ரு ||170**

(லவ குஷர்களின் உபநயன நிகழ்ச்சி) பூணல், கிருஷ்ணாஜின, தண்ட ஆகியவற்றை கையில் கொடுத்து, அழகான யஜ்ஞோபவீதத்தை அணிவித்து, பிறகு, ஸ்ரீராம காயத்ரி மந்திரத்தை உபதேசம் செய்வித்து, அவர்களுக்கு ஸந்த்யாவந்தனத்தையும் கற்பித்தனர்.

**குலவித்³ய கு³ருவித்³ய ரணவித்³ய த⁴னுவித்³ய**
**ஹலவு வித்³யவ கலிஸித³ரு**
**ஹலவு வித்³யவ தாவு கலிதகுமாரரு**
**ப்ரௌட³த்¹வதி³ந் தொ³ப்புதிஹரு ||171**

குல வித்யை, குரு வித்யை, போர்க்கள வித்யை, தனுர் வித்யை, என்பதே முதலான பல வித்யைகளை கற்பித்தனர். அந்தக் குமாரர்கள் பற்பல வித்யைகளை கற்றனர். மிகவும் சிறப்புடன் சுற்றித் திகழ்ந்தனர்.

**இத்த ஸிங்க³ரிஸித³ரயோத்⁴யா பட்டணவன்னு**
**சந்த³த³ ராஜ பீ³தி³க³ளு**
**சந்த³த³ யக்ஞமண்டபயாக³ஶாலெயு**
**சந்த³த³ ஹோமகுண்ட³க³ளு ||172**

இங்கு அயோத்யா பட்டணத்தை மிகவும் சிறப்பாக அலங்கரித்தனர். அழகான ராஜ வீதிகளை, அழகான யஜ்ஞ மண்டபங்களை, யாக சாலைகளை, ஹோம குண்டங்களை நிர்மாணம் செய்தனர்.

**பட்டண பா³கிலிகெ³ கட்டோரு தோரண**
**சித்ர விசித்ர மண்டபவு**
**சித்ரவிசித்ரத³ மேலு கட்டுகளிந்தெ³**
**பட்டணவ ஸிங்க³ரிஸித³ரு ||173**

பட்டணத்தின் வாயிலுக்கு தோரணங்களை கட்டினர். பற்பல விதமான மண்டபங்களை கட்டினர். பற்பல விதமான கோட்டைகளைக் கொண்டதான அந்த பட்டணத்தை அழகுப் படுத்தினர்.

**ஹொன்னின பா³கி³லிகெ³ ஸண்ணமாவின தொளலு**
**பன்னீரு தளியனெ கொட்டு**
**கன்னேரு முத்தின ரங்க³வல்லி ஹாகோரு**
**ஹூவின தோரண கட்டோரு ||174**

பொன்னால் ஆனதான வாயிலுக்கு, சிறியதான மாவிலைத் தோரணங்களை கட்டினர். பன்னீரை தெளித்து, கன்யையர்கள் முத்தினால் ஆன ரங்கோலிகளை வரைந்தனர். பூக்களால் ஆன தோரணங்களை கட்டினர்.

**ஸ்ருஷ்டிஶ பதிராம யக்ஞமாடு³வனெந்து³**
**அஷ்டதி³க்கின ஜனரெல்லா**
**தி³க்கு தி³க்கிந்த³ ராயரு ப³ரபே³கெந்து³**
**பத்ரவ ப³ரெஸி களுஹித³ரு ||175**

ஸ்ருஷ்டி கர்த்தனான அரசனான ஸ்ரீராமன், யக்ஞத்தை செய்கிறான் என அனைத்து திசைகளிலும் இருந்த மக்கள் அனைவரும், அனைவரும் அங்கு வரவேண்டும் என்று கடிதம் எழுதி அனைவருக்கும் அனுப்பினர்.

**பொட³வீஶ பதி ராமயக்ஞமாடு³வனெந்து³**
**ஹதி³நால்கு லோகத³வரெல்ல**
**தொ³ரெக³ளு ராயரு ப³ரபே³கெந்து³**
**ப³ரெஸி பத்ரவ களிஸித³ரு ||176**

ஜகத்பதியான ஸ்ரீராமன், யக்ஞும் செய்கிறான் என்று, பதினான்கு உலகங்களில் இருக்கும் அனைவரும், அனைத்து அரசர்களும் மற்றும் அனைவரும் வரவேண்டும் என்று கடிதம் எழுதி அனுப்பினர்.

**ஸ்ருஷ்டிஶ மாடு³வந்த² யக்ஞ நோடு³வெவெந்து³**
**அஷ்டதி³க்கின ஜனரெல்ல**
**தி³க்குதி³க்கிந்தா³ராயரு உலுபெ தந்த³ரு**
**தப்பத³யோத்⁴யா பட்டணகெ ||177**

ஸ்ருஷ்டிக்கு காரணமான ஸ்ரீராமன் செய்யும் யஜ்ஞத்தை பார்க்க வேண்டும் என்று, எட்டு திசைகளிலும் இருக்கும் மக்கள் அனைவரும், வழிப் பயணத்திற்கான உணவுகளை கட்டிக்கொண்டு, அயோத்யா பட்டணத்திற்கு வந்தனர்.

**தந்த³ரு ததி⁴க்ஷீர ஆஜ்யத³ கொட³க³ளு**
**தந்த³ரு மது⁴ அம்ருதவன்னே**
**தந்த³ரு யஜனத³ த³ர்ப்பெ⁴ ஸமிதே⁴ய**
**தந்து³ ப்ரவர்க்க³பாத்ரெயல்லி ||178**

கொண்டு வந்தனர் பால், தயிர், நெய் நிரம்பிய பானைகளை. கொண்டு வந்தனர் மது, அமிர்தத்தையே. யக்ஞும் செய்வதற்கான தர்ப்பை, ஸமித் ஆகியவற்றை கொண்டு வந்தனர். அனைத்தையும் இவ்வாறு கொண்டு வந்து, அதற்கான பாத்திரங்களில் அவற்றை நிரப்பினர்.

**மங்க³ள மஜ்ஜன மாடி³ பொம்ப³ட்டெனிலது³ட்டு**
**தந்து³ ஸுருதா³ரு பொன்னராஶி**
**சந்த³த³ ரிஷிக³ள வட³கொ³ண்டு³ ஸ்ரீராம**
**முந்தெ³ ஹோமவ தொட³கி³த³னு ||179**

மங்கள ஸ்னானம் செய்து, தங்கமயமான ஆடைகளை உடுத்தி, தங்க நாணய குவியல்களையே கொண்டு வந்து நிரப்பினர். அறிஞர்களான ரிஷிகள் புடைசூழ, ஸ்ரீராமன், அடுத்து ஹோமத்தை துவக்கினான்.

**சின்னத³ ஸீதெய வட³கொ³ண்டு³ ஸ்ரீராம**
**ப்ரவர்க்க³ தா⁴ரெயனெரெதா³**
**ப்ரவர்க்க³ பாத்ரெயல்லி ஆஜ்யவனெரெயலு**
**ப்ரஜ்வலனாத³ பாவகனு ||180**

தங்கத்தினால் ஆன ஸீதையை உடன் வைத்துக் கொண்டு, ஸ்ரீராமன், ஹோமத்திற்கான ஏற்பாடுகளை பார்த்தான். ஹோம த்ரவ்யங்களின் பாத்திரத்தில் ஆஜ்யத்தை நிரப்பியதும், பாவகனான ஸ்ரீராமன் மகிழ்ந்தான்.

**ஸ்ருஷ்டியொளகெ³ உள்ள தா³ன த⁴ர்மங்க³ள**
**கொட்டனு ஸ்ரீராமசந்த்³ர**
**அஶ்வதா³ன க³ஜதா³னவ மாடி³த³³**
**கோ³தா³னவ கொட்ட ராம ||181**

உலகில் உள்ள (கொடுப்பதற்கு தகுந்த) அனைத்து தான, தர்மங்களையும் ஸ்ரீராமசந்திரன் கொடுத்தான். குதிரை, யானை தானங்களை செய்தான். கோ-தானம் செய்தான் ஸ்ரீராமன்.

**அன்னதா³ன கன்யாதா³னவ மாடி³த³³ சென்னாகி³**
**மஹிஷதா³னவனு**
**ஸுவர்ணதா³னவ மாடி³த³³ ஸ்ரீராம**
**ப்³ரஹ்மரத²வனேரித³னு ||182**

அன்ன தானம், கன்யா தானம் ஆகியவற்றை சிறப்பாக செய்தான். மஹிஷ (எருது) தானங்களை அளித்தான். தங்கங்களை தானம் அளித்த ஸ்ரீராமன், ப்ரம்ஹ ரதத்தில் ஏறினான்.

**புண்யமூருதி ப³ந்த³ த⁴ர்மஸிம்ஹாஸனகெ**
**சென்னாகி³ மங்க³ளாக்ருதிய**
**சென்னாகி³ ஸுரரு ஹூமளெ கரெத³³ரு**
**அக்³னி ஶாந்திக³ளாத³³வு அல்லி ||183**

புண்ய மூர்த்தியான ஸ்ரீராமன், தர்ம ஸிம்ஹாஸனத்திற்கு வந்தான். மங்கள ஆக்ருதியை கொண்டவன் வந்தான். தேவர்கள் பூமழை பொழிந்தனர். அக்னி ஷாந்திகள் (முதலான ஹோமங்கள்) அங்கு நிறைவேறின.

**த³ரத²³ராயன ஸுத ராமசந்த்³³ரனு**
**அஶ்வமேத⁴ யாக³வ மாடி³த³³னு**
**ஹொஸரு பி³ருதா³வளி நொஸலரிகெயகட்டி**
**அஶ்வ பி³ட்டரு ப்ரத³க்ஷிணெகெ³ ||184**

தசரத ராமனின் மகனான ஸ்ரீராமசந்திரன் அஷ்வமேத யாகத்தை நிறைவேற்றினான். தன் (ஸ்ரீராமனின்) பெயர், அவருடைய மகிமைகளை எழுதி, அதனை குதிரையின் கழுத்தில் கட்டி, அந்த குதிரையை (பூமி) ப்ரதக்ஷிணைக்காக விட்டனர்.

**பூ⁴மி ப்ரத³க்ஷிணெ மாடி³ அஶ்வவு ப³ரலு**
**ஆக³ வால்மிகன ஆஶ்ரமகெ**
**பா³லரிப்³ப³ரு கண்டு³ ஹிடி³து³ கட்டலு தேஜி**
**ஆக³ கண்ட³ரு நொஸல ரேகெ² ||185**

அவ்வாறே, அந்த குதிரை, பூமியை ப்ரதக்ஷிணை செய்தவாறு, வால்மிமியின் ஆஸ்ரமத்திற்கு வர, சிறுவர்கள் இருவரும் (லவ & குஷ) அந்த குதிரையை பிடித்து கட்ட, அந்த குதிரையின் கழுத்தில் இருந்த தகவல்களை கண்டனர்.

**பாதகெரகி³ தேஜி ப்ரத³க்ஷிணெ மாடி³**
**ராம முத்³³ரிகெ ஶிரத³³ல்லிட்டு**
**பா³லரிப்³ப³ரு ப³ந்து³ தாயிகெ³³ரகி³த³³ரு**
**தேஜிய தந்தெ³வம்மய்ய ||186**

அந்த குதிரையை ப்ரதக்ஷிணை செய்து, அதன் கால்களில் விழுந்து வணங்கி, அதில் கட்டப்பட்டிருந்த ராம முத்ரிகையை தங்களின் தலையில் ஏந்தி, சிறுவர்கள் இருவரும் தங்களின் தாயிடம் கொடுத்தனர். குதிரையை கொண்டு வந்திருக்கிறோம் அம்மா – என்றனர்.

**எல்லிதேஜிய தந்தெ³ எல்லி ஹூய்யுலு தந்தெ³**
**இல்லி வால்மிகன ஆஶ்ரமகெ**
**கொல்லலாரதெ³ லக்ஷ்மண உளுஹி ஹோத³³ரெ**
**இல்லிகே³தகெ தந்தெ³ மக³னெ ||187**

இந்த குதிரையை ஏன் இங்கு கொண்டு வந்தாய்?. தகராறு செய்வதற்காக (உருவாக்குவதற்காக) ஏன் இதை கொண்டு வந்தாய்?. இங்கு வால்மிகியின் ஆஸ்ரமத்திற்கு. கொல்லாமல் (என்னை) லக்ஷ்மணன் விட்டுச் சென்றால், இதனை நீ ஏன் கொண்டு வந்தாய்?. (என ஸீதாதேவி கேட்கிறார்).

**பா³லரெ நிமகி³ந்த² தேஜி வஶவாகு³வுதெ³**
**தளுவதெ³ மெட்டி கொல்லுவுது³**
**மனத³ ப⁴யவ தோரி பி³டி³ பி³டி³ எந்த³ரெ**
**ஹிடி³தெ³வம்மய்ய ||188**

சிறுவர்களே. உங்களுக்கு இத்தகைய (வீரம் மிக்க) குதிரை வசம் ஆகுமா?. உங்களை இது தள்ளி விடும். மிதித்துக் கொன்று விடும். இவ்வாறு அவர்களுக்கு பயம் காட்டி, அந்த குதிரையை விட்டுவிடுங்கள் என்றால், நாங்கள் இதனை பிடித்திருக்கிறோம் (விட மாட்டோம்) என்றனர் அந்த சிறுவர்கள்.

**அஶ்வஸங்க³லவரு ஹத்துஸாவிர கோடி**
**ஷத்ருக்⁴ன த³ண்டெ³த்தி ப³ந்த³**
**ஶிஶூக³ள கண்டி³ரா ரிஷிக³ள ஆஶ்ரமதா³கெ³**
**வஶவல்ல ராமர த³ண்டு³ ||189**

அந்த குதிரையுடன் வந்த சேனைகளின் எண்ணிக்கை - பத்தாயிரம் கோடி பேர். உடன் ஷத்ருக்னனும் அந்த சேனையை தலைமையேற்று வந்தான். (இந்த குதிரையை பிடித்த) சிறுவர்களை கண்டீர்களா?. இந்த ரிஷிகளின் ஆஸ்ரமத்தில் அவர்கள் இருக்கிறார்களா?. ஸ்ரீராமனின் இந்த சேனையானது அவர்களின் வசம் இல்லை (அவர்களை வென்றுவிடும்) என்றான்.

**பா³லரிப்³ப³ரு ப³ந்து³ தாயிகெ³ர³கி³த³³ரு**
**த³ண்டு³ப³ந்தி³தெ³ அம்மய்ய**
**குஶத³ர்ப்பி⁴யிந்த³லி பி³ல்லு பா³ணவ மாடி³**
**ஶிஶூக³ளிகெ³ கொட்டளா ஸீதே ||190**

சிறுவர்கள் இருவரும் வந்து, தன் தாயான ஸீதாதேவியை வணங்கினர். (குதிரையைத் தொடர்ந்து) மிகப்பெரிய சேனை வந்திருக்கிறதம்மா. உடன் ஸீதாதேவி, குஷ என்பதான தர்ப்பையினால் ஆன, வில் பாணத்தை செய்து, அவர்களுக்கு கொடுத்தாள்.

**பி³ல்லுபா³ணவ ஹிடி³து³ ப³ந்த³ரு பா³லரு**
**நிந்த³ரு துரக³த³³ முந்தெ³**
**கண்டு³ ஶத்ருக்⁴னனு மனவ ஹாரெயிஸுத**
**கந்த³ர கரெது³ கேளித³னு ||191**

சிறுவர்கள் அந்த வில், பாணங்களை பிடித்து வந்தனர். வந்து குதிரையின் முன்னர் நின்றனர். இவர்களைப் பார்த்த ஷத்ருக்னனின் மனம் கரைந்தது. அவர்களை அழைத்து பின்வருமாறு கேட்டான்.

**வனதொ³ளகா³ரில்லி துரக³³வ ஹிடித³³வரு**
**பி³டி³நம்ம துரக³³வ எந்த³**
**ஹிடி³த³³ துரக³³வ பி³டு³வரேனோ ஜாண**
**பி³டு³வர பி³ருது³ ஸல்லுவுதோ³ ||192**

இந்த வனத்தில் இந்த குதிரையை பிடித்தவர்கள் யார்?. உடனடியாக நம் குதிரையை விடுங்கள் - என்றான். பிடித்த குதிரையை யாராவது விடுவார்களா?. அப்படி விட்டால் அவர்களுக்கு விருது கிடைக்குமா? (கிடைக்காது).

**ஹுடுக³³ரெ நிமகி³ந்த² ஹிரிய தேஜிக³ளெகெ**
**நடு³தேஜி கொடி³ஸுவெ ப³ன்னி**
**நடெ³யர பாத³³வ காணிஸி நிமகொ³ந்து³**
**படி³ ஜீதவனெ ஹாகிஸுவெ ||193**

சிறுவர்களே, உங்களுக்கு இந்த சிறந்ததான குதிரை எதற்கு?. ஒரு சாதாரண குதிரையை கொடுப்பேன் வாருங்கள். சாதாரண குதிரையை உங்களுக்குக் காட்டி, உங்களுக்கு ஒரு (இப்படிப்பட்ட குதிரையை பிடித்ததற்காக) ஒரு படி பரிசினை (பொற்காசுகளை) கொடுக்கச் செய்வேன்.

**ஹிரிய தேஜியு நிம்ம எடெ³யரிகா³க³³லி**
**நடு³தேஜி நிமகா³க³³லி**
**அய்யபடி³ஜீதவு நிம்ம கௌ³டி³ மக்களிகி³ரலி**
**வடெ³யர பா⁴க்ய நமகு³ண்டு ||194**

இத்தகைய சிறப்பான குதிரை உங்களின் அரசனுக்கே போய் சேரட்டும். ஒரு சாதாரண குதிரை உங்களுடையதாக ஆகட்டும். கொடுக்கப்படும் பரிசு உங்களின் அரசியின் மக்களுக்கு இருக்கட்டும். இவ்வாறு நீங்கள் செய்தால், அரசனின் கருணை நமக்கு இருக்கும். (இல்லையெனில், அரசர் கோபப்படுவார்).

**மாதின கௌகி³வரு மணிவ ஹாகி³ல்லவரு**
**நூகிரோ பி³ல்லு பா³ணவனு**
**ஆத ஶத்ருக்⁴னனு பி³ல்லு பா³ணவ ஹாகி**
**தா³டிஹோத³வு லவகுஶர ||195**

இவ்வாறு கூறிய பின்னரும், அவர்கள் அதனை கேட்பதாக இல்லை. தங்களின் வில், பாணங்களை தொடுத்தனர். அப்போது ஷத்ருக்னன் தன் வில், அம்பினை எடுத்து அவர்கள் மேல் விட, அவை லவ, குஷர்களை தாண்டிச் சென்றன.

**குஶ ஹாகித³ ஒந்து³ குஶத³ர்ப்பி⁴ பா³ணவு**
**ப³ஸவல்லதெ³ பி³த்³தி³தா மந்தி³**
**அதிகா³யவாயிது ஶத்ருக்⁴ன ப³ளித³**
**ப³ஸவல்லவெந்து³ நடெ³த³ரு ||196**

குஷன் விட்ட ஒரு குஷ தர்ப்பையிலான பாணம், குறி தவறாமல் வந்து (எருதின் மேல்) விழுந்தது. சேனையினர் படு காயம் அடைந்தனர். ஷத்ருக்னன் வளர்த்த எருது இது இல்லை என்று (ஆகவே வலிமையின்றி விழுந்துவிட்டது) என்று கூறியவாறு, சேனையினர் நடந்தனர்.

**ப³ந்து³ ஹேளலு ப⁴ரதரா த³ண்டு³ தெரளிது**
**மந்தி³ குத³³ரி தாளி ஒட்³டி³**
**சந்தா³த³³ பே⁴ரி தம்மடெ கா¹ளி பி³டி³பி³டி³**
**த³ண்டு³ தெரளிது அஶ்வதெ³டெ³கெ³ ||197**

இவ்வாறாக செய்தியை திரும்ப வந்து ஊருக்குள் சொல்ல, பரதனின் சேனை அங்கு விரைந்தது. சேனையினர், குதிரைப் படையினர் விரைந்தனர். சப்தமான பேரி, தம்மட்டை, ஆயுதம், ஆகிய பற்பல ஆயுதங்களை ஏந்திய படை, குதிரை இருந்த இடத்திற்கு விரைந்தது.

**கண்டு³ ப⁴ரத தானு மனவ ஹாரெயிஸுதா**
**கந்த³ர கரெது³ கேளித³னு**
**வனதொ³ளகா³ரில்லி துருக³வ ஹிடித³வரு**
**பி³டி³ நம்ம துரக³வ எந்த³ ||198**

அந்த குதிரையைக் கண்டு, பரதன் மனதில் வருத்தப்பட்டவாறு, அந்த சிறுவர்களை அழைத்து இவ்வாறு கேட்டான். இந்த வனத்தில் இத்தகைய குதிரையை பிடித்தவர்கள் யார்?. நம் குதிரையை விடுங்கள் – என்றான்.

**ಹೞುಕ³ರೆ ನಿಮಕಿ³ನ್ದ² ಬಿ³ಕು³ವಿನ ಮಾತ್ಯಾಕೆ**
**ಬಿ³ರುತು³ಕ³ಳ್ಯಾಕೆ ನಮಕೂಡ³**
**ಹೞುಡು³ಕ³ರೆ ನಂಮನೆಯ ಕರುವುಕಾಯುವಿರಿ**
**ನೀವು ಕತ³ನವ ಕೆ³ತ್³ತು³ಕೊಂಡು³ ಹೋಕಿ³ ||199**

ಸಿಱುವರ್‌ಕಳೇ. ಉಂಗಳುಕ್ಕು ಇತ್ತಕೆಯ ಕರ್ವತ್ತಿನ್ ಪೇಚ್ಚುಕ್ಕಳ್ ಎತರ್ಕು?. ಏನ್ ನಂಮುಡನ್ ತಕರಾಱು ಉಂಗಳುಕ್ಕು?. ಸಿಱುವರ್‌ಕಳೇ, ನಂ ವೀಟ್ಟಿನ್ ಮಾಡು, ಕನ್ಱುಕಳೈ ನೀಂಗಳ್ ಮೇಯ್‌ಕ್ಕುಮಾಱು ನೇರಿಡುಂ. ಎನ್ನುಡನ್ ಸಂಡೈಯಿಟ್ಟು, ಅಂತಪ್ ಪೋರಿಲ್ ವೆನ್ಱು ಚೆಲ್ಲುಂಗಳ್.

**ಕತ³ನವ ಕೆ³ಲ್ಲುವಿರ ತರಳರೆ ನಿಮಕಿ³ಕ³**
**ಕಿರುಪೆ³ರಳಲೊಲಲಮ್ಮಿರೀ**
**ಕಿರಪೆ³ರಳು ಪ³ಲ್ಲಿತ³ರಾತ³ ಕಾರಣತಿ³ನ್ದ³**
**ಹಿರಿಯರು ಅಟ³ವಿ ಸೇರಿಸಿತ³ರು ||200**

(ನಮಕ್ಕುಳ್ ನಡಕ್ಕವಿರುಕ್ಕುಂ) ಪೋರಿಲ್ ನೀಂಗಳ್ ವೆಲ್ಲುಂಗಳ್, ಸಿಱುವರ್‌ಕಳೇ. ನೀಂಗಳ್ ಇಪ್ಪೋದು ಸಿಱುವಿರಲ್ ಅಳವಿಲೇಯೇ ಇರುಕ್ಕಿಱೀರ್‌ಕಳ್. (ಅಲ್ಲದು ಸಿಱುವಿರಲೈ ಸೂಪ್ಪುಂ ನಿಲೈಯಿಲೇಯೇ ಇರುಕ್ಕಿಱೀರ್‌ಕಳ್). ಅದನಾಲೇಯೇ, ಪೆರಿಯವರ್‌ಕಳ್ ಉಂಗಳೈ ಕಾಟ್ಟಿಲ್ ಕೊಂಡು ವಿಟ್ಟಿರುಕ್ಕಿಱಾರ್‌ಕಳ್.

**ತೊತ್ತು ಮಾತನು ಕೇಳಿ ಪಟ್ಟಕ್ಕೆ ಕುಳಿತವರ**
**ಅಟ್ಟಿತಿ³ ನೀ ಕಾನನಕೆ |**
**ಉತ್ತಮರು ರಾಮಲಕ್ಷ್ಮಣರಾತ³ ಕಾರಣ**
**ಮತ್ತೆ ಕೈಹಿಡಿತ³ರು ನಿಮ್ಮ ||201**

ವೇಲೈಕ್ಕಾರಿಯಿನ್ (ಕೂನಿ) ಪೇಚ್ಚೈಕ್ ಕೇಟ್ಟು, ಪಟ್ಟಾಪಿಷೇಕತ್ತಿಱ್‌ಕು ಅಮರ್ನ್ತಿರುನ್ತ (ಶ್ರೀರಾಮನ್, ಸೀತೈ ಆಕಿಯೋರೈ) ನೀ ಕಾಟ್ಟುಕ್ಕು ಅನುಪ್ಪಿನಾಯ್. ಅನ್ತ ಶ್ರೀರಾಮ ಲಕ್ಷ್ಮಣರ್‌ಕಳ್ ಉತ್ತಮರ್‌ಕಳೇ ಆನ ಕಾರಣತ್ತಿನಾಲ್, ತಿರುಂಪ (ಉನ್ನೈ ಮನ್ನಿತ್ತು) ಉನ್ನೈ ತನ್ನುಡನ್ ಸೇರ್ತ್ತುಕ್ ಕೊಂಡ್ಡನರ್.

**ಕೆಳ³ಡಿ³ಮಾತನು ಕೇಳಿ ಮಲತಾಯಿ ಮಕ್ಕಳ**
**ಕಳುಹಿತಿ³ರಿ ಕಾನನಕೆ**
**ಹಾಕೆ³ಯ ಕಳತ³ಹಾಙ್ಕೆ³ ರಾಜ್ಯವನಾಳೆವೆನ್ತ³ರಿ**
**ಮರಳಿ ಪ³ನ್ತ³ನು ರಾಮಚನ್ತ್³ರ ||202**

ಒರು ಪೆಣ್ ವೇಲೈಕ್ಕಾರಿಯಿನ್ ಪೇಚ್ಚಿನೈಕ್ ಕೇಟ್ಟು, ಮೂತ್ತ ತಾಯ್ (ಕೌಸಲ್ಯಾ ತೇವಿ) ಮಕ್ಕಳೈ ಕಾಟ್ಟುಕ್ಕು ನೀ ಅನುಪ್ಪಿನಾಯ್. ಪಕೈಯೈ ಮಱನ್ತು ರಾಜ್ಜಿಯತ್ತೈ ಆಳ್‌ವೇನ್ ಎನ್ಱಾಯ್; ಶ್ರೀರಾಮಚನ್ತಿರನುಂ (ವನವಾಸತ್ತೈ ಮುಡಿತ್ತುಕ್ ಕೊಂಡು) ತಿರುಂಪಿ ವನ್ತಾನ್.

**ತಾಯಿಮಾತನು ಕೇಳಿ ಸೋತ³ರಿಪ³ಪ³ರು**
**ಅರಣ್ಯವನು ಸರಿಸೂತಿರಲು**
**ಈಮಿಪ⁴ಣ್ಣಾ³ರವ ನೀವೆ ಆಳೆನೆಂಪೋ³**
**ಅಳವೆ ನಮಕೂ³ಟ³ ನಿಮಕೆ³ ||203**

ತನ್ ತಾಯಾನ ಕೈಕೇಯಿಯಿನ್ ಪೇಚ್ಚುಕ್‌ಕೇಱ್ಪ, ಸಕೋತರರ್‌ಕಳ್ ಇರುವರುಂ (ರಾಮ ಲಕ್ಷ್ಮಣರ್‌ಕಳ್) ಕಾಟ್ಟಿಱ್‌ಕುಳ್ ವಾಸಂ ಸೆಯ್ತುಕೊಂಡಿರುಕ್ಕ, ನಾಟ್ಟಿನ್ ಕರುವೂಲತ್ತೈ ನೀಂಗಳೇ ಆಂಡು ಕೊಂಡಿರುಕ್ಕ, ನಂ ಕೂಡ ನೀಂಗಳ್ ಪೋರ್ ಪುರಿವೇನ್ ಎನ್ಱು ಇಪ್ಪೋದು ಕೂಱುವದು ಸರಿಯಾ?.

**ನಿಮ್ಮ ತಾಯಿ ನಿಮ್ಮ ಪಡೆ³ತು³ತು³ಣ್ಡಾತ³ರೆ**
**ನಮ್ಮ ಪಡೆ³ತ³ವಳು ನಮ್ಮ ತಾಯಿ**
**ಕಣ್ಣೆರಡು³ ಮುಚ್ಚಿ ಪೆ³ಕ್ಕು ಹಾಲು ಕುಡಿ³ತ³ರೆ**
**ಮುನ್ನಿನವರು ಕಾಣತಿ³ಹರೆ ||204**

உங்களின் தாய் உங்களை பெற்றெடுத்தார் என்றால், எங்களை பெற்றெடுத்தவர் எங்கள் தாய். கண்கள் இரண்டையும் மூடிக் கொண்டு, பூனையானது பால் குடித்தால், அங்கிருப்பவர்களுக்கு அது தெரியாதா என்ன?.

**மாதின கொகி³வரு மணிவஹ்ராகி³ல்லவு**
**நூகி¹ரு பி³ல்லுபா³ணவனு**
**ஆத¹ ப⁴ரத தானு பி³ல்லு பா³ணவ ஹாகெ**
**தா³டிஹோத³வு லவகுꣳர ||205**

பேச்சின் மூலம் இந்த சிறுவர்களை நாம் வெல்ல முடியாது என்று நினைத்து (பரதன்), தன் வில் அம்புகளை எடுத்தான். பரதன் தன் வில் அம்புகளை சிறுவர்கள் மேல் எய்ய, அந்த பாணங்களோ, லவ குஷர்களை தாண்டிச் சென்றன.

**ஒந்தெ³ரடு³ பா³ணவ லவகுꣳரு ஹாகலு**
**துண்டு³ துண்டா³கி³ கெட³வித³ரு**
**கோடிபா³ண ஸோஸி ப⁴ரத தா ஹாகலு**
**ஆகாꣳ பா³ண ஸோகித³வு ||206**

லவ குஷர்கள் ஓரிரண்டு பாணங்களை எய்ய, அதனை (பரதன்) துண்டு துண்டாகி ஆக்கினான். பரதன் இப்போது கோடிக் கணக்கான பாணங்களை எய்ய, ஆகாஷமே பாணங்களால் மூடப்பட்டது.

**இந்து³ நோடி³த³ ப⁴ரத கந்த³ர ஸாஹஸ**
**மந்தி³ குத³ரி மடு³வித³ரு**
**கொல்லலாரதெ³ உளுவிதெ³ நானாத³டெ³**
**அல்லி ஸ்ரீராம கோபிஸுவ ||207**

இன்று பரதன், இந்த சிறுவர்களின் திறமையை பார்த்தான். சிறுவர்கள் போரில் எதிர்த்து நின்று சமாளித்தார்கள். நானோ இவர்களை கொல்லாமல் விட்டுவிட்டேன்; இதைக் கேட்கும் ஸ்ரீராமன் அங்கு கோபப்படுவான்.

**ப³ல்லித³ ப⁴ரதனு பொன்னம்பு³ ஜோடி³ஸி**
**அல்லி லவன கெட³வித³னு**
**பா³ண தாகி லவ மூர்ச்செ²ய ஹொந்தி³த³னு**
**தூ³ரத³லி கண்ட³ குꣳனு ||208**

கோபம் கொண்ட பரதன், ஒரு சிறந்ததான அம்பினை தொடுத்து, அங்கு லவனை அடித்து தள்ளினான். அந்த பாணத்தால் தாக்கப்பட்ட லவன், மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தான். இதனை தூரத்தில் இருந்த குஷன் கண்டான்.

**ஆத³ரேனாயிது தம்மன கொந்தி³ரி**
**நாளெ நோடி³ பெ³ளகா³கி³**
**தா³ளிஹரிது³ நிம்ம புரகெ தோரண கட்டி**
**ஓடி³ப³ஹெனு தம்ம மனெகெ³ ||209**

(பரதனிடம் குஷன் சொல்கிறான்). இப்போது என்ன ஆயிற்று என்று என் தம்பியை கொன்றீர்கள்?. நாளை பாருங்கள். காலையிலேயே ஒரு பெரும் படையுடன் வந்து, உங்கள் புரத்திற்கு தோரணம் கட்டி (அதனை வென்று) உங்கள் வீட்டுக்கு ஓடி வருவேன்.

**ப³ளலித³ பா³லன தெகெ³தெ³த்திகொண்டா³ரு**
**வடெ³யர முந்தி³ளிவித³ரு**
**பா³லன கடெ³க³ண்ண நோடி³த³ ஸ்ரீராம**
**மோஹதும்பி³ மனகரகி³ ||210**

மயங்கிக் கிடந்த சிறுவனை (லவனை) தூக்கிக் கொண்டனர். தம் அரசனின் (ஸ்ரீராமனின்) முன் கொண்டு வந்து இறக்கினர். அந்த சிறுவனை தன் கடைக்கண்ணால் பார்த்த ஸ்ரீராமன், மிகவும் பாசத்துடன், மனம் கரைந்தான்.

**ஹாலுகுடி³வ பா³லன கொந்து³ காளக³**
**ஸாஹஸ எந்து¹ மாடி³தி³ரோ**
**ஏனு ஹேளலி அண்ண பா³லர ஸாஹஸ**
**யாவ ராயரு அவரிகெ³து³ரு ||211**

பால் குடிக்கும் வயதை உடைய இந்த சிறுவனை கொன்று, இத்தகைய சாகசத்தை ஏன் செய்தீர்கள்? (என்று ஸ்ரீராமன் கேட்க, அதற்கு பரதன் இவ்வாறு சொல்கிறான்). நான் என்ன சொல்வது அண்ணா?. அந்த சிறுவர்களின் திறமை மிகவும் சிறந்தது. எந்த வீரனும் அவர்களின் எதிரில் (போருக்கு நிற்க முடியாது).

**தாயிகொட்டத்³தொ³ந்து³ ஹுல்லுபா³ணவ ஹாகி**
**காளக³ த்ருணவு ஸமான**
**ஹிந்த³க்கெ நம்மனு ப³னகெ களிதே³வதெ**
**கண்ட³ந்தெ காணிஸி ஆடு³வரோ ||212**

அவர்களின் தாய் கொடுத்ததான, தர்ப்பைப் புல்லால் ஆன ஒரு பாணத்தை ஏவி, போரிட்டார்கள். நம் ஆயுதங்கள் ஒரு புல்லிற்கு சமானமாக ஆனது. முன்னர் நமக்கு வனத்தில் காளி தேவதை (வன தேவதை) கண்டது போல, அவர்கள் எங்களுக்கு (மிகவும் கடுமையாக) தென்பட்டார்கள்.

**ஹிந்த³க்கெ ராஜ்யவ தாயி ஆளுவளந்தெ**
**தேஜி தமகெ³ ஸல்லொத³ந்தெ |**
**ஸண்ணவரொந்தொ³ந்து³ மர்மக³ளாடி³த³ரு**
**எண்ணெஸாஸிவெ ஸிடி³த்³ஹாங்கெ³ ||213**

அடுத்து நம் ராஜ்ஜியத்தை அவர்களின் தாய் ஆள்வாளாம். அந்த குதிரை அவர்களுக்கே வேண்டுமாம். இப்படியாக சிறுவர்கள் ஒவ்வொரு விஷயமாக படபடவென்று கூறினார்கள். அவர்கள் எண்ணையில் கடுகு விழுந்தாற்போல் (படபடவென்று) பேசினார்கள்.

**முன்ன ஈ பா³லன ஜதன மாடி³ரெந்து³**
**தம்ம மந்து¹ணெகெ³ ஹேளித³ணு**
**தம்மனெளெதொ³ய்யரு அண்ண ப³ந்த³ணு மனெகெ³**
**கண்ணு ஜலக³ள ஸிடி³ஸுதலி ||214**

அடுத்து இந்த சிறுவனை நன்றாக பார்த்துக் கொள்ளவும் என்று தம் சேவகர்களிடம் (ஸ்ரீராமன்) கூறினான். லவனை மறுபடி வீரர்கள் குஷன் இருந்த இடத்திலேயே (குதிரை இருந்த இடத்திலேயே) போட்டு விடுகின்றனர். தம்பியை (பரதன்) இழுத்துக் கொண்டு சென்றதும், அண்ணன் (குஷன்) தன் வீட்டிற்கு வந்தான். கண்ணிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக விழுந்தன.

**அம்மய்ய கேளி நம்ம தம்மனெளெதொ³ய்யரு**
**ஹொன்னம்பு³ தாகி¹ ப³ளலித³ணு**
**கேளுத ஸீதெயு ஜன்மனெ ஜரெத³ளு**
**பித்³தா³ளு பூ⁴மிய மேலெ ||215**

அம்மா. கேள். நம் தம்பியை, லவனை, இழுத்துக் கொண்டு சென்றுவிட்டார்கள். ஒரு சிறந்ததான அம்பு தாக்கி அவன் மயங்கி விழுந்தான். இந்த செய்தியை கேட்டதும், ஸீதாதேவி அதிர்ச்சி அடைந்து, மூர்ச்சையாகி பூமியில் விழுந்தாள்.

**கிரிய லக்ஷ்மண தே³வ உளுஹி ப்ராணவனு**
**முனிவால்மிக ஸலஹித³னு**
**தனயரிப்³ப³ர ஹிடி³து³ தபஸு மாடு³தலித்³தெ³**
**துரக³க்கெ ப³லிகொல்யவனா ||216**

தம்பியான லக்ஷ்மணன், உயிர் பிழைக்கச் செய்தான் (கொல்லாமல் விட்டான்). இங்கிருந்த முனிவரான வால்மிகி எங்களை காப்பாற்றினார். என் மகன்கள் இருவரையும் வளர்த்தவாறு, தவம் செய்து கொண்டிருந்தேன். இவ்வாறு குதிரைக்காக இவனை பலி கொடுத்தேனே? (என்று ஸீதாதேவி புலம்புகிறார்).

**அம்மா நீனளதீ³ரெ நம்ம தம்மகெ³ ப⁴யவில்ல**
**நின்ன உங்கு³ர கொடு³ எந்த³**
**கன்யெஜானகி தன்ன பெ³ரள முத்³ரிகெ தெகெ³து³**
**சின்னான கைகி³ட்டளாக³ ||217**

(ஸீதாதேவியிடம் குஷன் சொல்வது) அம்மா. நீ அழாதே. என் தம்பிக்கு ஒன்றும் ஆகாது. பயம் வேண்டாம். உன்னுடைய மோதிரத்தைக் கொடு என்றான். அப்படியே ஸீதாதேவி, தன் விரலிலிருந்து மோதிர முத்திரையை எடுத்து, குஷனின் கையில் கொடுத்தாள்.

**பெ³ரளெகு³ங்கு³ரவிட்டு ப³ந்த³னு பா³லனு**
**நிந்த³னு நீர ஹொளெயல்லி**
**கங்கெ³ய நீரிகெ³ ப³ந்தா³ளு மந்துணி**
**கண்டு³ குஶல கேளித³னு ||218**

மோதிரத்தை விரலில் மாட்டிக் கொண்டு குஷன் வந்து, ஆற்றங்கரையில் நின்றான். கங்கையின் நீரில், தோணியை ஓட்டுபவள் (அல்லது அரச வேலைக்காரி) ஒருத்தி வந்தாள். குஷன் அவளிடம் இவ்வாறு கேட்டான்.

**இந்து³ தாயெ நீனு தா³ர மனெயல்லி**
**தா³ஸி ஹேளெந்த³ ஊர முந்தெ³**
**இருவ மாரி மந்துணி ஈக³ நூரொந்து³**
**ஹரவி அபி⁴ஷேக ||219**

தாயே நீ இன்று யாருடைய வீட்டில் வேலைக்காரியாக இருக்கிறாய்?. (அதற்கு அவள்) ஊருக்கு வெளியே இருக்கும் ஒரு சிறிய கிராம தேவதைக்கு நான் இப்போது 101 குடம் அபிஷேகம் செய்து கொண்டிருக்கிறேன்.

**ஈ ஹரவி நீரானு பா³லகெ³ எரெவெனு**
**மாரிகெ³ ப³லிகொடுவெனவன**
**தும்பி³த³ கொட³தொ³ளெகெ³ உங்கு³ரு மீடி¹**
**தந்து³ பா³லகெ³ எரத³ளாக³ ||220**

இந்த குடம் தண்ணீரை இப்போது உனக்கு ஊற்றுவேன். இந்த சிறுவனை இவ்வாறு செய்தவனை, அந்த தேவதைக்கே பலி கொடுப்பேன் (என்றாள்). தண்ணீர் நிரம்பிய குடத்தில், மோதிரம் போட்டு, அதனை கொண்டு வந்து அந்த சிறுவனுக்கு இறைத்தாள்.

**உங்கு³ர மைஸோகி¹ தும்பி³து ப்ராணவு**
**கண்க³ள தெரெது³ நோடி³த³³னு**
**கந்தா³ன சல்விகெ¹ கண்டா³ளு மந்துணி ப³ந்து³**
**பாத³கெ எரகெ³ந்த³ளு ||221**

தண்ணீர் அவன் (லவன்) மேல் விழுந்ததும், மூர்ச்சை கலைந்தான். கண்களை திறந்து பார்த்தான். அவனை கண்ணீர் நிரம்பிய கண்களினால் கண்டாள் அந்த வேலைக்காரி. வந்து அவன் பாதங்களில் விழுந்தாள்.

**பூஜெ இல்லதெ³ மாரி பாத³க்கெரகு³வரெ**
**ஹூவு ப¹த்துரி தருவெனெந்தா³**
**பெ³ரளினுங்கு³ரவிட்டு ப³ந்த³ தம்மன ப³ளி**
**கண்டு³குஶலதக்கெயிஸி ||222**

கிராம தேவதைக்கு பூஜை செய்யாமல், இங்கு வந்து என் பாதங்களில் விழுவாரோ?. உன் பூஜைக்காக, பூ, இலைகளை கொண்டு வருவேன் என்றான். விரலில் மோதிரத்தை அணிந்த வந்த தம்பியைக் கண்டு, குஷன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான்.

**இந்து³மாரிகெ³த்³து³ ப³ந்து³ அண்ணா நீனு**
**இந்து³ நம்மம்ம படெ³த³ளு**
**பா³லன பெ³ன்னட்டி ப³ந்த³ளா மந்துணி**
**பா³ணத³ல்லிட்டு கெட³வித³ரு ||223**

கிராம தேவதையே நேரடியாக வந்து அண்ணா உன்னை நம்மை ஒன்று சேர்த்தாள். அந்த லவனின் பின்னாலேயே அந்த வேலைக்காரியும் வந்தாள். உடன் இங்கிருந்தவர்கள் அவளை எதிரி என்று நினைத்து, பாணங்களால் அடித்து துன்புறுத்தினர்.

**பா³லரிப்³ப³ரு மந்து¹ணிய ஹொத்துகொண்டு³**
**ஊரு பா¹ரவ திருகி³ஸித³ரு**
**ஊர்க³மனகெ ஜயராம லக்ஷ்மண**
**ஜயபா³லரிப்³ப³ரிகெ³ ஜயவெந்த³ரு ||224**

லவ குஷர்கள் இருவரும் அந்த வேலைக்காரியை (பல்லக்கில்) தாங்கிக் கொண்டு, ஊருக்கு திரும்ப வந்தனர். ஊர் மக்கள் அனைவரும், ஜய ராம, ஜய லக்ஷ்மண, ஜய சிறுவர்கள் இருவருக்கும் என்று ஜய கோஷம் போட்டனர்.

**பா³லரிப்³ப³ரு தம்ம ஹகெ³ய களெதே³வெந்து³**
**வாலெய ப³ரெது³ கட்டித³ரு**
**ஹிந்த³க்கெ ராமர வனவாஸ களிஸித³**
**ஹெங்க³ஸு தை³த்ய மந்துணியு ||225**

சிறுவர்கள் இருவரும் (அந்த குதிரைக்காக நடந்த போர் பற்றிய) தங்கள் கோபத்தை களைந்தோம் என்றனர். ஓலையை எழுதி குதிரையில் கட்டினர். முன்னர், ஸ்ரீராமரை வனவாசத்திற்கு அனுப்பிய அந்த தைத்ய பெண்மணியே (இவள் என்று அறிந்து, அந்த ஓலையை அவளிடம் கொடுத்து அனுப்பினர்).

**பா³லரிப்³ப³ரு ப³ந்து³ தாயிகெ³ரகி³த³³ரு**
**பா³லார பி³கி³த³³ப்பி ஸீதெ**
**ஹோளிகெ³ துப்ப மக்களிகு³ணலிட்டு**
**மேலெ நொரெஹாலு ஸுரவித³ளு ||226**

சிறுவர்கள் இருவரும் தாயிடம் விழுந்து வணங்கினர். ஸீதாதேவி இருவரையும் கட்டியணைத்து, நெய் நிரம்பிய போளியை மக்களுக்கு கொடுத்து உண்ணச் செய்தாள். அதன் மேல் நுரை நிறைந்த பாலினை ஊற்றிக் கொடுத்தாள்.

**மண்டி³கெ³ துப்பவு மக்களிகு³ணலிட்டு**
**தந்து³னொரெ ஹாலு ஸுருவித³ளு**
**ஶ்ரீராம ஶரணென்ன ஶ்ரீராம ஶரணென்னி**
**ஶ்ரீராம ஶரணென்னி ஜனரு ||227**

நெய் நிரம்பிய மண்டிகெ (என்னும் இனிப்புப் பண்டத்தை) சிறுவர்களுக்கு கொடுத்து உண்ணச் செய்தாள். அதன் மேல் நுரை நிறைந்த பாலினை அதன் மேல் ஊற்றினாள். அனைவரும் ஶ்ரீராமனே நமக்கு சரண் என்று சொல்லுங்கள்.

**மாரிய ஹப்³ப³க்கெ ஊரஜாதரெ ப³ன்னி**
**ஸாரித³ரு புரதொ³ளகெ³**
**ஸத்த பா³லனு எத்த ஓடிஹோத³னெந்து³**
**எத்திகொண்டெ³ய்த³வ்வயாரு ||228**

கிராம தேவதையின் விழாவுக்காக ஒரு நிகழ்ச்சி நடைபெறுகிறது. அதற்காக அனைவரும் வாருங்கள் என்று ஊருக்குள் அறிவிப்பு செய்தனர். மூர்ச்சை அடைந்து விழுந்த சிறுவன் எங்கு சென்றானோ?. யார் அவனை தூக்கிச் சென்றார்களோ? (என்று பேசிக் கொண்டனர்).

**மாரிய ஹப்பவு ஆஶ்சர்யவாகி³தெ³**
**ஏனுகாரண விஸ்மய பட்டு ஶ்ரீராம**
**புரபா³கி³ல முந்தெ³ மடி³த³ மந்து¹ணி கண்டு³**
**பெ³ரகா³த³³ராம பூ⁴பால ||229**

அந்த விழா மிகவும் ஆச்சரியகரமாக இருக்கிறது. (மிகவும் சத்தமாக இருக்கிறதே?) என்ன காரணம் என்று வியப்புடன், ஶ்ரீராமன், புரத்தின் வாயிலுக்கு வெளியே வந்தான். அங்கு வந்த வேலைக்காரியைக் கண்டு ஶ்ரீராமன் வியப்படைந்தான்.

**கார்யகதனவில்ல ராஜகார்யக³ளில்ல**
**காளக³ கெ³த்³த³³வர்யாரு |**
**பா³லரிப்³ப³ரு காளக³கெ³த்³த³³ரெம்போ³**
**வாலெய தெகெ³து³ நோடி³த³³ரு ||230**

அரச வேலை எதுவும் இல்லை. அரசர் கூறிய செயல்கள் எதுவும் இல்லை. இந்த போரினை வென்றவர்கள் யார்?. (என்று நினைத்தவாறு, ஶ்ரீராமன்) அவளிடம் இருந்த ஓலையை வாங்கிப் பார்க்க, அந்த போரில் சிறுவர்கள் இருவரும் வென்றனர் என்ற செய்தி வந்திருந்தது.

**கந்த³ரிப்³ப³ரு காளக³வ கெ³த்³தெ³வெம்போ³**
**சந்த³³த பா³லெ ஓதி³த³³ரு**
**பா³லர ஸாஹஸ நோட³பே³கெனுதலி**
**தெரளித³ ராம பூ⁴பால ||231**

சிறுவர்கள் இருவரும் போரினை வென்றோம் என்று அந்த சிறப்பான ஓலையை படித்தார். சிறுவர்களின் சாகசத்தை தான் பார்க்க வேண்டும் என்றவாறு, உடனே அரசனான ஶ்ரீராமன் கிளம்பினான்.

**தாளத³ண்டி³கெ³ பாடு³வ பா⁴க³வதரு**
**மேளத³வரு மந்தி³ நடெ³யெ**
**பட்டாபி⁴ராமனு துரக³க்கெ ப³ந்த³னெம்ப³**
**மித்ரெகெ³ தூ³ரு முட்டித³வு ||232**

தாளம், முரசு சத்தம், பாடும் பாகவதர்கள், மேளம் வாசிப்பவர்கள் என அனைவரும் கூட நடக்க, பட்டாபிராமன், குதிரை இருக்கும் இடத்திற்கு வந்தான் என்னும் செய்தி, ஸீதாதேவியின் காதுக்கு எட்டியது.

**கோத³ண்ட³ ராமனு துரக³க்கெ ப³ந்த³னெந்து³**
**நாரீகெ³ தூ³ரு முட்டித³வு**
**புண்ட³ரீகாக்ஷனு துரக³க்கெ ப³ந்த³னெந்து³**
**தந்து³னவக³ஜன்ன ஹாகித³ரு ||233**

கோதண்ட ராமன், குதிரை இருக்கும் இடத்திற்கு வந்தான் என்று, ஸீதாதேவிக்கு செய்தி சென்றது. புண்ட்ரீகாக்ஷன் குதிரை இருக்கும் இடத்திற்கு வந்தான் என்னும் செய்து, தண்டோராவை போட்டனர் (செய்தியை பரப்பினர்).

**பா³லரிப³ப³ரு ப³ந்து³ தாயிகெ³ரகி³த³ரு**
**த³ண்டு³ ப³ந்தி³தெ³ அம்மய்ய**
**இந்தி³ன காளக³ கெ³ல்லுவ தெரனு ஹ்யாகெ³**
**முந்தே³னு பு³த்³தி³ ஹேளம்ம ||234**

சிறுவர்கள் இருவரும் வந்து இவ்வாறு கூறினர். ஒரு படை வந்திருக்கிறது அம்மா. இன்று வந்திருக்கும் இந்த படையை எப்படி வெல்வது? அடுத்து நாங்கள் என்ன செய்ய வேண்டும். அறிவுரை கூறுங்கள் அம்மா – என்றனர்.

**முந்தெ³ பு³த்³தி⁴ய நானு ஏனு ஹேளலி மக³னெ**
**கொண்ட³வர தேஜிய கொட்டு**
**முந்தெ³ ஸ்ரீ ராமன பாத³வெக³தி எந்து³**
**முந்தி³ன்ன ஸுக²த³ல்லீரெந்த³லு ||235**

உனக்கு என்ன அறிவுரை கூறட்டும் மகனே?. நம் தலைவனின் குதிரையை அவனுக்கே திரும்பக் கொடுத்து, ஸ்ரீராமனின் பாதங்களில் விழுந்து வணங்கி, நீயே எங்களுக்கு கதி என்று, அடுத்து சுகமாக இருப்பாயாக – என்றாள்.

**காளக³கெ³ல்லபே³கு தேஜிய பி³ட³பே³கு**
**ராமர கைஹிடி³ய பே³கு**
**தாயி நின்ன வ்ரதசந்த³ வந்தி³ஸபே³கு**
**நாவு ராஜ்யவனாளபே³கு ||236**

இந்த போரில் வெல்ல வேண்டும். குதிரையை விட வேண்டும். ஸ்ரீராமனின் கை பிடிக்க வேண்டும். தாயே, உன்னுடைய விரதம் நிறைவேற வேண்டும். நாங்கள் நாட்டினை ஆள வேண்டும்.

**பா³லரு ஷோட³ஶவுபசார பூஜெய மாடி³**
**ஸூர்ய ப்ரத³க்ஷிணெய மாடி³த³ரு**
**ப்ராத: காலத³லி ப்³ரம்ஹ ஸ்வரூபனே**
**த்ரிமூர்த்தி தி³வாகரனே ||237**

சிறுவர்கள் ஷோடஷ உபசார பூஜையை செய்து, ஸூர்ய ப்ரதக்ஷிணையை செய்தனர். காலை வேளையில். ப்ரம்ஹ ஸ்வரூபனே, த்ரிமூர்த்தி திவாகரனே என்று பூஜை செய்தனர்.

**பா[4]னு கோடி ஸூர்யப[4]கவானனெ ரக்ஷிஸோ**
**தே[3]வ நம்மனு ரக்ஷிஸெந்த்[3]ரு**
**தே[3]வ ப[4]க[3]வானரு பா[3]ணதி[3] மந்த்ரிஸி**
**பா[3]லர கைநீடி[3] கொட்ரு ||238**

ஆயிரம் கோடி சூரியனுக்கு சமமானவனே, எங்களை காப்பாற்று. தேவனே. எங்களை காப்பாற்று என்றனர். தேவனான ஸூர்ய பகவான், ஒரு பாணத்தை மந்திரித்து, அந்த சிறுவர்களின் கையில் கொடுத்தார்.

**பா[3]லரெ நீவ்ஹாகித[3] பா[3]ண ஶ்ரீராமரிகெ[3]**
**பாத[3]பூஜெய மாட[3]லெந்த்[3]ரு**
**ராமரு ஹாகித[3]பா[3]ண நிம்மிப்[3]ப[3]ரிகெ[3]**
**ஹுவ்வின அரளாக[3]லெந்த்[3]ரு ||239**

சிறுவர்களே. நீங்கள் விடும் பாணமானது, ஶ்ரீராமனுக்கு பாதபூஜையை செய்யட்டும் என்றார். ஶ்ரீராமன் விடும் பாணம், உங்கள் இருவருக்கும் பூமாலை ஆகட்டும் என்றார்.

**பி[3]ல்லு பா[3]ணவ ஹிடி[3]து[3] ப[3]ந்து[3]ரு பா[3]லரு**
**நிந்த[3]ரு துருக[3]த[3] முந்தெ[3]**
**நிந்த[3]ரு ஸிரபா[3]கி[3] கரவெத்தி முகி[3]த[3]ரு**
**கண்ட[3]ரு ராமலக்ஷ்மணரு ||240**

வில், அம்புகளை பிடித்து சிறுவர்கள் வந்தனர். வந்து குதிரையின் முன் நின்றனர். தலை குனிந்து நின்றனர். கை குவித்து வணங்கினர். இவர்களை ராம லக்ஷ்மணர்கள் கண்டனர்.

**கண்டு[3] ஹோமவ தும்பி[3] கந்த[3]ங்க[3]ளிப்[3]ப[3]ர**
**ஸந்தா[4]னகெ கரி எந்த[3]**
**ப[3]ந்து[3] லக்ஷ்மண எது[3]ராகி[3] நிந்த[1]னு பேக[3]**
**கந்த[3]ர கரெது[3] கேளித[3]னு ||241**

கண்டு மிகவும் அன்பு கொண்டு, அந்த சிறுவர்கள் இருவரையும் நம் அருகில் அழைப்பாயாக என்றார் (ஶ்ரீராமன்). அந்த சிறுவர்களும் லக்ஷ்மணனின் எதிரில் வந்து நின்றனர். அந்த சிறுவர்களை அழைத்து இவ்வாறு கேட்டார் (லக்ஷ்மணன்).

**இந்து[3] ஶ்ரீராமரு த[3]ண்டெ[3]த்தி ப[3]ந்த[3]ரு**
**கந்த[3]ரெ நீவு கடி[3]கா[3]கி[3]**
**மந்தி[3] குது[3]ரி நிம்ம ஆஶ்ரம ஹொக்கவு**
**நிம்ம ஆஶ்ரமக்ஹோக்[3]ரி ||242**

இன்று ஶ்ரீராமர் வில் அம்பினை எடுத்து வந்திருக்கிறார். சிறுவர்களே உங்களுடன் போர் புரிவதற்காக. சேனையினர் மற்றும் குதிரைப்படையினர் உங்களின் ஆசிரமத்திற்கு சென்றிருக்கின்றனர். நீங்கள் உங்களின் ஆசிரமத்திற்கு செல்லுங்கள்.

**இந்து[3] ஶ்ரீராமரு ப[3]ந்த[3]ரேனாயிது**
**ப[3]ந்து[3] காளக[3]வ ஹொட[3]ஹோளி**
**மந்தி[3] குது[3]ரி நம்ம ஆஶ்ரம ஹொக்காரெ**
**கலிஸேவு தக்க பு[3]த்[3]தி[4]க[3]ள ||243**

இன்று ஶ்ரீராமர் வந்தால் என்ன?. வந்து எங்களுடன் போர் புரியச் சொல்லுங்கள். படையினர் நம் ஆசிரமத்திற்கு வந்தால், அவர்களுக்கு தக்க புத்தியை கற்றுக் கொடுப்போம் – என்றனர் சிறுவர்கள்.

**கந்தா³ரெ நிம்மேலெ கத்தீய நெத்தேவு**
**அஞ்ஜிகடி³கெ³ ஹோகெ³ந்த³**
**தந்தி³ ஹாகித³ பா³ண தனயரிகெ³ தாகோதெ³**
**அஞ்ஜித³ரொம்மெ பி³டு³வுதெ³ ||244**

சிறுவர்களே, உங்களின் மேல் நாங்கள் வாளினை வீச மாட்டோம். பயப்படாமல் போங்கள் – என்றான். தந்தை விட்ட பாணம், மக்களை தாக்குமா?. பயந்தால் பாணம் எங்களை விடுமா? – என்றனர் சிறுவர்கள்.

**பா³லரெ நிம்மோரு ஏஸு நோம்பி¹யனோது**
**ஏஸு புண்யவ மாடி³த³ரு**
**ஏஸு புண்யவ மாடி³ மக்கள படெ³தா³ரு**
**காளக³கிந்து களுஹித³ரு ||245**

சிறுவர்களே, உங்களின் பெற்றோர் பற்பல விரதங்களை செய்து, பற்பல புண்ணியங்களை செய்திருக்கின்றனர். பற்பல புண்ணியங்களை செய்து, உங்களைப் போன்ற மக்களை பெற்றிருக்கின்றனர். பின், உங்களை இன்று போருக்காக அனுப்பியிருக்கின்றனர்.

**மன்னூர அரவத்து நோபியனொந்தாளு**
**நம்மம்ம நம்ம படெ³த³ளு**
**அன்யாயத³ ஸதி படெ³த³ மக்களல்ல**
**புண்யவந்தெய மக்களெந்த³ரு ||246**

360 விரதங்களை செய்திருக்கிறார் நம் அம்மா. பின் எங்களை பெற்றிருக்கிறார். எதுவும் செய்யாத பெண் பெற்ற மக்கள் அல்ல நாங்கள். நாங்கள் புண்யவந்தளின் மக்கள் என்றனர் அந்த சிறுவர்கள்.

**புண்யவந்தெய மக்களு நீவாத³ரெ நம்ம**
**தேஜிய ஹிடி³ய ப³ஹுதெ³**
**புண்ய பாபக³ளு விசாரணெ மாட³தெ³**
**நிம்ம ஸதிய கொலிஸப³ஹுதெ³ ||247**

நீங்கள் புண்யவந்தையின் மக்கள் என்றானால், எங்களின் குதிரையை பிடிக்கலாமா?. என்று ஸ்ரீராமன் (அல்லது லக்ஷ்மணன் கேட்க) புண்ய பாவங்களை விசாரணை செய்யாமல், உங்களின் மனைவியை கொல்லச் சொல்லலாமா நீங்கள்? (என்று சிறுவர்கள் கேட்கின்றனர்).

**அன்யாயதி³ ஸதிகொலிஸித³ காரண நிம்ம**
**தேஜிய ஹிடி³தெ³வெந்த³ரு**
**ஸண்ணவராடி³த³ மாதிகெ³ ஸ்ரீ ராம**
**தன்ன மனதி³ கடு³ நொந்த³ ||248**

நியாயமின்றி உங்களின் மனைவியை கொல்லச் சொன்ன காரணத்தினால், உங்களின் குதிரையை நாங்கள் பிடித்தோம் என்றனர். சிறுவர்கள் இவ்வாறு பேசிய பேச்சிற்கு, ஸ்ரீராமன் தன் மனதில் மிகவும் வருத்தப்பட்டான்.

**கன்யெ ஜானகியன்னு கொலிஸித³ காரண**
**மர்மக³ளாடி³த³ரெந்த³**
**மர்மக³ளாட³லி நம்ம தா³யத³ரில்ல**
**நம்ம தம்மகெ³ மக்களில்ல ||249**

கன்யையான ஜானகிதேவியை கொன்ற காரணத்தால் இவ்வாறு பேச்சுக்களை இவர்கள் பேசினர் என்றான். பேச்சுக்களை பேசட்டும். இவர்கள் நம் உறவினர்கள் அல்ல. இவர்கள் என் தம்பியின் மக்கள் இல்லை என்றான்.

**சென்னாகி[3] அஸுர படெ[3]ய ஸம்ஹரிஸிதெ[3]**
**மக்கள்யாரில்ல நமகெ[3]**
**ஸ்த[2]ளகுலவு நிம்ம தாயிதந்தெ[3] ஹெஸரு**
**கோ[3]த்ரவ ஹேளெந்த[3] ||250**

அஸுரர்களின் படையை நன்றாக கொன்றேன். எனக்கு மக்கள் என்று யாரும் இல்லை. (சிறுவர்களே), உங்களின் இடம், குலம், தாய், தந்தை, பெயர், கோத்திரம் ஆகிய அனைத்தையும் எனக்கு கூறுங்கள் – என்றான்.

**நிம்ம குலகோ[3]த்ரவெ நிம்ம ப்ரதேஶவெ**
**நிம்ம கு[3]ருவெ நம்ம கு[3]ருவு**
**சென்னாகி[3] ஸூர்ய குலவன்னு த[4]ரிஸித[3]**
**புண்யமூருதி மக்களெந்த்[3]ரு ||251**

உங்களின் குல கோத்திரமே (எங்களுடையதும்). உங்களின் ப்ரதேஷமே (எங்களுடையதும்). உங்களின் குருவே எங்கள் குரு. நன்றாக சூர்ய குலத்தை சேர்ந்தவரான, புண்ய மூர்த்தியின் மக்கள் நாங்கள் என்றனர்.

**நோடோ[3] லக்ஷ்மண இவர பாடு[3]ப[1]ந்த[2]க[3]ள**
**ஸூர்ய குலமக்களந்தெ**
**நீடோ[3] லக்ஷ்மண நம்ம பி[3]ல்லு பா[3]ணவனெந்து[3]**
**ஜோடி[3]லி ஹிடி[3]த[3]ரம்பு[3]க[3]ள ||252**

இவர்களின் லக்ஷணத்தை பாருங்கள். இவர்களின் வழி, மூத்தோர்களை. இவர்கள் ஸூர்ய குலத்தின் மக்களாம். லக்ஷ்மணனே, என்னுடைய வில், அம்புகளை கொடு என்றார் ஸ்ரீராமன். இருவரும் (ராம லக் ஷ்மணர்கள்) ஜோடியாக அம்புகளை பிடித்தனர்.

**தே[3]வ ஸுமித்ரனு பி[3]ல்லு பா[3]ணவ ஹாகெ**
**ஏளுயோஜனவ தா[3]டித[3]வு**
**பா[3]லர கொ[3]ட[3] நமகெ[3] காளக[3] ஸொக[3]ஸது[3]**
**எந்து[3] கொட்டனு ராமரெடெ[3]கெ[3] ||253**

ஸுமித்ரனான தேவன், தன் வில்லினை பயன்படுத்தி பாணத்தை விட, அது ஏழு யோஜனை தூரம் தாண்டிச் சென்று விழுந்தது. சிறுவர்களுடன் நாம் போர் செய்தால், அது சரியில்லை என்று தன் அம்பினை, ஸ்ரீராமனிடமே கொடுத்தான் (லக்ஷ்மணன்).

**அக்கி எள்ளு பெ[3]ரெஸித[3]ந்தெ காளக[3]வாடெ[3]**
**மக்கள கூட[3] ஸ்ரீ ராம**
**எள்ளு அக்கி பெ[3]ரெஸித[3]ந்தெ காளக[3]வாடெ[3]**
**ப[3]ல்லித[3] ராம பூ[4]பால ||254**

அரிசியையும், எள்ளையும் சேர்த்ததைப் போல (அது இரண்டும் சேரக்கூடாதது) நாம் சிறுவர்களின் செய்யும் போர் உள்ளது, ஸ்ரீராமா. எள்ளையும், அரிசியையும் சேர்த்தது போல, போர் செய்ய வேண்டுமா என்றான் அரசனான ஸ்ரீராமன்.

**ஸுத்தல ஸுரரெல்ல க³க³னமார்க்க³தொ³ளகெ³**
**மக்கள கொண்டா³டி³த³³ரு**
**ஆக³ வால்மிகன வரபிண்ட³ குஶலனு**
**ராமரிகெ³ பா³ண எஸெத³³னு ||255**

தேவர்கள் அனைவரும் வானில் சுற்றி நின்று கொண்டு, சிறுவர்களை கொண்டாடினார்கள். அப்போது வால்மிகி ரிஷியின் வரத்தினைப் பெற்றவனான சிறுவன் குஷன், ஸ்ரீராமனைக் குறித்து அம்பு விட்டான்.

**பா³ணதாகி ராமலக்ஷ்மணரிப்³ப³³ரு**
**பூ⁴மிமேலெ மூர்ச்செ²கெ³ய்யெ**
**ஹனும ஜாம்ப³வந்தன ஹெக³லனேரிஸிகொண்டு³**
**ஜானகிய முந்தி³ளிஹித³³ரு ||256**

குஷனின் பாணம் தாக்கி, ஸ்ரீராம லக்ஷ்மணர்கள் இருவரும் மூர்ச்சை அடைந்து பூமி மேல் விழ, ஹனுமந்த தேவர், ஜாம்பவந்தனை, தன் முதுகில் சுமந்துகொண்டு பறந்து சென்று, ஸீதாதேவியின் முன்னர் இறக்கினார்.

**நோடெ³ அம்ம இவர சோத்யத³³ருஹவ**
**ராமர ப்³ருத்யரந்திவ**
**தே³விய பாத³க்கெ எரகி³த³³ ஹனுமந்த**
**ராமரிகெ³ பா³ண எஸெத³³வு ||257**

அம்மா பாருங்கள். இவர்களின் (சிறுவர்களின்) வியப்பான (அதிகமான) சக்தியை. ஸ்ரீராமனின் தளபதியைப் போலவே (சண்டையிட்டனர்). இவ்வாறு கூறியவாறு, ஸீதாதேவியின் பாதங்களில் ஹனுமந்த தேவர் விழுந்து வணங்கினார். அந்த சிறுவர்கள், ஸ்ரீராமன் மேல் பாணங்களை விட்டனர்.

**ஆஹா பா³லரு கெட³ஸித³ரெ எனுதலி**
**பூ⁴மிமேலெ மூர்ச்செ²கெ³ய்யெ**
**பாபக்கெ பட²வனு ஏதக்கெ ப³ரெதெ³னோ**
**யாகெ லக்ஷ்மணவுளுவித³னோ ||258**

(அதைக் கேட்ட ஸீதாதேவி இவ்வாறு கூறி புலம்பினார்). ஆஹா, சிறுவர்கள் ஸ்ரீராமன் மேல் பாணத்தை விட்டனரோ? என்றவாறு மூர்ச்சையடைந்து பூமி மேல் விழுந்தார். (அந்த குறத்தி மூலமாக) நான் ஏன் அந்த படத்தை வரைந்தேனோ?. ஏன் லக்ஷ்மணன் என்னை கொல்லாமல் விட்டானோ?.

**யாகெ ஈ பா³லாரு ஜனிஸித³ காரண**
**காகு ஆயிது மனவர்தி**
**ஜனகராயகெ³ ஸுதளாகி³ நா ஜனிஸிதெ³**
**ரகு⁴பதிகெ³ மாலெ ஹாகிதெ³னு ||259**

ஏன் இந்த சிறுவர்கள் எனக்கு பிறந்தார்களோ?. அவர்கள் பிறந்ததாலேயே இப்போது இந்த மனம் இப்போது கலங்குகிறது. ஜனகராயனுக்கு நான் மகளாக பிறந்தேன். ரகுபதிக்கு மாலை அணிவித்தேன் (திருமணம் செய்தேன்).

**ஸுரபதிய கைஹிடி³தெ³ ஆத³ காரணதி³ந்த³**
**அஸுர ஶாபதட்டித³வு**
**முன்னூர அரவத்து நோம்பி¹ய நோதெ¹னு**
**சென்னாகி³ ஹரனபூஜிஸிதெ³ ||259-அ**

இந்த தேவர்களின் தலைவனை கை பிடித்தேன் என்ற காரணத்தால், அசுரர்களின் சாபம் எனக்கு வந்தது. 360 நோன்புகளை (விரதங்களை) நான் நிறைவேற்றினேன். ஹரனை (ருத்ரதேவரை) நன்றாக பூஜித்தேன்.

**இன்னு ஸ்ரீராமர அக³லதெ³ இரு எந்து³**
**ப்³ரம்ஹதே³வதெ வரபடெ³தெ³**
**நித்ய கௌ³ரிவ்ரத தப்பதெ³ மூடி³தெ³**
**முட்டி ஹரன பூஜிஸிதெ³ ||260**

இனிமேல் நீ ஸ்ரீராமனை விட்டு விலகாமல் இருப்பாயாக என்று அந்த ப்ரஹ்மதேவரின் வரத்தினை பெற்றேன். தினமும் கௌரி விரதத்தை தவறாமல் செய்தேன். ஹரனை தினமும் பூஜித்தேன்.

**ஸ்ருஷ்டீஶ பதிராம எத்தலதி³ இரலாகி³**
**முத்தெய்தி³தன இரலாகி³**
**பொட³வீஶ பதிராம எத்தலதி³ இரலாகி³**
**ஸாவித்ரிதன இரலாகி³ ||261**

ஸ்ருஷ்டீஷனான ஸ்ரீராமன் எல்லா இடங்களிலும் இருக்க; அதனால் எனக்கும் சுமங்கலித்வம் இருக்க; இந்த உலகத்தின் அதிபதியான ஸ்ரீராமன் எல்லா இடங்களிலும் இருக்க; அதனால் எனக்கு ஸாவித்ரிதனம் (தீர்க்க சுமங்கலித்வம்) இருக்க.

**நம்பி³கொண்டி³த்³தெ³னு கந்த³ரு கெடி³ஸித³ரு**
**எந்தொ³த³³ரித³³ளா ஸீதெ**
**தாயினீனளதீ³ரெ ராமரிகெ³ ப⁴யவில்ல**
**பா³ணதாகி ப³ளித³ரு ||262**

(என்று இவ்வாறு அனைத்தும் எனக்கு இருக்கும் என) நம்பிக் கொண்டிருந்தேன். அதனை இந்த சிறுவர்கள் கெடுத்தனர். என்று அழுது புலம்பினாள் ஸீதாதேவி. தாயே, நீ அழாதே. ஸ்ரீராமனுக்கு எவ்வித பயமும் இல்லை. பாணம் தாக்கியதில் சிறிது வருத்தப்பட்டிருக்கிறான் (அவ்வளவே).

**ஆக³ வால்மிகனு ப்³ரம்ஹதே³வர குரிது**
**ராமரிகெ³ ஜபவு மாடி³த³³னு**
**தந்து³ கமண்ட³லது³த³³கவ தொளெத³³ரு**
**எத்³தா³ரு ராமலக்ஷ்மணரு ||263**

அப்போது வால்மிகி ரிஷியானவர், ப்ரஹ்மதேவரைக் குறித்து, ஸ்ரீராம ஜபத்தினை செய்யத் துவங்கினார். வந்து தன் கமண்டல நீரினை ஸ்ரீராம, லக்ஷ்மணர்கள் மேல் தெளிக்க, அவர்கள் மூர்ச்சையிலிருந்து எழுந்தனர்.

**ஜோடி³லி ப⁴ரத ஶத்ருக்⁴னரெல்லரு**
**காலாளு த³ளவெத்³தி³தாக³**
**ஏனய்ய முனிராய பா³லரிப்³ப³ரு ப³ந்து³**
**ப்ராணக்கெ முனித³ரெந்தெந்தெ³ ||264**

அப்போது பரத, ஷத்ருக்னர்கள் இருவரும் தம் சேனையருடன் அங்கு வந்தனர். (வால்மிகி ரிஷியிடம் அவர்கள்) ஹே முனிராயா. இது என்ன நடந்தது?. சிறுவர்கள் இருவரும் வந்து இவர்களின் ப்ராணனுக்கு துன்புறுத்தினரே?.

**ப்ராணக்கெ முனித³ரு புனருஸ்ருஷ்டிய மாடி³**
**ப்ராணவனுளவி தோரித³ரு**
**எல்லி பா³லரிவரு எத்தலிந்தா³ ப³ந்த³ரு**
**தே³வருஷிக³ள ஶிஷ்யக³ளல்லா ||265**

மூர்ச்சையடைந்த விழுந்தவர்களை மறுபடி மயக்கம் தெளிவித்து எழுப்பி, உயிரை மீட்டுத் தந்தார். அந்த சிறுவர்கள் யார்? எங்கே? எனக் கேட்க, அவர்களை கொண்டு வந்தனர். அவர்களை பார்த்தவர்கள் – இவர்கள் தேவரிஷிகளின் (வால்மிகியின்) குழந்தைகள் போல இல்லையே? எனக் கேட்க...

**த³ஶரத² ராமன உத³ரத³லி ஜனிஸித³**
**ஸுதரிவரு லவகுஶரெந்த³**
**ஸதியு நமகி³ல்ல ஸுதரெல்லி ப³ந்த³ரு**
**ரிஷிக³ளெ ஹாஸ்ய மாடு³விர ||266**

(வால்மிகி ரிஷி கூறுகிறார்). தஷரத ராமனின் வயிற்றில் பிறந்த மக்கள் இவர்கள். லவ குஷர் என்பது இவர்களின் பெயர். எனக்கு மனைவியே இல்லை; மக்கள் எப்படி வருவர் – என்று ரிஷி கூற, அவர்களோ, ரிஷிகளே நகைச்சுவை செய்யாதீர்கள் (உண்மையை சொல்லுங்கள் எனக்கூற)...

**ஹாஸ்யவல்லவு ஸ்வாமி ஈஶ்வரன ஸாக்ஷி இகோ**
**ஸீதெ நம்ம ஆஶ்ரமதொ³ளகே³**
**அந்தி³கெ³ ஆரு திங்க³ளு க³ர்ப்ப⁴தே³விகெ³**
**ப³ந்தா³ளு நம்ம ஆஶ்ரமகெ ||267**

(வால்மிகி ரிஷி கூறுகிறார்). இது நகைச்சுவை அல்ல. இது ஈஸ்வரனின் சாக்ஷியாக உண்மையே ஆகும். ஸீதை நமது ஆஸ்ரமத்தில்தான் இருக்கிறார். அப்போது அவருக்கு ஆறு மாதங்களாக (கர்ப்பமாக) இருந்தபோது, நம் ஆஸ்ரமத்திற்கு அவர் வந்திருந்தார்.

**முந்தெ³ மூரு திங்க³ளிகெ³ கந்தா³ர படெ³தா³ளு**
**இந்தி³கெ³ ஹன்னெரடு வருஷ**
**ப³ந்தி³ ராம லக்ஷ்மணரு நீவில்லிகெ³**
**இந்தி³கெ³ ஶாபனிஶ்மாபா ||268**

அடுத்த மூன்று மாதங்களில் இந்த சிறுவர்களை பெற்றெடுத்தார். இவர்களுக்கு இப்போது 12 வயது. இப்போது ராம, லக்ஷ்மணர்களைத் தொடர்ந்து நீங்களும் இங்கு வந்திருக்கிறீர்கள். (இவர்களின்) சாப விமோசனம் ஆயிற்று.

**அந்த³ரெ ஶ்ரீராம ஸந்தே³ஹ பட்டனு**
**ப³ந்து³ லக்ஷ்மண கேளித³னு**
**ஏனய்யா லக்ஷ்மண தே³விய கரெதொ³ய்து³**
**கொல்லுலில்லவெ ஹேளெந்த³ ||269**

(இவரின் பேச்சினைக் கேட்ட) ஶ்ரீராமன் சந்தேகம் கொண்டான். லக்ஷ்மணனை இவ்வாறு கேட்டான். தேவியை கொண்டுச் சென்று நீ கொல்லவில்லையா? என்றான்.

**ஞானி லக்ஷ்மண த்⁴யானிஸீ நோடி³த³³**
**தே³வியனுளிஹிதெ³னெந்த³³**
**யாகெ உளிஹிதெ³ எல்லிரிஸி ப³ந்தி³³**
**யார வஶவமாடி³³ ப³ந்தி³³ ||270**

ஞானியான லக்ஷ்மணன் யோசித்து இவ்வாறு கூறினான். தேவியை கொல்லாமல் விட்டுவிட்டேன் என்றான். (ஸ்ரீராமன் கேட்கிறான்). ஏன் அவளை விட்டுவந்தாய்? அவளை யாரிடம் ஒப்படைத்துவிட்டு வந்தாய்?.

**ஸீதெ ஓடி³ஹோகி³ ஸுதர படெ³தா³ளெம்**
**லோகதொ³ளகெ³ அபகீர்த்தி**
**கெண்ட³க்கெ இருவெ முத்துவது³ண்டெ எலெஸ்வாமி**
**சந்த்³ரமகெ³ ரவிபி³ஸலுண்டெ ||271**

(லக்ஷ்மணன் பதில் சொல்கிறான்). ஸீதாதேவி ஓடிப்போய் மக்களை பெற்றுக் கொண்டாள் என்று உலகில் அவளுக்கு கெட்ட பெயர் வருமா?. (வராது). நெருப்புத் துண்டுக்கு எறும்பு நெருங்குவதுண்டா?. ஹே ஸ்வாமி, சந்த்ரனுக்கு சூரியனின் நெருப்பு தாக்குமா?.

**கிச்சினொளகெ³ ஸரஸபெ³ரஸித³வருண்டெ**
**ஸர்வனொளகெ³ ஸ்னேஹவுண்டெ**
**ஸப்தஸாக³ரத³ல்லி ஹுட்டித³ லக்ஷ்மீகெ³**
**மத்தபகீர்த்திக³ளுண்டெ ||272**

நெருப்புடன் சிரித்து பழகியவர்கள் உண்டா?. பாம்புடன் நட்பு செய்தவர்கள் உண்டா?. ஸப்த ஸாகரத்தில் பிறந்த லக்ஷ்மிக்கு அபகீர்த்திகள் வருமா?.

**அந்த³ரெ ஸ்ரீராம நம்பி³கெபட்டனு**
**இந்து³வத³னெ கரி எந்த³**
**ப³ந்து³ வால்மிகனு மக³ள ஸந்தெயிஸித³**
**சந்த்³ரகாவிய நுடு³கொ³ட்டா ||273**

என்று லக்ஷ்மணன் கூறியதற்கு, ஸ்ரீராமன் நம்பிக்கை கொண்டான். சந்த்ரமுகியான ஸீதாதேவியை அழைத்து வாருங்கள் என்றான். வால்மிகி ரிஷி வந்து தன் மகளை சமாதானம் செய்தான். ஸீதாதேவியை அழைத்து வந்தான்.

**ஸாராவளியனுடி³ஸி ஸோகி³லக்கிய ஹொய்து**
**தே³வ்விய கரதந்த³னாக³**
**தே³வி நின்னனக³லி ஆளிதெ³னெ பட்ட**
**பா³லாரனெந்து³ படெ³தி³யெ ||274**

நல்ல பட்டாடையை உடுத்தி, அலங்காரங்களை செய்து, ஸீதாதேவியை அழைத்து வந்தனர். தேவியே, உன்னை விட்டு நான் பட்டத்தை ஆண்டு வந்தேன். சிறுவர்களை எப்படி வளர்த்தாய்?.

**தே³வ நீனல்லவெ பே³ரெ பரபுருஷன**
**மாரிய நோடி³த³³ரெ நானு**
**பூ⁴மிதே³வி ஸாக்ஷி பா³லரிப³³ப³³ர ஸாக்ஷி**
**தே³வ ரிஷிக³ள பாத³ ஸாக்ஷி ||275**

ஸ்வாமி, நீங்கள் இல்லாமல் வேறு பரமபுருஷனை நான் என்றும் பார்ப்பதில்லை. அதற்கு இந்த பூமிதேவியே ஸாக்ஷி. அதற்கு இந்த இரு சிறுவர்களுமே ஸாக்ஷி. தேவ ரிஷிகளின் பாதங்களே ஸாக்ஷி (என்றார் ஸீதாதேவி).

**தே³வ ஸுமித்ரஸுனு தே³வ்விய பாத³க்கெ**
**ப்ரேமதி³ந்த³லி எரகி³த³னு**
**ஆரண்யதொ³ளகி³ன்னு அக³லி ப³ந்தெ³னு**
**தாயெ தே³வலக்ஷ்மண அளித³னு ||276**

ஸுமித்ராதேவியின் மகனான லக்ஷ்மணன், ஸீதாதேவியின் பாதங்களில் பக்தியுடன் விழுந்து வணங்கினான். காட்டில் உங்களை தனியே விட்டு வந்தேன் என்று கூறி லக்ஷ்மணன் அழுதான்.

**தே³வ நீ ப்ராணவ உளுஹித³ காரண**
**பா³லரு ஜனிஸோ காரணவு**
**தே³வ வால்மிகனு ஸலஹித³ காரண**
**அரண்ய அயோத்⁴யவஹுது³ ||277**

லக்ஷ்மணனே, நீ என் உயிரை காத்த காரணத்தால், இந்த சிறுவர்கள் எனக்கு பிறந்தனர். ரிஷியான வால்மிகி என்னை காத்த காரணத்தால், இந்த காடே எனக்கு அயோத்தி ஆனது.

**பா³லரு ப⁴ரத ஶத்ருக்⁴னரிப்³ப³ரிகெ³**
**ப்ரேமதி³ந்த³லி எரகி³த³³ரு**
**பா³லகதனதி³ந்த³ நோய நுடி³தெ³வு நாவு**
**ராமர ஸரி நீவு நமகெ³ ||278**

பரத ஷக்த்ருக்னர்கள் இருவரையும் லவ குஷர்கள் வணங்கினர். சிறுவர்களான நாங்கள் துடுக்குத்தனத்துடன் அவதூறு பேசிவிட்டோம். நீங்களே எங்கள் தலைவர்கள். (எங்களை மன்னியுங்கள்) – என்றனர்.

**பா³லரெ நிம்மேலெ கா⁴தவு மாடி³தெ³வு**
**பா³ணத³ல்லிட்டு கெட³ஹிதெ³வு**
**ஹ்றயாகெ³ உளஹிது ப்ராண தா³ரு காய்த³³ரு நிம்ம**
**ஹேகெ³ மந்துணி கெ³த்³தி³ரெந்த³ ||279**

சிறுவர்களே, உங்கள் மேல் நாங்கள் கோபத்தை காட்டினோம். அம்பு விட்டு உங்களை தாக்கினோம். அப்படியிருக்கையில், எப்படி உங்கள் ப்ராணன் தப்பியது?. யார் உங்களை காப்பாற்றியது?. நீங்கள் இந்த போரில் எப்படி வென்றீர்கள்? – என்றனர் பரத ஷத்ருக்னர்கள்.

**பூர்வத³ புண்ய ப்ரபா⁴வத³ காரண**
**தாயிக³ர்ப்ப⁴த³ புண்யதி³ந்தே³**
**தே³வ ரகு⁴ராமரு படெ³த³³ காரணதி³ந்த³**
**ஆயுஷ்ய மிகி³லாது³வெந்த்³ரு ||280**

முற்பிறவியில் செய்த புண்ணியத்தின் காரணமாக மற்றும் எங்களின் தாயின் கர்ப்பத்தின் காரணமாகவே மற்றும் ஸ்வாமியான ரகுராமன் எங்களை பெற்ற காரணத்தினால் எங்களின் ஆயுள் இன்னும் இருக்கிறது (வளர்ந்திருக்கிறது) – என்றனர் லவ குஷர்கள்.

**பா³லரு பே³காத³ ஆனெகுது³ரெ ஏரி**
**தே³வ லக்ஷ்மண ரத²வேரி**
**தே³வி ஜானகி ஹொன்னனந்த³ணவனு ஏரி**
**கூடெ³ தெரளிது தம்மத³ண்டு³ ||281**

அந்த சிறுவர்கள் யானை, குதிரைகளில் ஏறி, தேவனான லக்ஷ்மணனன் தன் தேரில் ஏறி, தேவியான ஸீதாதேவி பொன் பல்லக்கில் ஏறி புறப்பட, அவர்களுடன் அந்த சேனைப் படையினர் புறப்பட்டனர்.

**த³ண்டு³ ஸஜ்ஜாத³வு தம்மொளெ கரெத³வு**
**ப³ந்த³ரயோத்⁴யா பட்டணகெ**
**அந்து³ அயோத்⁴யெய புரத³னாரேரெல்ல**
**தந்த³ரு எது³ரு ஆருதிய ||282**

சேனை புறப்பட்டு வேகமாக வந்தது. வந்து சேர்ந்தது அயோத்யா பட்டணத்திற்கு. அன்று அயோத்யா பட்டணத்தின் பெண்கள் அனைவரும், எதிரில் வந்து ஆரத்தியை எடுத்தனர்.

**சந்த³த³ ஸோட³ர நிவாளிஸி ஹாகோரு**
**மங்க³ளாரதிய மாடோ³ரு**
**ராம ஸீதெயரு இப்³ப³ரொந்தா³த³ரு**
**ஸிம்ஹாஸனவ ஏரித³ரு ||283**

மிகவும் அற்புதமாக த்ருஷ்டியை கழித்து, மங்களாரத்தியை எடுத்தனர். ஸ்ரீராம ஸீதை இருவரும் ஒன்றானார்கள். ஸிம்ஹாஸனத்தில் ஏறினார்கள்.

**நோடி³த³ நாரேரு எல்லரு ஆகி³ன்னு**
**ஸந்தோஷவனெ படு³வரு**
**மச்சாவதார ப³ந்த³ மலெவொரக்கஸஹர ப³ந்த³**
**ஸ்ருஷ்டினாளுவ தூ³ரி ப³ந்த³ ||284**

இந்த அற்புத காட்சியைப் பார்த்த அனைவரும் மிகவும் மகிழ்ச்சியையே அடைந்தனர். மத்ஸ்ய அவதாரி வந்தான். எதிர்த்து நின்ற அசுரர்களைக் கொன்றவன் வந்தான். ஸ்ருஷ்டியை செய்பவன், அச்சாணியானவன் வந்தான்.

**மத்தெ பூ⁴மி ஹொத்தா கூர்ம ப³ந்தா³னெந்து³**
**ஹெச்சின கா¹ளிஹிடி³த³ரு**
**வராஹாவதார ப³ந்த³ ஹிரண்ய ஸம்ஹார ப³ந்த³**
**ஜக³த³ ரக்ஷக ஹரிப³ந்த³ ||285**

பூமியை தாங்கிப் பிடித்த கூர்மவாதாரி வந்தான் என்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். வராக அவதாரி வந்தான். ஹிரண்யாக்ஷனைக் கொன்றவன் வந்தான். உலகத்தை காத்த ஹரி வந்தான்.

**ஹரதி³ ஜானகிதே³வி அரஸு ப³ந்தா³னெந்து³**
**பி³ருதி³ன கா¹ளிஹிடி³த³ரு**
**கந்தா³ர லவகுஶர கதெ²ய கேளித³வரிகெ³**
**ப³ஞ்ஜெதனவு ஹிங்கு³வுது³ ||286**

சிறந்தவளான ஜானகிதேவியின் அரசன் வந்தான் என்று மிகவும் மகிழ்ச்சி அடைந்தனர். இப்படிப்பட்ட சிறந்த லவகுஷர்களின் கதையை கேட்பவர்களுக்கு, புத்திர ஸந்தானம் கிடைக்கும்.

**எந்தெ³ந்தி³கு³ முத்தெதெ³தனவு ஸ்தி²ரவாகு³வுது³**
**ஸ்ரீரங்க³ கொடு³வனு விஷ்ணு ஸம்பதிய**
**பா³லரு லவகுஶர கதெ²ய கேளித³வரிகெ³**
**தா³ரித்³ர்யவிச்சின்னவாகு³வுது³ ||287**

என்றென்றும் சுமங்கலித்தன்மை நிரந்தரமாகும். ஸ்ரீரங்கனாதன் மோக்ஷத்தையே கொடுப்பான். சிறுவர்களான லவ குஷர்களின் கதையை கேட்பவர்களுக்கு ஏழ்மை நீங்குகிறது.

**பி³த்துவ பெ³ளெதா⁴ன்ய ஒக்குவ ராஶியு**
**அக்ஷர நயனவு ப³ரலி**
**ருண ஹரியலி தா³ரித்³ர்ய நாஶாக³லி**
**ஸ்ரீஹரி நம்ம ஹ்ருத³யதொ³ளிரலி ||288**

வீட்டில் தானியம் நிறையும். செல்வம் பெருகும். படிப்பு, விவேகம் பெருகும். ருண (பொருட்களின் கடன் மற்றும் தேவ, ரிஷி முதலான ருணங்கள்) தீரட்டும். ஏழ்மை அழியட்டும். ஸ்ரீஹரி நம் ஹ்ருதயத்தில் இருக்கட்டும்.

**ஹொளவனகட்டி கி[3]ரியம்ம மாடி[3]த[3] கதெ[2]யு**
**தா[4]ருணிய மேலெ ஹரியலி**
**கேளித[3] ஜனகெல்ல ஆயுஷ்ய மிகி[3]லாகி[3]**
**ஸுக[2]தி[3]ந்த[3] இரலின்னு ||289**

ஹொளவனகட்டெ கிரியம்மா இயற்றிய இந்த கிருதியானது, பூமியின் மேல் பரவட்டும். இதனை கேட்ட மக்கள் அனைவரின் ஆயுளும் வளர்ந்து, அனைவரும் சுகமாக இருக்கட்டும்.

***

**ஸ்ரீகிருஷ்ணார்ப்பணமஸ்து**

***